உ

சிவமயம்

மைத்திராயணீயோபநிடதம்.

ரு. கசு

இஃது

ஸாமவேதத்தின் ஓர் சாகையின் இறுதியிலுள்ளது.

மூலபாடம்பொழிப்புரைவிசேடவுரைகளுடன்

—(*)—

சிதம்பரம் ப்ரம்மவித்யா பத்திராதிபரான

பரஸமய பஞ்சானன பண்டித பாஞ்சஜன்ய

பிரம்மஸ்ரீ

கு. ஸ்ரீநிவாஸதீக்ஷிதரவர்களால்

வடமொழியிலியற்றப்பட்ட

மைத்திராயணீயஸ்ரீபூஷணம்.

என்ற வியாக்கியானத்திற்கிணங்க

அவர்களாலேயே தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு

—(o)(*)(o)—

தமது

(நடுக்காவேரி) ஸ்ரீஜகத்குருயந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

1900

இதன் விலை அணா 15

முகவுரை.

மைத்ராயணீயவுபநிடதமென்பது ஸாமவேதத்தினோ
ர் சாகையிலுள்ளது. ஐதரேயமுதலிய வுபநிடதங்களைப்போ
ல் இவ்வுபநிடதத்திற்கும் ஓர் சந்நியாசியாலோருரையியற்ற
ப்பட்டிருக்கிறது. அவ்வுரையில்இந்நூற்றெட்டுபநிடதங்களின்
முறையில் படிக்கப்பட்ட உபநிடத வசனங்களிலும்முன்னு
ம்பின்னும்பலவசனங்களதிகமாகக்கிடைக்கின்றன. ஆனால் அ
வ்வுபநிடதத்தின்பெயர்மட்டில் "மைத்ரிஉபநிஷத்" என்வழ
ங்கப்பட்டிருக்கின்றது. சாந்தோக்யம் பிருகதாரண்யகம் முத
லியவுபநிடதங்களில்ஒவ்வொருஉபநிடதங்களில் வந்தவசனங்
களதே முறையில் வேறுபநிடதங்களிலுமமைந்திருப்பது
போலமைந்திருப்பினுமிருக்கலாம். அஃதோர்குற்றமல்ல இந்
நூற்றெட்டுபநிடதமுறையிலமைந்த மைத்ராயணீயோபநிட
தமே எம்மானுரை செய்யப்பட்டதென்றாதலின், அதனைப்
பற்றிய ஈண்டுபிரஸ்தாபிப்பாம—இவ்வுபநிடதம் ஸாமசா
கையைச்சார்ந்ததாகலின் சாந்தோக்யோபநிடதத்தின் மு
றையைச்சிறிதுதழுவி அந்தராதித்யவித்தை எனப்படும் கா
யத்ரீவித்தையை நிரூபிப்பதாய் அக்காயத்ரியினுண்மைப்
பொருள் „அம்புலிசூடியேஎன" வற்புறுத்தி அச்சவிசேஷப்
ரம்மோபாஸனத்தால் எல்லா ஆசிரமிகளும் நற்கதியடையு
ம் வழியைக்குறிக்கின்றது. இவ்வுபநிடதவசனத்தை ஸ்ரீகண்
டசிவாசாரியார் ஸ்ரீமத்ஹரதத்தயோகிகள இவர்களெடுத்து
விசாரித்திருக்கின்றார்கள். வைணவர்களுக்குள் அநேகர்காய
த்ரீவிசாரத்தில் இதன்மந்திரங்களை எடுத்துக்கையாண்டுவந்
திருக்கிறார்கள். நூற்றெட்டுபநிடத கோசங்களில் யாமுரை
யிட்டபாடமன்றி வேறுவகைப்பாடமில்லை. தற்காலத்துச்சில

வைஷ்ணவர்கள் இவ்வுபநிடதத்தில் அதிகபாடவசனங்கள் சிலவிருப்பனவாக இன்றெழுதியவர் முன்னவ்வசனங்களே மைத்ராவருணீயவுபநிடதத்திலிருப்பதாக வெழுதியிருக்கின்றார். முப்பெயர்கொடுத்த முவ்வகைப்பாடங்களுடன் ஒருபநிடதத்தையமைப்பது எவருக்கும் கூடாதவிஷயமாதலால் சுவாமிகளுரையிட்ட மைத்ரியுபநிடதமும், அவ்வைணவர்வழங்கிய மைத்ராவருணீயோபநிடதமும், நூற்றெட்டுபநிடதமுறையில் படிக்கப்படும் இம்மைத்ராயணீயோபநிடதமும், மேல்வரும் மைத்ரேயோபநிடதமும் வேறுவேறென்றேசொலலவேண்டும். ஒன்றற்கொன்று மந்திர வொற்றுமை அவற்றை ஒன்றாக்காதென்று முன்னரே கூறியுள்ளோம். ஆனால்மைத்ராவருணீயமென்ற உபநிடதம்மட்டில் அவர்குறித்திடும் மந்திரங்களன்றி முறையே படிக்கப்பட்டதை எங்கும் கண்டிலேம். அது வேறுமுன்னோர் பரிக்ரஹத்திலும் வந்திலது. அப்பெயரைபுராணங்களிலுங்கண்டோமில்லை. நிற்கஇவ்வுபநிடதத்திற்கு எமக்குக்கிடைத்த ஸ்ரீகோசங்களிற் கண்ட பாடத்தையனுசரித்து எமதொருவியாக்கியானம் வடமொழியிற் செய்யப்பட்டதுண்டு. அதனையே முறைப்படி இங்குதமிழ்மொழிபெயர்த்தோம். இவ்வுபநிடதம்விரிவுற்றதொன்றாதலாலும் பற்பலவித்தைகளின் சாரத்தைச் சங்கிரஹிக்குதொன்றதலாலும் ஞானவைராக்யாதிசாதனங்களைமிகவிரிப்பதொன்றாதலாலும் அவ்யாஜபக்தர்களான அத்வைதசித்தாந்திகளுக்கு இதுமிகவின்றியமையாததாதலாலும் பெரியோர்இதனையேற்று யாமெடுத்தமுயற்சி முற்றுப் பெறுமாறு மங்களவசனங்கூறுவாரென்றெதிர்பார்க்கிறோம்.

சுபம்.

கிரந்தகர்த்தர்.

[illegible]

[illegible]

(०)

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

வகூர்நதிகி தாஜெநூாவாய || ௫ || வூஜாவதிவூர
வணெகாஷெ கிஷூ நாராசெ தெகஸ்ஸ கூநஹியூாய
பஹூிம் வூஜா கவூஜக்ரா கஷெஸவா கவூபஸாவூா
ணஸிவதிஷூரா நா கவஸ்ர நாராசக்ஷெவாசநூெத
காவஸம் வூதிபொயநாயாஹூம் காஸம் வூவிஸாநீதூ
ய ஸவாயமூயாதூாநம் கூஹாவூம் காஸம் வாவிஸதூவ
கெ நாவிஸதூவம்வய ாதூாநம் வூவிஹஜூாவூதூ
யஃ வூாணோவாந ஸூரா நஉதவெநாவூாந ஜதி || ௬ ||
கஸூெபாயசவூூ சதூாசதீஷெதூஷவாவஸ வூாஷெ
யபொயசவாஷம் ஸகூாசெதூஷ வாவஷெஸவாதுநா
யபொயம் ஸூவிஷ உணுயாத வாஷெநவூாவயதூணிஷம்
வாம்ஷெமஷஸஉணுயஷெதூஷ வாவஸசாஷெநாயஷெபாயவீ
காவிதசஜூ்ரதி நிமிரதீகிஷெஷ வாவஸ உஹாஷெந
யஷெயஷெநதாவஸிரா கநவூாவூா வஷவாவஸவூா
நஃ|| ௭ || கஷெ்வாம்ஸம் தயநூாசூஹவதூம் தயநா
ச உவாம்ஸஷெசதயொாம் தராஷெவணஷூூம் வாவூ
கஹூஷணஷூம் ஸவஸஷெஷாயயஃ வஸஷூஹெவாஷி
ஷெவநூாநஷெஸாவூநூகூாவூக்ஷயசஹிஷெவூஸாந
ஷெராவியாயசம்கஃ வஸஷெஷெயெநஹசணும்வவூதெபஷி
ஹசஹூஷெத தஷெஸூஷ வொவெஷா ஹவதிடிஜெதக்ஷக
ணநூாவவியாய ஸஷெணாதி ஸபஷெதூஜ்ரதிஷூுஹதி
ஷெகநம் வொஷம் ஸூணாதி || ௮ || ஸவூாவதஷவம்வ
யாதூாநம் வூவிஹஜூிஷிஷெதா மஹாயாம் சஷெநாசயஃ
ஷூாணஸவிஷெபாஷா ஸஷெவஸதூலம்கஜூஷெதிவயா
வஷெஷாவூஜூஹம்தஷெஜிஷநு கூஷெயவூகூகா
ஷெவூநாயநஸாசீ கம் வாநீசரிவிஷெவாஷிகஃ
வம்வ ஷஸூிஷவி ஷெயாநஜூீஷெவஸீஷூயாணியாநீஸ

[illegible] ॥ ௯ ॥ [illegible] ॥ ௧௦ ॥ [illegible] ॥ ௧௧ ॥ [illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

𑌰𑍂𑌪𑌿𑌤𑍍𑌤𑌿 𑌪𑌶𑍁𑌪𑌤𑌯𑍇 𑌤𑍍𑌵𑍃𑌦𑍍𑌧𑌿𑌨𑌾 𑌵𑌿𑌹𑌿𑌤𑌸𑍍𑌯 𑌸𑌹𑌸𑍍𑌰𑌾𑌕𑍍𑌷
𑌣 𑌹𑌿𑌰𑌣𑍍𑌮𑌯𑍇𑌨𑌾𑌨𑌂 𑌦𑍇𑌵𑍇𑌨𑌯𑍈𑌵𑌾 𑌵𑌿𑌜𑌿𑌜𑍍𑌞𑌾𑌸𑌿𑌤
𑌵𑍇𑌦𑍍𑌯𑌾𑌦𑍇𑌶𑍇𑌷𑍁 𑌸𑍍𑌵𑌾𑌧𑍍𑌯𑌾𑌯𑍇𑌤𑍇𑌭𑍍𑌯𑌃 𑌸𑌾𑌯𑌂 𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌾𑌂
𑌮𑌕𑍍𑌷𑌾𑌯𑌵𑍈𑌸𑌿𑌃 𑌕𑍍𑌷𑍇𑌮𑌂𑌶𑍍𑌰𑍀 𑌪𑌾𑌪𑌾𑌨𑍍𑌯𑌸𑍍𑌵𑌂 𑌶𑍋𑌧𑌨𑌾𑌦𑍇𑌵𑌾
𑌸𑌰𑍍𑌵𑌦𑍋𑌷𑌨𑌿𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌃 । 𑌵𑌿𑌶𑍍𑌵𑌰𑍂𑌪𑌂 𑌹𑌰𑌿𑌣𑌂 𑌜𑌾𑌤𑌵𑍇𑌦𑌸𑌂
𑌪𑌰𑌾𑌯𑌣𑌂 𑌜𑍍𑌯𑍋𑌤𑌿𑌰𑍇𑌕𑌂 𑌤𑌪𑌨𑍍𑌤𑌂 । 𑌸𑌹𑌸𑍍𑌰𑌰𑌶𑍍𑌮𑌿𑌃
𑌶𑌤𑌧𑌾 𑌵𑌰𑍍𑌤𑌮𑌾𑌨𑌃 𑌪𑍍𑌰𑌾𑌣𑌃 𑌪𑍍𑌰𑌜𑌾𑌨𑌾𑌮𑍁𑌦𑌯𑌤𑍍𑌯𑍇𑌷 𑌸𑍂
𑌰𑍍𑌯𑌃 ॥ 𑌇𑌤𑍍𑌯𑌾𑌤𑍍𑌰𑍇𑌯𑌣𑍋𑌪𑌨𑌿𑌷𑌦𑍍𑌵𑌿𑌂𑌶𑍋𑌽𑌨𑍁𑌵𑌾𑌕𑌃 ॥

॥ 𑌸𑍂𑌰𑍍𑌯𑌾𑌯𑌂 𑌶𑍍𑌰𑍀𑌂 𑌹𑍍𑌰𑌾𑌂 𑌹𑍍𑌰𑍀𑌃 ॥

𑌇𑌤𑌿 𑌚𑌾𑌕𑍍𑌷𑍁𑌷𑍋𑌪𑌨𑌿𑌷𑌤𑍍 𑌸𑌮𑌾𑌪𑍍𑌤𑌾 ॥

𑌓𑌂 𑌤𑌤𑍍𑌸𑌤𑍍

——()——

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

சிவமயம்

மைத்ராயணீயவுபநிடதப்

பேருரை

—()—

ஓம் இவ்வுபநிடதம் வேதங்களுட் சாமவேதத்தின் ஓர்சாகையில் மைத்ராயணீயம் என்ற பெயருடன் மேலேசொல்லப்போகின்ற வரலாற்றின்படி மைத்ராயணீயமுனிவர் முகமாய் வெளிப்பட்டு உலகத்தாரை அனுக்கிரகிக்குமருண்மயவேதாந்தமாதலின் அதனை அதிகவிரிவின்றிவியாக்கியானிப்போம்.

அவதரணிகை.

சாதனங்கள் கூடினசீடனுக்கும் சித்தனான உபாத்தியாயனுக்கும் அன்யோன்ய சம்வாதவியாஜத்தால் எல்லாவித்தைகளும் தோன்றுவது சம்பிரதாயமும் உசிதமுமேயாதலால் அம்முறைபற்றியே இவ்வித்தையும் முதலில் சீடன் குணங்களை நிரூபித்துக்கொண்டே யவதரிக்கின்றது.

𑌬𑍃𑌹𑌦𑍍𑌰𑌥𑍋 𑌵𑍈 𑌨𑌾𑌮 𑌰𑌾𑌜𑌾 𑌰𑌾𑌜𑍍𑌯𑍇
𑌜𑍍𑌯𑍇𑌷𑍍𑌠𑌂 𑌪𑍁𑌤𑍍𑌰𑌂 𑌨𑌿𑌧𑌾𑌪𑌯𑌿𑌤𑍍𑌵𑍇𑌦
𑌮𑌶𑌾𑌶𑍍𑌵𑌤𑌂 𑌮𑌨𑍍𑌯𑌮𑌾𑌨𑌃 𑌶𑌾𑌰𑍀𑌰𑌂 𑌵𑍈𑌰𑌾𑌗𑍍𑌯
𑌮𑍁𑌪𑍇𑌤𑍋𑌽𑌰𑌣𑍍𑌯𑌂 𑌨𑌿𑌰𑍍𑌜𑌗𑌾𑌮 என்று

(இ—ள்) பிருகத்ரதனென்ற அரசன் ராஜ்யத்தில் தன் மூத்தகுமாரனை வைத்து இந்தசரீரமசாச்வதமென்றெண்ணி வைராக்கியத்தையடைந்து காட்டுக்குச்சென்றான்.

(வி—ரை) பிருகத்ரதனென்ற அரசன் = மகாப்பிரசித்தனான அரசன்; இட்சுவாகுவம்சத்திற்பிறந்தவன் (கிருகஸ்தனுக்குவிதிக்க

ப்பட்ட ஸமஸ்தகன்மங்களையும் செய்துமுடித்து அதனால் மனத்தூய்மையடைந்து) ஜ்யேஷ்டகுமாரனை வைத்து = மூத்தகுமாரனென்றதால் மற்றயகுமாரர்களுக்கு ஆண்டோர்மையுக்கத்திவ் அரசாங்க பாத்தியமில்லை என்பது ஏற்பட்டது. இந்தசரீரம் = சைத்திகன் மகாராஜன் வீரன்முதலிய பற்பல நற்புகழமைந்த சரீரம்; அசாச்வதம் = ஓர்நாழிப்பொழுதில்மாளத்தக்கதென, எண்ணி = ஆலோசித்துப்பார்த்துத்தெளிந்து, வைராக்கியத்தை = இருவினைப்பயன்களில் பற்றின்மையை பெற்று, காட்டுக்குச்சென்றான் = வானப்பிரஸ்தாச்ரமத்தைப்பெற்றான்; இதனால் வானப்பிரஸ்த்தாச்சிரமத்துக்குமுக்கியாதிகாரம் வைராக்கியமேயென்றேற்பட்டது.

அவதரணிகை

இனி வனவாசிகளுக்குசிதமான நடையைக்கொண்டாரென குறிக்கின்றார்.

> தத்ர பரமம் தப ஆஸ்தாயாதித்யமீக்ஷமாண:
> ஊர்த்வபாஹுஸ்திஷ்டதி

(இ—ள்) அங்கு பரமமான தபஸ்ஸைச்செய்துகொண்டு சூரியனைப்பார்த்துக்கொண்டு உயர்த்தியகையையுடையவனாய் இருக்கின்றான்.

(வி—ரை) அங்கு = மனிதர்களின் நடையற்றுத்தவஞ்செய்தற்கேற்ற சாதனமற்றும் குன்றாச்சிரமவிலக்கணம் பொருந்தியவிடத்து; பரமமான = முக்கியமான வனவாசிகளுக்குப்பல்வகைத்தவமுறைகள் விதிக்கப்பட்டிருப்பினும் ஐந்தீ நடுவே யருந்தவம் புரிதலே பரமுடிவல்லோர் புகழ்ந்துரைத்தவமாதலால் அதனைச் சிறந்ததெனக்கூறுமென்க. சூரியனைப் பார்த்துக்கொண்டு = ஐந்தீநடுத்தவம் புரிவோர்க்கு முந்தீமுதற்றீயிலை நான்குளவேனும்ஐந்தாந்தீ ஆகாயமணியாகிய சூரியனே என்பது ஆன்றோர் யோகநூலகளிற் கணித்தாராதலினெனக. உயர்த்தியகையையுடையவனாய் = யோகத்திற்குரியபலவகையாசனங்களில் ஓர் ஆசனத்தின்குறி அதனால்யோகிகளுக்கு ஓர்வித ஆசனமின்றியமையாதென்றேற்பட்டது கைகளைத்தூக்கிச் சிரமேலக்கூப்பிவைத்து என்பதுகருத்து. இந்த

றியவேண்டியமுறையிது:-அரசர்களுக்கு உரியவாச்சிரமங்களில்இ றுதியுள்ளாயச்சிரமம் வாநப்பிரஸ்தமேயாதலின்ஞானசாதனமா னவவ்வாச்சிரமத்தை இளவேனிற்பர்வத்தே ஏற்குமாறுநூல்கள்வி திக்கின்றமையால் அம்முறைபற்றி அவ்வாச்சிரமத்தை அக்கால த்தே பெற்ற அவ்வரசர் பிரான் அக்காலத்திற்குரிய ஐந்தீவடுத் தவத்தையே கைக்கொண்டான், அதன்மேல் முறைப்படி அவ்வ க்காலங்களுக்கேற்ற வாறு நற்றவவழிகளை நாடினானென்பதற்கு இம்ஃத்துவலக்கணம்: "க்³ரீஷ்மே பஞ்சதபாஸ்து ஸ்யாத் வர்ஷாஸ்வப்⁴ராவகாஶிக꞉ । ஆர்த்³ரவாஸாஸ்து ஹேமந்தே க்ரமேண வர்த⁴யம்ஸ்தப꞉ ॥ = கிரீஷ்மகாலத்தில் ஐந்தக்னிகளின் நடுவேநின்றும் வர்ஷாலங்களிலாகாயவெளியிலிருந்தும், பனிகாலங்களில்நீரில்நின் றும் மெள்ளமெள்ளத்தவங்களைவிருத்திசெய்யவேண்டுமென்றும்" சாஸ்திரமுறையமைந்திருத்தலாலெனக.

அவதரணிகை.

இக்கடுந்தவப்பயனுயவ்வரசருக்கு ஓர்நல்லாசிரியன் கிடை த்தானென்கின்றார்.

அதோ ஸஹஸ்ரஸ்யாந்தே முநிமாஜகாமாக்³நிரிவ
அதூ⁴மகஸ்தேஜஸா நிர்த³ஹந்நிவாத்மவித்³ ப⁴க³வாஞ்சா²
காயந்ய꞉ ।

(இ—ள்) ஆயிரம்சென்றபிறகு புகையில்லாத நெருப் பைப்போல் தேஜஸ்ஸால் கொளுத்துவார்போல் பிரும்மநி ஷ்டரான பகவான் சாகாயன் யமுனிசமீபத்தேஅடைந்தார்

(வி—ரை) ஆயிரம் =ஆயிரம்வருடங்கள், அல்லதாயிரம் மாதங்களல்லது ஆயிரம்தினங்களென்றும்பொருள்கூறலாம். பன் னீராயிரம் தினங்களென்றுமிதற்கோர் பொருளுண்டு. கிருச்சி ரமென்ற தவம் பன்னிரண்டுநாட்களிலும், சாந்திராயணமென்ற தவம் முப்பதுநாட்களிலும், மகாவிரதமென்றதவம் ஒருவருடத்தும், நியதகாலமென்றதவம் ஒவ்வொருதினத்தி லும் பூர்த்தியாமாகலாலும் இங்குஆயிரமென்றுமாத்திரம் குறி

க்கப்பட்டமையானும் அங்ஙனம் பொருளுரைத்தோமென்க. அதாவது அவர்சங்கல்பம் பூர்த்தியாங்காலத்தென்பது சொல்லப்பட்டதாய்க்கொள்ளவேண்டும். புகையில்லாதநெருப்பைப்போல் தேஜஸ்ஸால் க்கொளுந்துவாரென்பது அம்மாமுநிவரின் ஓர்த்தவப்பயனும். பிரும்மநிஷ்டரானவென்பது = குருவுக்குரிய இலக்கணத்தைக்குறித்தது; பகவான் = ஞானவைராக்கியங்களையுடையவர் அக்குணமுடைய பெரியோரிடத்தே அச்சொல்விநியோகம்மிகவிருத்தலாலென்க, சமீபத்தே அடைந்தார் = அவனையனுக்கிரகித்தற்காக பரமேச்சுவரனாற்சோதிக்கப்பட்டு அடைந்தார். எ—று

அவதரணிகை.

இனியவருக்குள்ளஇயற்கநுனையைக்குறிக்கின்றார்

உத்திஷ்டோத்திஷ்ட வரம் வ்ருணீஷ்வேதி ராஜானமப்ரவீத்

(இ—ள்) எழுந்திரு எழுந்திரு வரத்தைக்கேட்டுக்கொள்ளென அரசனைப்பார்த்துச்சொன்னார்

அவதரணிகை.

இனிஆசிரியர் கருணைகொண்டபொழுது அவரிடத்திற்சீடர்நடக்கவேண்டியமுறையைக்குறிப்பாராய் அரசன் நடையைக்குறிக்கின்றார்.

ஸ தஸ்மை நமஸ்க்ருத்யோவாச பகவந்நாஹமாத்மவித் த்வம் தத்த்வவிச்சுஶ்ரும வயம் ஸ த்வம் நோ ப்ரூஹீதி

(இ—ள்) அவன் அவருக்கு நமஸ்காரம்செய்துசொன்னதாவது ஓபகவானே நானாத்மவித்தல்ல; நாங்கள் வெகுவாய் நீர் தத்துவவித்தென்றுகேள்விப்பட்டிருக்கின்றோம்; அந்தநீரெமக்குச்சொல்லவேண்டுமென்று

(வி—ரை) அவன் = குருகுலவாசமுணராதிருந்த அவ்வரசன்; அவருக்கு = இப்படிப்பட்டதுக்கருணைகொண்ட முனிவருக்கு

நமஸ்காரம்செய்து = நமஸ்காரம் முதலிய வழிபாடுகளை முறைப்படிமுடித்து; சொன்னது = வேண்டிக்கொண்டது. ஆத்மவித் = ஆத்மாஇஃது அநாத்மாஇஃதென்றபாகுபாடை முற்றுமறிந்தவன். அஃதறியாதவந்தானென்பது இவனை ஆசிரியனடிபணியச்செய்தபண்பாம். நீர்தத்துவவித் = ஆன்மாவின் உண்மையிலக்கணமறிந்தவர்; சொல்லவேண்டும் = உபதேசிக்கவேண்டும்.

அவதாரணிகை.

இனிசீடன் புத்தியைப்பரிக்ஷித்ததற்காக ஆசிரியர் முறையை அம்முனிவரனுஷ்டிக்கின்றாரென்கின்றார்.

𑌏𑌤𑌦𑍍𑌵𑍃𑌤𑍍𑌤𑌂 𑌦𑍁𑌃𑌶𑌕𑌂 𑌮𑌾 𑌪𑍃𑌚𑍍𑌛 𑌪𑍍𑌰𑌶𑍍𑌨𑌮𑍍
𑌐𑌕𑍍𑌷𑍍𑌵𑌾𑌕 𑌅𑌨𑍍𑌯𑌾𑌨𑍍 𑌕𑌾𑌮𑌾𑌨𑍍 𑌵𑍃𑌣𑍀𑌷𑍍𑌵𑍇𑌤𑌿

(இ—ள்) ஓய் இட்சுவாகுவம்சத்திற்பிறந்தஅரசனே இவ்விதமசக்கியமான கேள்வியை முதலில்க்கேட்கவேண்டாம் மற்றையகாமங்களைக் கேட்டுக்கொள்.

அவதாரணிகை

மேல்சீடன்மனதினுறுதியைக்காட்டுகின்றார்

𑌶𑌾𑌕𑌾𑌯𑌨𑍍𑌯𑌸𑍍𑌯 𑌚𑌰𑌣𑌾𑌵𑌭𑌿𑌮𑍃𑌶𑍍𑌯𑌮𑌾𑌨𑌃
𑌰𑌾𑌜𑍇𑌮𑌾𑌂 𑌗𑌾𑌥𑌾𑌂 𑌜𑌗𑌾𑌦

(இ—ள்) சாகான்னியருடைய பாதங்களில்நமஸ்க்காம்செய்துகொண்டு அரசனிந்தக்காதையைச்சொன்னார்.

(வி—ரை) ஆசிரியனடிபணிந்து அவனையேசரணமென்றடைந்துதமக்குச் சரீரத்திலுண்டாகும் வைராக்கியத்தைகுறிப்பாராய் மூதறிஞர் முகம் முன்னரேகேட்டபடி எல்லாவிருப்பங்களுக்கும்ஏகபாத்திரமாகியசரீரத்தைநிந்தித்துசரீரபவிலக்கரணஆத்துமஸ்வரூபத்தை ஒன்றனையேதாம்கருதியிருப்பாரெனஆசிரயாகத்திற்

கொள்ளுமாறு தமது தாழ்ந்த நிலைமையைச் சரீரசம்பந்தத்தால் வந்ததெனவறிந்து அவரிடம் தெரிவிக்கின்றார். காதை யெனபது செய்யுள்கள் போலமைந்தயாப்பு அவைகளைத் தெண்டகமென்றும் சொல்வதுண்டு.

ை--ஞ

அவதாரணிகை.

அக்காதைகளாவன

பகவந்நஸ்திசர்மஸ்நாயுமஜ்ஜாமாம்ஸஶுக்ரஶோ
ணிதஶ்லேஷ்மாஶ்ருதூஷிகாவிண்மூத்ரவாதபித்தக
பஸங்காதே துர்கந்தே நிஸ்ஸாரேऽஸ்மிஞ்சரீரே
கிம் காமோபபோகை:

எ--ஞ

(இ--ள்) ஓபகவானே எலும்பு தோல நரம்பு சீழ் மாம்ஸம் சுக்லம் சோணிதம் கோழை கண்ணீர் இவைகளாலே கெடுக்கப்பட்டதும் மலம் மூத்திரம் வாதம் பித்தம் கபம் இவைகளின் கூட்டமாயுள்ளதும், துர்க்கந்தம் நிறைந்ததுமான சாரமில்லாத இந்தச்சரீரத்தில் காமோப போகங்களால் பிரயோஜனமென்ன.

இரண்டவதுகாதை

காமக்ரோதலோபமோஹபயவிஷாதேர்ஷ்யே
ஷ்டவியோகாநிஷ்டஸம்ப்ரயோகக்ஷுத்பிபாஸா
ஜராம்ருத்யுரோகஶோகாத்யைரபி
ஹதேऽஸ்மிஞ்சரீரே கிம் காமோபபோகை:|

(இ--ள்) காமம் குரோதம் லோபம் மோகம் விஷாதம் ஆசூயை இஷ்டத்தைவிடுதல் அநிஷ்டத்தைஅடைதல் பசி தாகம் கிழத்தனம் மிருத்யு ரோகம் சோகம் இவைமுதலியவைகளால் நிறையப்பட்ட சரீரத்தில் காமோபபோகங்களால்பிரயோஜனமென்ன.

(வி—ரை) காமம் குரோதம் லோபம் என்றெடுத்தது மாதம் அக்குறுபலட்சணமே. மாத்சரியமென்றகுணம் அசூயையென்று மேலேசொல்லப்படும். அது பிறர்பெருமைபொறுமையல்ல. மற்றுகாரணமின்றி எவர்குணங்களையும் பொருக்காத்தன்மை. இஷ்டத்தை விடுதல நிஷ்டத்தையடைதல் என்பன துக்கவேதுக்கள்; சோகமென்பது ரோகாதிகளால் வரும்தாத்காலிகதுக்கம்.

மூன்றுவதுகாதை

ஸர்வஞ்சேதம் க்ஷயிஷ்ணு பஶ்யாமோ யதேமே தம்ஶ
மஶகாதய: த்ருணவனஸ்பதயோத்பூத
ப்ரத்வம்ஸிந: எ—து

(இ--ள்) இவைகளை எல்லாம் காட்டீக்கள் கொசுக்கள்முதலியவற்றைப்போலும் புல்லைப்போலும் நாசமடைவதாய்உண்டாய்மாள்வதால்க்ஷயித்துப்போவதே என்றறிந்தோம்

(வி--ரை) காட்டீக்களும்கொசுக்களும்—ஒவ்வொருகாலங்களில் அளவுகடந்துண்டாய் மாண்டுபோவதும் சிலபுற்கள் அற்பகாலமிருந்துநசிப்பதும் நமக்குபிரத்தியட்சமாதலாலென்க.

நான்காவதுகாதை

கிமேதைர்வா பரே(அ)ந்யே மஹாதநுர்த-
ராஶ்சக்ரவர்த்திந: கேசித் ஸுத்யும்நபூரித்யும்ந-
இந்த்ரத்யும்நகுவலயாஶ்வயௌவநாஶ்வவத்ர்யஶ்வாஶ்வ-
பதி ஶஶபிந்துஹரிஶ்சந்த்ராம்பரீஷந
நக்துஸர்யாதியயாத்யநரண்யோக்ஷஸேநா-
தயோ மருத்தபரதப்ரப்ருதயோ ராஜா-
நோ மிஷதோ பந்துவர்கஸ்ய மஹதீம் ஶ்ரியம்
த்யக்த்வா(அ)ஸ்மால்லோகாதமும் லோகம் ப்ரயாந்தி

(இ—ள்) இதுகளைச்சொல்வதாலென்னபிரயோஜனம் எமக்கு முந்தியிருந்தமகாபராக்கிரமசாலிகளான சக்கிரவர்த்திகளநேகரும் சுத்யும்னன், இந்திரத்யும்னன், குவலயாசுவன் யுவனாசுவன், வத்திரியாசுவன் அசுவபதி சசிபிந்து அரிச்சந்திரன் அம்பரீஷன் அநநுக்தன் சுவர்யாதி சர்யாதி அநரண்ணியன் அட்சசேனன் முதலியவர்களும் மேலும் மருத்தன் பரதன் முதலிய சிலராஜாக்களும்பந்துவர்க்கங்கள் விழித்துக்கொண்டிருக்கும்பொழுதே பெரியஐசுவரியத்தை விட்டு இந்தலோகமிருந்துபரலோகத்திற்குப்போகின்றார்கள்.

ஐந்தாவதுகாதை

𑌅𑌥 𑌕𑌿𑌮𑍇𑌤𑍈𑌰𑍍𑌵𑌾 𑌪𑌰𑍇𑌽𑌨𑍍𑌯𑍇 𑌗𑌨𑍍𑌧𑌰𑍍𑌵𑌾𑌸𑍁𑌰
𑌯𑌕𑍍𑌷𑌰𑌾𑌕𑍍𑌷𑌸𑌭𑍂𑌤 𑌗𑌣𑌪𑌿𑌶𑌾𑌚𑍋𑌰𑌗
𑌗𑍍𑌰𑌹𑌾𑌦𑍀𑌨𑌾𑌂 𑌨𑌿𑌰𑍋𑌧𑌨𑌂 𑌪𑌶𑍍𑌯𑌾𑌮𑌃

(இ—ள்) இவைகளால்ந்தானென்னவேவநேகர்கள் கந்தர்வர் அசுரர்யட்சர்ராக்ஷதர்பூதங்கள்க்ஷுத்திரகணங்கள் பிசாசங்கள் உரகர் கிரகங்கள் இதுமுதலானதுகளுக்கும் கட்டைப்பார்க்கின்றோம்.

ஆறுங்காதை

𑌅𑌥 𑌕𑌿𑌮𑍇𑌤𑍈𑌰𑍍𑌵𑌾𑌽𑌨𑍍𑌯𑌾𑌨𑌾𑌂 𑌶𑍋𑌷𑌣𑌂 𑌮𑌹𑌾
𑌰𑍍𑌣𑌵𑌾𑌨𑌾𑌂 𑌶𑌿𑌖𑌰𑌿𑌣𑌾𑌂 𑌪𑍍𑌰𑌪𑌤𑌨𑌂 𑌧𑍍𑌰𑍁
𑌵𑌸𑍍𑌯 𑌪𑍍𑌰𑌚𑌲𑌨𑌂 𑌸𑍍𑌥𑌾𑌨𑌂 𑌵𑌾 𑌤𑌰𑍂𑌣𑌾𑌂 𑌨𑌿𑌮𑌜𑍍𑌜𑌨𑌂
𑌪𑍃𑌥𑌿𑌵𑍍𑌯𑌾𑌃 𑌸𑍍𑌥𑌾𑌨𑌾𑌦𑌪𑌸𑌰𑌣𑌂 𑌸𑍁𑌰𑌾𑌣𑌾𑌂
𑌸𑍋𑌽𑌹𑌮𑌿𑌤𑍍𑌯𑍇𑌤𑌦𑍍𑌵𑌿𑌧𑍇𑌽𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 𑌸𑌂𑌸𑌾𑌰𑍇 𑌕𑌿𑌂 𑌕𑌾𑌮𑍋𑌪𑌭𑍋𑌗𑍈𑌃

(இ—ள்) இவ்வளவு சொல்லியும் என்னப்பிரயோஜனம் அநேகசமுத்திரங்கள் வற்றவும், மலைகள்கொறுங்கவும், துருவனிடம் விட்டகரவும், மரங்கள்நிலைகுலையவும், பூமிஅமிழ்

தவும் தேவர்களிடம் விட்டோடவும் (நேருதலால்) நானிது என்ற ஸம்ஸாரத்தில் காமபோகங்களால் என்னபயன்.

(வி—ரை) நானிதுவென்ற = அநாத்மாவிடத்தாத்மாவென்று பிரமத்தாலமைந்த, ஸம்ஸாரத்தில் = இதுவே ஸம்சாரமாதலாலெனக.

அவதரணிகை

இங்ஙனம் காதைகளைமுடித்து குருவைச்சரணாகதியடைந்தமுறையைக்காட்டுகின்றார்.

யைரேவாஶ்ரிதஸ்யாஸக்ருதிஹாவர்தநம் த்ரு
ஶ்யத இத்யுத்தர்த்துமர்ஹஸீத்யந்தோதபா
நஸ்தோ பேக இவாஹமஸ்மிந் ஸம்ஸாரே பகவ
ஸ்த்வம் நோ கதிஸ்த்வம் நோ கதிரிதி

(இ—ள்) எந்ததுக்கங்களால் பிடிபட்டவனுக்கே ஓயாது இங்கேஇருக்கும்படியாய் நேரிடுகின்றது. ஆகையாலென்னை நிருத்தரணம் செய்யவேண்டும். கிணற்றிற்கிடக்குந்தவளையைப்போல் யானிந்தசம்சாரத்தில் இருக்கின்றேன். ஓபகவானே நீயே எனக்கு கதி; ஓபகவானே நீயே எனக்கு கதி.

இங்ஙனம் —மைத்ராயணீயோபநிடதத்தில்
முதல்பிரபாடகம் பூர்ணமாயிற்று.

இரண்டாம்பிரபாடகம்.

அவதரணிகை.

இனி குருபிரஸாதத்தைக்குறிக்கின்றார்.

அத பகவாஞ்சாகாயந்ய: ஸுப்ரீதோப்ரவீத்
ராஜாநம் மஹாராஜ ப்ருஹத்ரதேக்ஷ்வாகுவம்ஶ

உபநிஷத்வித்யா

த்4வஜ ஶீக்4ரமாத்மஜ்ஞ: க்ருதக்ருத்யஸ்த்வம் மரு-
ந்நாம்நோ விஶ்ருதோ(அ)ஸீதி அயம் வாவ க2ல்வாத்மா
தே கதமோ ப4க3வந்நிதி தம் ஹோவாச

(இ—ள்) இனி பகவான் சாகாயன்யர் ப்ரீதியுடன் ராஜாவைப்பார்த்துச்சொன்னதாவது:—ஓ மகாராஜ இட்சுவாகுவம்சத்தின் கொடிக்குத்தலையாயுள்ளவனே பிருகத்ரத, நீ ஆத்மாவையறிந்தமையால் கிருதகிருத்தியன்; மருத் என்பவனுக்கு ப்ரஸித்தனை (புத்திரன்) ஆனாய்; இவனல்லவோ உனதாத்மா; எந்த ஸச்சிதானந்தனை உனக்கு நான் நிரூபிக்கவேண்டும் என்றவனைப்பார்த்துச்சொன்னார்.

(வி—ரை) இனி = முற்கூறிய காதைகளைப்பாடினமையால் வீடனுக்கு வேண்டிய வைராக்கியமிருக்கிறதென ஆசிரியனறிந்த பிறகு; இட்சுவாகுவம்சத்தின் கொடிக்குத்தலையாயுள்ள = இட்சுவாகுவம்சத்தின் விஜயத்துவஜமாயுள்ளவனிவன்பிதா அவனுக்குஇவன் தலையென்றமையால் இவனே இக்குலத்திற்கு உரியபெரியோன் என்றேற்பட்டது; ஆன்மாவையறிந்தமையால் கிருதகிருத்தியன் = எவன் ஆன்மாவையறிவான், அறியவிரும்புவான், அவன் உலகத்திற் கிருதகிருத்தியனென்று (ய: க்ருதா[illegible] வீதஶோக:) ஒருவனே கிருதார்த்தனாகிறான். சோகந்தொலைந்து என்றுவேதங்கள் கூறிநிற்றலாலென்க; மருத் = அவன் இட்சுவாகுவம்சத்தில் ஓர் பெரியமகாராஜன்; அயன் ப்ரம்மவித் (நாஸ்யாப்3ரஹ்மவித் குலே ப4வதி) இவன்குலத்தில் பிரம்மவித்தல்லாதவன் பிறக்கமாட்டான் என்று சுருதி கூறுதலால் உனக்கு இந்தப்ரம்மவித்தைவாய்த்ததென்பதுபொருள்; இவனல்லவோ உனதாத்மா = இவன் நானென அனுபவிக்கப்படும் பொருள்; ஆத்மா = அவ்விதம் அனுபவிக்கும் பலபொருள்களில் எவ்விதவிலக்கணமுடையவன் இப்பொழுது உனக்குபதேசிக்கவேண்டியவன். அவன் ஸர்வரூபனாதலால் உனக்கு எந்தஉருவத்துடன் அவனை நிரூபிக்கவேண்டுமென்பது இதன்கருத்து— அநேகஜன்மஸம்சித்தமான தேகாபிமானத்தையறிந்தே அவனை நிகாரத்திற்கேற்

வாது ஸாலம்ப யோகத்தையுபதேசிக்கவேண்டுவது நியாயமாத லால் ஆசிரியனங்ஙனங்கூறினரென பிரம்மவித்தைமீண்டுமெதனைக் குறித்து வியக்தமையால் அஃது கூறியது கூற்றாகாது.

அவதரணிகை.

மேலேபொதுவாக ஆத்மா பிரத்தியகாத்மஸ்வரூபமே என்று உபதேசிக்கின்றார்.

य एष बाह्यावष्टम्भेनोर्ध्वमुत्क्रा
न्तो व्यथमानोऽव्यथमानस्तमः प्रणुद
त्येष आत्मेत्याह भगवानथ य एष
संप्रसादोऽस्माच्छरीरात्समुत्थाय परं
ज्योतिरुपसंपद्य स्वेन रूपेणाभि
निष्पद्यत एष आत्मेति होवाचैतदमृ
तमभयमेतद्ब्रह्मेति ॥

(இ—ள்) எவன் வெளிப்பொருளைக்கைக்கொண்டுமே லே கிளம்புவானாய்த்துக்கப்படாதவனும் துக்கப்படாதவனும் தமஸ்ஸைப்பிரேரிக்கின்றானோ, இவனாத்மாவென்றார்பகவான். பிறகு இந்தச்சரீரத்தினின்று வெளிக்கிளம்பிய எந்த இந்தத்தெளிவு பரஞ்ஜோதிஸ்ஸையடைந்து ஸ்வரூபத்துடன் நிற்கின்றதோ, அது ஆத்மாவென்றார், அது அமிருதமும்பயமும் இது ப்ரம்மமுமாம். (எ—று)

(வி—ரை) எவன் வெளிப்பொருளைக்கைக்கொண்டு = எந்தப் பிராணரூபனை ஆத்மா ஆஸனம் முதலியயோகாங்கங்களைக்கொண்டு போஷ்யமான சரீரத்தைத்தன்வசப்படுத்திமேலேகிளம்புவானும் உள்ளே அடங்குவானுமிருக்கின்றான்; துக்கப்படாதவனும் துக்கப்படாதவனும் = விருப்பத்தால் இருமுறை கூறியதேயன்றி இஃது கூறியது கூற்றல்ல ; தமஸ்ஸை = சரீரத்தையல்லது அஞ்ஞானத்தை; பிரேரிக்கின்றான் = தள்ளுகின்றான்; இவனாத்மாவென்றார்பகவான் = இங்குபகவானென்பது தமதாசிரியனை. அ

வேதமக்கும்சம்மதமென்கின்றார் பிறருளன்பதாகியால். தெளிவென்றது சுத்தஜீவஸ்வரூபத்தை, வெளிக்கிளப்பியதென்பது அதுகன் ப்ரம்மத்தினும்வேறல்லவென ஒதுக்கினறபொருளில்; பரஞ்சோதிஸ்ஸை = உபாதியொழிந்த சொரூபத்தை; அடைந்து = தானெனவறிந்து; ஸ்வரூபத்துடன் = ஸ்வரூபஸத்தாமாத்திரையில்; நிற்கின்றது = நிலைபெறுகின்றது, அதாவது வீடுபெறுகின்றதென்பதுஇதன் பொருள்; அது ஆத்மா: அதுவேசுத்தசைதன்னியம்; அது அமிருதம் = மரணமென்றஉபாதியற்றவஸ்து - பயம் = எவ்விதப் பயமுமற்றது அதாவது உலகவிலட்சணம் சுகச்சொரூபமென்பதுபொருள். இதுபிரம்மம் இது அறியர்ப்பாலதானவஸ்து என்றுபதேசித்தாரென்பது வேதத்தின்வாக்கியம்.

அவதரணிகை.

இனி வித்தியாபரம்பரையைக் குறிப்பாராய் உபதேசிக்க வேண்டியவஸ்துவை நிரூபிக்கின்றார்.

இயம் வாவ ப்ரஹ்மவித்யா ஸர்வோபநிஷத்வித்யா
ச ராஜந் அஸ்மாகம் பகவதா மைத்ரேயேண
வ்யாக்யாதாஹம் தே கதயிஷ்யாமீதி

(இ—ள்) இனி இந்தபிரம்மவித்தையும் எல்லாஉபநிஷத்வித்தைகளும் ஓஅரச எமக்கு பகவான்மைத்ரேயர் உபதேசித்ததை அதனையுனக்குச்சொல்வேன். ஏ--அ

(வி—ரை) இவ்வொருபநிடதத்தை நிரூபித்தால் அதனாலேயே எல்லாவுபநிடதப்பொருள்களுமுபதேசிக்கப்படும் என்றகருத்தால் இவ்வாக்கியத்தை அருளினரெனக.

அவதரணிகை.

இனி பகவான் சாகாயன்னியர் பிரஜாபதி வாலகில்லியரை நோக்கிருபமாய் பகவான் மைத்திரேயரால் தமக்குபதேசிக்கப்பட்ட பிரம்மவித்தையை கதைவழியாயரசருக்குபதேசிக்கின்றார்.

𑌅𑌥𑌾𑌪𑌹𑌤𑌪𑌾𑌪𑍍𑌮𑌾𑌨𑌸𑍍𑌤𑌿𑌗𑍍𑌮𑌤𑍇𑌜𑌸𑌃 𑌊𑌰𑍍𑌧𑍍𑌵-
𑌰𑍇𑌤𑌸𑍋 𑌵𑌾𑌲𑌖𑌿𑌲𑍍𑌯𑌾 𑌇𑌤𑌿 𑌶𑍍𑌰𑍂𑌯𑌨𑍍𑌤𑍇 𑌤
𑌥𑍈𑌤𑍇 𑌪𑍍𑌰𑌜𑌾𑌪𑌤𑌿𑌮𑌬𑍍𑌰𑍁𑌵𑌨𑍍 ‖ எ—து

(இ--து) இனிபாபங்களை ஒழித்தவர்களாய் பூர்ணதேஜஸ்ஸையுடையவர்களாய் ஊர்த்தவரேதஸ்ஸுக்களாய் வாலகில்யாளெனக்கேட்கப்படுகின்றார்கள். அவர்கள் பிறகு ப்ரம்மாவைப் பார்த்துச் சொன்னார்கள் எ---து

(வி—ரை) இனி என்றது மகத்தாகிய பிரம்மவித்தையின் மங்களார்த்தமாய் முதலில்விநியோகிக்கப்படுகின்றது. இதற்குபிறகு என்பதாதி வேறுபொருள் கூறிடின் அஃது இவ்விடம் பொருந்தாது. இரண்டாம்முறை பிறகு என்று எடுத்ததும் கூறியது கூற்றும். பாபங்களையொழித்தவர்களாய் = தவங்களைச்செய்து மனத்தூய்மைபெற்றவராய் (அதனாற்றான்) பூர்ணதேஜஸ்ஸையுடையவராய் = பிரம்மதேஜஸ்ஸை பரிபூர்ணமாய்ப்பெற்றவராய்; அதற்கு ஏதுவைக்குறிப்பாராய் விசேஷிக்கின்றார். ஊர்த்துவரேதஸ்ஸுக்களாய = சந்நியாஸயோகம்பெற்றவராய். அல்லது இந்திரியநிக்கிரகம்செய்தவராய் (உள்ள) வாலகில்லியர்கள் = இப்பேருள்ள முனிவர்கள்; கேழ்க்கப்படுகின்றார்கள் வேதங்களில் (𑌯𑍇 𑌵𑌾𑌲𑌖𑌿𑌲𑍍𑌯𑌾𑌃) எவர்கள்வாலர்களோ அவர்கள் வாலகில்லியர்களென வேதத்திற் கேட்கப்படுதலாலென்க. புராணங்களில் இவ்வாலகில்லியர்களைப்பற்றி இருவகையுற்பத்திசொல்லப்பட்டிருக்கின்றது. பிரம்மதேவனொருசமயம் ஒருத்தமஸ்திரீயைக்கண்டுமயங்க அவர்வீரியம் நழுவி அது இவ்வாலிகில்லிய மூர்த்தியாயிற்றென்பதொன்று. கிருது என்றமகரிஷியின் புத்திரர்களவர்களென மற்றொன்று. அவர்களுக்கு ஜநநகாலத்திலேயே பரமேசுவரகடாட்சவீட்சை கிடைத்தபடியால் அவர்கள் அபரோட்ச ஞானத்தைப்பெற்று ஆதிகாரிகஸ்தானத்ததையடைந்து சூரியமண்டலத்தைவாசமாகக்கொண்டார்கள். அங்ஙனம்தாம்எல்லாமறிந்தவராயினும்பிரம்மவித்யா ஸம்பிரதாயத்தில்பிரம்ம விசாரமின்றியமையாததைப்பற்றி அவர்களுந்தமது பிதாவாகிய பிரம்மதேவரிடத்திற் சென்று முறைப்படி பிரம்ம வித்தையையகிரகித்தாரென இவ்வுபநிடதம் கூ

றுகின்றது. அவர்கள் = முற்குறித்தமுனிவர்கள்; பிறகு = வேதாந்தவிசாரத்துக்குரிய ஸாதனசதுஷ்டயம் கிடைத்தபிறகு; பிரம்மாவைப்பார்த்து = தமது பிதாவாகிய பிரம்மதேவனை விதிப்படிவழிபட்டு; கேட்டார்கள் = விசாரிக்கத்தொடங்கினார்கள். எ—று

அவதாரணிகை

கேட்டமுறையைக்குறிக்கின்றார்

பகவந் ஶகடமிவாசேதநம் ஶரீரம் கஸ்யைஷ
கல்வீத்ருஶோ மஹிமாதீந்த்ரியபூதஸ்ய
யேநைதத்விதம் சேதநவத் ப்ரதிஷ்டாபிதம் ப்ர
சோதயிதா வாஸ்ய கோ பகவந் ஏதத்ஸ்மாகம்
ப்ரூஹீதி எ—று

(இ---ள்) ஓபகவானே ஓர்வண்டியைப்போல சேதனமானது இந்தச்சரீரம். எந்த இந்திரியங்களுக்ககப்படாதபூதத்திற்கு இவ்விதமகிமையுள்ளது; எதுடன் இச்சரீரம் ஸம்பந்தப்பட்டவுடன்சேதனம்போலத்தோன்றுகின்றது; இதற்குஏவுதல் செய்பவன் எவன்; இதை ஓபகவானே எங்களுக்குச்சொல்லவேண்டுமென்று-

(வி—ரை) ஓபகவானே = ஆசாரியலட்சணம் நிறைந்தபெரியோனே; வண்டியைப்போல் = மற்றவனால் அன்றித்தானும் நடக்குமியல்பற்றதான; அசேதநம் = உண்டாயழியும் தன்மையுள்ள ஜடப்பொருள்; எந்தஇந்திரியங்களுக்ககப்படாத = கண்முதலிய புலன்களால்க் காணமுடியாத, எந்தவேறெவ்வழியாலுமறியாத; பூதத்திற்கு = பூதம் என்றது உண்மைப்பொருளை; இவ்விதமகிமை = இச்சரீரத்தைநடாத்துமகிமை; அம்மகிமை விளக்கிக்காட்டுகின்றார் எதுடன் என்பதாதியால். எதுடன் சம்பந்தப்பட்டு இவ்வசேதநச்சரீரம்சேதநம்போல் த்தோன்றுகின்றது. இங்ஙனம் கூறியமையால் சரீரஸ்வரூபத்தை நன்கு தெரிந்துவிலக்கி சேதநனைவேறறிந்தும் அவனை ஸர்வலட்சணங்களுடன் தாமறியாதவராய் அதனைவிரும்பியே ஆசிரியன் முகமாய்க்கேட்கின்றாரென்பது இதனால்

வெளியாயிற்று.; இதற்கு ஏவுதலைச் செய்பவன் = சரீராதி ஸமஸ்தபிரபஞ்சமும் ஏதோ ஒருவஸ்துவினால் பிரேரிக்கப்படுதலால் அப்பொருளினது பூர்ணவிலக்கணம் ஆசிரியரிடம் வினவப்படுகின்றது. நிற்க. ஸூர்யமண்டலத்தில் வாஸம்செய்து காயத்திரீ சித்தர்களான இவ்வாலகில்லியர்கள் தாம் யாதோ ஒருவன் இச்சரீரத்துக்குப்பிரேரகனென்பதைமட்டுமறிந்து அவன் உலககாரணமாவது எவ்வழியென்றே இங்கு வினவுகின்றார்கள். அந்தப்பிரேரகத்துவமென்பது ஸவிசேஷ ஸ்வரூபத்திலேயமையுமாதலின் உபாசநார்த்தமாய் பிராணாதித்தியாதி வித்தைகளுக்குகாயத்திரீவித்தையினிடத்து உபசங்காரத்தைக் காட்டி அக்காயித்திரியின்பொருளும் பரமேசுவரனே என்றுநிரூபித்து, அவ்வுபாஸ்தியே மோட்சசாதனமென்று இவ்வித்தைகாட்டப்புகுதலால், இவ்வித்தையினுபக்கிரமமேஸவிசேஷபிரம்மமாகிய பரமசிவபரமாய் முடிந்தது. அப்பரமசிவனும் இச்சரீரப்பிரேரகனாய் நிரூபிக்கப்படுதலால் அவனேபிரத்தியகாத்மஸ்வரூபனென்றும் இவ்வித்தையின் கருத்தேர்ப்படுகின்றது. ஆகவே இது பிரத்தியக்பிரும்மைக்கியவித்தையாகின்றது. அற்றேல் (யஆத்மநி திஷ்டந் ஆத்மாநமந்தரோ யமயதி யஸ்யாத்மா சரீரம்) = எவனாத்மாவிடத்தினின்று ஆத்மாவைப்பிரேரிக்கின்றான். எவனுக்காத்மாசரீரம் என்று அந்தரியாமிபிராமணம் கூறியவாறுபரமேசுவரனுக்கு ஆன்மாவும் சரீரமாதலால் இங்கு சரீரமென்றபதத்தால் ஆன்மாவும் குறிக்கப்படவே பிரேரகனாகியபரமேசுவரனே இவ்வுபநிடதத்தில் நிரூபிக்கப்பட இதுதுவைத வித்தையாகாதோவெனின் அற்றன்று. வண்டிபோலென்றுபமானங்கூறியமையால் அவயவமுள்ளதும், காரணமாயுள்ளதும், அசேதநமென்று இடமாயுள்ளதும், சேதநம்போலென்று சேதநப்போலியாயுள்ளதும் இங்கு சரீரமென்று எடுத்துக் காட்டப்பட்டமையால் அவ்விதசரீரமான்மாவாகாதாகையின் இது பிரத்தியகாத்மவித்தையேயாமென்க. கடவல்லியில் (யேயம் ப்ரேதே விசிகித்ஸா மநுஷ்யே அஸ்தீத்யேகே நாயமஸ்தீதி சைகே) இச்சரீரம் பிரேதமான பிறகு இவ்வான்மா இருக்கின்றானென்பார் சிலர்; இல்லையென்பார்சிலர்; இச்சமயம்(நிவர்த்திசெய்யத்தக்கது) என்று நாசிகேதஸ்ஸு வினவியதுபோல இங்கு பிரகத்ரதனும் வா

ஸ்கில்லியர்களும் கேட்டது பிரத்யகாத்ம ஸ்வரூபமே என்றது ஆ-ராய்ச்சியுள்ளோருக்க கரதல நெல்லிக்கனி யாமென்க. எ—று.

அவதரணிகை

இனி பிரஜாபதியின் உபதேசத்தைக் குறிக்கின்றார்.

𑌤𑌾𑌂𑌹𑍋𑌵𑌾𑌚 𑌯𑍋𑌹𑌵𑌾𑌵𑍋𑌪𑌰𑌿𑌷𑍍𑌟𑌃
𑌶𑍍𑌰𑍂𑌯𑌤𑍇 𑌗𑌣𑍇𑌷𑍍𑌵𑌿𑌵𑍋𑌰𑍍𑌧𑍍𑌵𑌰𑍇𑌤𑌾𑌃 𑌸 𑌵𑌾 𑌏𑌷 𑌶𑍁𑌦𑍍𑌧𑌃
𑌪𑍂𑌤𑌃 𑌶𑍂𑌨𑍍𑌯𑌃 𑌶𑌾𑌨𑍍𑌤𑍋𑌽𑌪𑍍𑌰𑌾𑌣𑍋 𑌨𑌿𑌰𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌨𑍍𑌤𑍋𑌽𑌕𑍍𑌷
𑌯𑍍𑌯𑌃 𑌸𑍍𑌥𑌿𑌰𑌃 𑌶𑌾𑌶𑍍𑌵𑌤𑍋𑌽𑌜𑌃 𑌸𑍍𑌵𑌤𑌨𑍍𑌤𑍍𑌰𑌃 𑌸𑍍𑌵𑍇 𑌮𑌹𑌿𑌮𑍍𑌨𑌿 𑌤𑌿𑌷𑍍𑌠𑌤𑍍𑌯
𑌨𑍇𑌨𑍇𑌦𑌂 𑌶𑌰𑍀𑌰𑌂 𑌚𑍇𑌤𑌨𑌵𑌤𑍍𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌾𑌪𑌿𑌤𑌂
𑌪𑍍𑌰𑌚𑍋𑌦𑌯𑌿𑌤𑌾 𑌵𑍈𑌷𑍋𑌽𑌪𑍍𑌯𑌸𑍍𑌯𑍇𑌤𑌿॥ எ—து

(இ—ள்.) அவர்களைப் பார்த்துச் சொன்னதாவது எவன் வாக்கால் மேலே யுள்ளவனாக கேழ்க்கப்படுகின்றான் அவன் சுத்தன், பூதன், சூன்யன், சாந்தன், பிராணனில்லாதவன், அநீசன், அநந்தன், அட்சயன், ஸ்திரன், சாசுவதன், அஜன், ஸ்வதந்திரன், தனது மகிமையிலேயேயுள்ளவன், அவனாலே இந்தச் சரீரம சேதநம்போல் பிரதிஷ்டை செய்யப்பட்டது; இவன் தானிதற்குப்பிரேரகனென்று. எ-து.

(வி—ரை.) அவர்களைப் பார்த்து = முற்குறித்தபடி காயத்திரி உபாஸனைசெய்த வாலகில்லியர்களைப் பார்த்துச் சொன்னதாவது (பிரம்மதேவனுபதேசித்ததாவது) எவன் = எந்த பரமாத்மா; வாக்கால் = வேதாதி பிரமாணங்களால்; மேலே யுள்ளவனாக = உலக விலட்சணனாக; கேழ்க்கப்படுகின்றான் = நிரூபிக்கப் படுகின்றான்; அவன் சுத்தன் = சுத்தனானால் உபாதியைவிலக்கி யறியப்படினை; பூதன் = பாபமற்றவன், அதாவது மலஸம்பந்தமில்லாதவனென்று பொருள்; சூன்யன் = அவித்தை முதலான இரண்டாம்பொருளுடனிகழாதவன்; சாந்தன் = எல்லாவற்றிற்கும் உபசங்காரஸ்தானம்; பிராணனில்லாதவன் = பிராணன் முதலியவற்றிற்கு மியவேன் ஸத்தைக் கொடுப்போனாதலின் இவனுக்கு வேறுபிராணன்

இல்லை என்பது கருத்து; இதனால் ஜடங்களுக்கிவனுட்பட்டவனல்லவென்றேற்பட்டது; அங்ஙனம் ஜடங்களுக்குவசப்படாதபோயினும் இவனுக்கு மேலொரு இறைவனுண்டோவென ஆசங்கை நிகழ்வதனை மறுத்தோதுகிறார்; அநீசனென்று = இவனுக்கு மேலோரீசனில்லை என்பததன் பொருள், சோதிக்காதகாலத்து இவன் அநீசனாகத்தோன்றினும் உண்மையை ஆராயுமிடத்து இவன் சுத்தசித்கனனேயென்க. (அதனாலேயே) அநந்தன் = மூவகையளவைகளைக்கடந்தவன்; (ஆகையினாலே) அட்சயன் = சத்தியபதார்த்தமாயுள்ளவனென்று மேகரூபனாய் விகாரமற்றவனென்பது கருத்து. அற்றேல் பிறந்தான், இறந்தானென்பதாதிவ்யவகாரங்கள் எங்ஙனம் கூடுமெனச்சங்கைதோன்ற அது கற்பிதமென நிரூபிக்கிறார் அசனென்று; அசன் = பிறவி முதலியதூர்க்குணங்கள் அணுய்பெறாதவன் (ஆதலாலே) சுவதந்திரன் = கருமம் முதலியவற்றிற்கு வசப்படாதவன்; தனது மகிமையிலேயேயுள்ளவன் = அதாவது ஸர்வாதாரமாயுள்ள இவனுக்குவேறு ஆதாரமில்லை என்பது இதன்கருத்து. இவையெல்லாம் சுத்தனுக்கு லட்சணமென்றால் உடாதியுள்ளவரை இதற்கு விலட்சணமான இலக்கணமே யறியவேண்டியது. இதனால் இச்சகலபிரபஞ்சங்களுக்கும் அவனே அதிஷ்டானமென ஏற்படுதலால் இவற்றிற்கு பிரேரகன் = சத்தையைக் கொடுப்பவன், புலன்களுக்கு விஷயங்களில் பிரவிருத்தியைக் கொடுப்பவன் அவனேயென ஒருவாறு சொற்சுருக்கமாய்வினவுக்கு விடையளிக்கப்பட்டது. எ-று

அவதரணிகை.

இனி யத்தகைய பெரியோனுக்கு இத்தகை யிருமைவருவானேயென சிடர் வினவ மீண்டுஞ்சமாதானமளிக்கின்றார்.

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

𑌚𑍇𑌤𑌨𑌾𑌮𑌾𑌤𑍍𑌰𑌃 𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑍁𑌰𑍁𑌷𑌂 𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌜𑍍𑌞𑌃
𑌸𑌂𑌕𑌲𑍍𑌪𑌾𑌧𑍍𑌯𑌵𑌸𑌾𑌯𑌾𑌭𑌿𑌮𑌾𑌨 𑌲𑌿𑌙𑍍𑌗𑌃 𑌪𑍍𑌰𑌜𑌾𑌪-
𑌤𑌿𑌰𑍍𑌵𑌿𑌶𑍍𑌵𑌾𑌖𑍍𑌯𑌶𑍍𑌚𑍇𑌤𑌨𑍇𑌨𑍇𑌦𑌂 𑌶𑌰𑍀𑌰𑌂
𑌚𑍇𑌤𑌨𑌵𑌤𑍍 𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌾𑌪𑌿𑌤𑌂 𑌪𑍍𑌰𑌚𑍋𑌦𑌯𑌿𑌤𑌾
𑌵𑍈𑌷𑍋𑌽𑌸𑍍𑌯𑍇𑌤𑌿॥ என்று.

(இ—ள்.) எப்படி (என்றுகேட்க) அவர்களுக்குபதேசித்தார். அந்த இவன்சூட்சுமன், கிருகிக்கப்படாதவன், காணப்படாதவன், புருஷனென்றுபேருள்ளவன், அஞ்ஞானபலத்தால் இங்கேயே ஓரம்சத்துடன் சுழல்கிறான் (அவனே) சுஷுப்தியிற்போல புத்தி பூர்வமாய் விழித்துக்கொள்ளுகிறான். இனி எவனிவனதம்சமோ அவன் சேதனமாத்திரன், பிரதி புருஷன்களிலும் க்ஷேத்திரஞ்ஞனாய் ஸங்கல்பம், அத்தியவஸாயம், அபிமானம் இவைகளைக்குறியாயுடையவனாய் பிரஜாபதியாய் உலகங்களைப் பார்ப்பவனாய் (இருக்கின்றான்) அந்தச்சேதனனாலே இந்தச்சரீரம் சேதனம் போலே யமைக்கப்பட்டது. இச்சரீரத்துக்கு அவனே பிரேரகன் என்று. எ—று.

(வி—ரை.) எப்படி = அகண்டசைதன்னியத்திற்கு இக்கண்டாவஸ்தை வந்தது எதனால் என்பது இந்தக்கேழ்வியின்கருத்து. அவர்களுக்குபதேசிப்பதில் பிரஜாபதிதேவன் கூறும் ஆத்மலட்சணத்தை அவன் சூட்சும னென்பதாதியால்க் குறிக்கிறார்; சூட்சுமன் = மேலோக்காய்ப் பார்ப்போருக்கு அகப்படாதவன் (அதனாலேயே) கிருகிக்கப்படாதவன் = புலன்களுக்குவிஷயமாகாதவன்; (அதனாலேயே) காணப்படாதவன் = காணப்படும் பிரபஞ்சத்துக்குவிலட்சணன்; புருஷனென்று பேருள்ளவன் = புருஎன்றசரீரத்தில் வசிப்பதால் புருஷனெனப்படுகிறான்; "𑌪𑌰𑌾𑌤𑍍𑌪𑌰𑌂 𑌪𑍁𑌰𑌿𑌶𑌯𑌂 𑌪𑍁𑌰𑍁𑌷𑌮𑍀𑌕𑍍𑌷𑌤𑍇 = பரத்திலும்பரனாய் புறத்திலேகிடக்கும் புருஷனைக்காண்பானென்று சுருதி கூறுதலால் அஞ்ஞானபலத்தால் = அநாதி அவித்தியாபலத்தால்; இங்கேயே

—இச்சரீரத்திலேயே; சுழல்கிறான் = மேலும் கீழுமாக சுவர்க்க நரகங்களைப் பெறுகிறான்; இதனாலனாதியவித்தையின் மகிமை யினாலேயே இவனுக்கு சுகதுக்கமயபிரபஞ்சம் பந்தமென்று ஏற்பட்டது. அங்ஙனமாயின் அவ்வாத்மாவுக்குச் சரீரமொன்றேதானோ? என ஆசங்கைநிகழக் குறிக்கிறார். ஓரம்சந்தூட னொன்று = பரிபூர்ணமான சைதந்யமே ஒவ்வொருசரீரத்தும் தனித் தனியே இருப்பதுபோல் காணப்படுவதாமென்பது இதன்கருத்து. மேல் இவ்வாத்மா இங்ஙனம் சரீரத்தையடைந்தானென்பது எதனாலறியப்படுகிறதெனின் இவ்வாத்மாசுருபத்தில் சுகமாத்திரனாயிருந்தும் சரீராபிமான சம்பந்தத்தால் துக்கியாய் முடிகிறானென்பதற்கு எது கூறுகிறார். சுஷுப்தியில்போலவென்று = எங்ஙனம் நன்கு துயின்றவன் புதிதாய் ஞானத்தைப்பெற்றவனைப் போல் விழித்துத்தாம் சுகரூபனாய் நித்திரைசெய்ததாகத் தெளிந்துகொள்ளுகிறான், அங்ஙனமே இவனும் ஞானத்தைப்பெறுகிறானென்கிறார் விழித்துக்கொள்ளுகிறான் என்பதால். விழுத்துக் கொள்ளுகிறான் = முன்னிலைமையை அறிந்து கொள்ளுகிறான்; நன்கு நான் துயின்றேனென்று. இங்ஙனம் தன்சரீராபிமானத்தைவிட்டு தனித்துநின்றகாலத்து இவ்வாத்மா சுகரூபனாய் நிற்றலால் இவனது சுரூபம் சுகமேயென்றும், இவனுக்குத்துக்கவேது சரீரசம்பந்தமே என்று மேற்பட்டது. இங்ஙனமாத்மா ஒருவனேயாயின் அவனுக்குச் சரீரங்கள்தோறும் எங்ஙனம் புண்ணியபாபவ்யவஸ்த்தை யுண்டாமெனக்கேட்போருக்குண்டாகும் சங்கையைத் துலைக்கிறார் இனி என்பதாகியால்; எவன் = எவ்வான்மா; இவனதம்சமோ = இவனது, அகண்டனது, அம்சம் = அம்சமென்று உபசரிக்கப்படுவது, அஞ்ஞானதெசையில்த் தோன்றிய ரச்சு சர்ப்பத்தில்க் கயற்றுநிடத்தே கருநாகமீதென நாகத்தின் விசேடதர்மங்களுந் தோன்றுவதுபோல; அவன் சேதனமாத்திரன் = சோதித்தவிடம் அவன் சைதன்னியமாத்திரமாய் நிற்பான் பிரபஞ்சத்தில்த் தோன்றும் பொருள்களில் ஜடமொழியமிஞ்சினவன் தானென்ற வறிவிற்கு விடயமாய் நின்றவன்; பிரதிபுருஷன்களிலும் = ஒவ்வொருசரீரத்திலும்; க்ஷேத்திரஞ்ஞன் = ஜீவனாயுள்ளவன் "க்ஷேத்ரஜ்ஞம்சாபிமாம்வித்தி" சேத்திரஞ்ஞனையும் என்னையறிவாய் என்று கீதையில் காணப்படுதலால் இங்குள்ளக்ஷேத்

திரஞ்ஞன் என்பவன்; அந்தர்யாமி, எனப்பொருள் கொள்ளக்கூடாதோவெனின், அங்ஙனம் பொருள்கொள்ளக் கூடாதென்பதற்கு ஏதுவுரைக்கிருர் சங்கற்பம் என்பதாதியால். சங்கற்பம் முதலிய அந்தக்கரணதர்மங்கள் ஒராஜமரவைப் பலகானமாக்களாக்க காட்டினவென்பது இதனுலேற்பட்டது; மேற்கண்டகுணங்கள் ஈசனிடத்திற் சேராவாகையால் சின்மாத்திரனே உபாதிபேதத்தால் பலவாகத் தோற்றுகிருனெனவும், அவ்வுபாதிகளின் சக்தி விசித்திரமாதலால் சரீரங்கடோறும் புண்யபாபங்கள் நிலைபெற்றிருக்கின்றனவெனவும், கீதையில்பகவான் அந்தக்ஷேத்திரஞ்ஞனையே தன்சுவரூபமாய்க் குறித்தாரெனவும், இதனுலைமைகிறது. அற்றேல் அவனே உபாதிவிசேடத்தால் ஈசுவரனுமாவானோவெனச் சங்கை நிகழாதவழி அவனே அங்ஙனம் என்கிருர்கள் பிரஜாபதி என்பதாதியால்; பிரஜாபதி = பிரம்மதேவன்; உலகங்களைப்பார்ப்பவன் = எல்லாகருமங்களுக்கும் பலத்தைக் கொடுப்பவன்; அந்தச்சேதனனுலே உபாதிவேற்றுமையால் ஜீவேசுவர பேதங்களைப் பெற்ற ஆத்மாவினுலே; இந்தச்சரீரம் = வித்தியாமயமுமவித்தியாமயமுமாயுள்ள சரீரங்கள்; சேதனம்போலே = தேவதத்தன்பரமேசுவரன் என்பதாதி வ்யவகாரங்கள்பெரும்பான்மையில்ச்சரீரத்தே நிகழ்வதால்; இச்சரீரத்திற்கு = இவ்வுலகத்திற்கு; அவனே = ஜீவேசுவர வேற்றுமைபெற்றசைதன்னியனே, ப்ரேரகனென்று என்பதை உபதேசித்தாரென்றவிடம் கூட்டுக. ஏ—று

அவதாரணிகை.

அகண்டைகரஸமாயுள்ள பிர்ம்மத்திற்குச்சரீரங்கடோறும் அம்சத்துடன் இருத்தலும், உபாதிகளின்வசத்தால் சுகதுக்கங்களையனுபவித்தலும். எங்ஙனம் ஒவ்வுமென என்றசங்கையால் கேட்கிருர்கள்

[illegible]

[illegible]॥ ஏ—று

(இ—ள்) அவர்கள் சொன்னுர்கள் ஓ பகவ! ஈசன் எப்படி அம்சத்துடன் இருப்பானென்று ஏ—று

அவதரணிகை.

அவர்களுக்குச்சமாதானமளிக்கின்றார்.

ப்ரஜாபதிர்வா ஏகோऽக்ரேऽதிஷ்டத் ஸ நாரமதைகஸ்ஸோऽத்மாநமபித்யாயத் பஹ்வீ: ப்ரஜா அஸ்ருஜத் தா அஶ்மேவாப்ரபுத்தா அப்ராணா: ஸ்தாணுரிவ திஷ்டமாநா அபஶ்யத் ஸ நாரமத ஸோऽமந்யதைதாஸாம் ப்ரதிபோதநாயாப்யந்தரம் ப்ரவிஶாநீதி ஸ வாயுமிவாத்மாநம் க்ருத்வாப்யந்தரம் ப்ராவிஶத் ஸ ஏகோ நாஶக்நோத் ஸ பஞ்சதாத்மாநம் ப்ரவிபஜ்யோச்யதே ய: ப்ராணோऽபாந: ஸமாந உதாநோ வ்யாந இதி ||

எ—று

(இ—ள்.) அவர்களுக்குபதேசித்தார் ப்ரஜாபதியன்றோ முதலிலிருந்தார்; அவர் ஒருவனாயிருந்து திருப்தியடையவில்லை. அவன் தன்னாலே தன்னைத் தியானம் செய்து அநேக பிரஜைகளை சிருஷ்டித்தான். அவைகள் அவனிடத்து அறிவில்லாமல் கட்டைகள் போல் நிற்பதைக் கண்டான். அவன் அதிலும் திருப்தி யடையவில்லை. அவன் நினைத்தது இவைகளுடைய இருதயத்தில் அறிவுண்டாக்குவதற்காக நாம் பிரவேசிப்போமென்று. பிறகு அவன் வாயுவாகவும், ஜீவனாகவும், தன்னைச்செய்து உள்ளே புகுந்தான். அவன் ஒருவனாய் உள்ளே பிரவேசிக்கவில்லை, அவன் ஐந்தாகத்தன்னைப் பிரித்து (பிரவேசித்தான்) பிராணன், அபானன், ஸமானன், உதானன், வ்யானன் என்று சொல்லப்படுகிறான் என்று. எ—று

(வி—ரை) முதலில் = ஆதிஸர்க்ககாலத்தில்; பிரஜாபதி = ஸித்தியோபாதியை உடைய ஈசுவரன்; ஒருவன் = ஸர்வசித்சித்

பிரபஞ்சங்களையும் தம்முள் ஒடுக்கிக்கொண்டவன்; இருந்தார் அவனொருவனாயிருந்து திருப்தியடையவில்லை = தம்மிடத்தி லொடுங்கிய ஆத்மகோடிகளின் கரும பரிபாகங்களால் பிரேரிக்கப்பட்டு அவனுக்கு ஓர்சங்கற்பமுண்டாயிற்றென்பது கருத்து. அவன் தன்னிலே தன்னை தியானம்செய்து = தம்முள்ளடங்கிய சேதனாசேதனப்பிரபஞ்சத்தின் நிலைமையை ஆலோசித்து அதற்கு முந்திய கல்பங்களில் சிருஷ்டித்தவழிகொண்டு. அநேக பிரஜைகளை சிருஷ்டித்தான். = அவ்வச்சியகோடிகளுக்கு உசிதமான தனுகரணாதிகளைக்கொடுத்தான் (இங்ஙனம் சிருஷ்டிக்கப்பட்ட) அவைகளவனிடத்தறிவில்லாமல் கட்டைகள்போல் நிற்பதைக்கண்டான். அதாவது சைதன்யமின்றி பிணங்களைப்போல் சரீரமாத்திரையில் மக்கள் விலங்குகள் என்பதாதி வ்யவகாரங்களுக்கிடமாய் நின்றன. (அவைகளுக்கு கருமபலத்தையனுபவிக்கும் அறிவில்லாதுபோனமையால்) அவனதிலும் திருப்தியடையவில்லை அவன் நினைத்ததாவது இவைகளுடைய இருதயத்திலறிவுண்டாவதற்காக நாம்பிரவேசிப்போமென்று = அவன் இவைகளுக்கு அறிவைவிளக்கி இவைகளுக்கு அந்தர்யாமியாயினனென்பது கருத்து. அவன் வாயுவாகவும் = அதிசூட்சுமமாகவும், ஜீவனாகவும் உயிராகவும் தன்னைச்செய்து உள்ளே புகுந்தான் = உள்ளே புகுவதென்றால் வியாபிப்பது. அவனொருவனாய்த்தான் உட்புகுந்தானோ வெனில் அன்றென்கிறார் அவனொருவனாய் என்பதாதியால். அவன் ஐந்தாகத்தன்னைப்பிறித்து பிரவேசித்தான் = அதாவது பிராணாதிவாயுபஞ்சகங்களாக உள்பிரவேசித்தானென்றார் பிராணனென்பதாதியால் இவ்வர்த்தவாதத்தின் முடிந்தகருத்து யாதெனில் ஒன்றேயிருந்தப்ரம்மமானது உபாதிவசத்தாலிருவகையாய்த்தோன்றி, ஈசுவரனாய்நின்று ஜகத்திற்குநிமித்தம் உபாதானமுமாயும் ஜீவனாய் சுகியென்றும் துக்கியென்றும் வ்யவகரிக்கப்படுகிறது, அதுஸத்குருவுபதேசத்தால் ஒருக்கால்பிராணாத்யுபாஸ்திகளைக்கைக்கொண்ட முமுட்சுவுக்கு விசாரத்தால் பரோட்ச ஞானமுண்டானபொழுது ஸ்வஸ்வரூபமாய்த்தோன்றி மோட்சஸ்வரூபமாகிறதென்பதே.

அவதாரணிகை

இங்கு பிராணவித்தை பிரகிருதமாதலால் ஐந்து பிராணரூபனாய் பரமாத்மாவை உபாசிக்கவேண்டும்வழி இங்குநிரூபிக்க

ப்பட்டவேண்டியதாகவே அவனொருவனாயிருந்து ஐந்தானதும் உண்டாம் என்று உபாசகர் மயங்காவண்ணம் இவருக்கு அவ்வேற்றுமையுபாதியாலமைந்ததெனக் குறிக்கிறார்

ஸயோயமூர்த்வமுத்க்ராமதீத்யேஷ வாவ ஸ
ப்ராணோऽத யோயமவாங் ஸங்க்ராமத்யேஷ வா
வ ஸோऽபானோऽத யோயம் ஸ்தவிஷ்டமன்னதா
துமபானே ஸ்தாபயத்யணிஷ்டம் சாங்கேங்கே ஸமந
யத்யேஷ வாவ ஸ ஸமானோऽத யோயம் பீதாஸி
தமுத்கிரதி நிகிரதீத்யேஷ வாவ ஸ உதானோऽத
யேனைதா: ஸிரா அனுவ்யாப்தா ஏஷ வா
வ ஸ வ்யான: இதி எ—து

(இ—ள்) இவிஎந்த இவன் மேலேகிளம்புகின்றான், அவன் பிராணன். எவன் கீழேபோகின்றானவன் அபானன். எவன் ஸ்தூலமான அன்னதாதுவை அபானத்தில் வைத்து அணுவான (அன்னதாதுவை) அங்கங்கடோறும் சேர்க்கின்றான், அவன் ஸமானன். எவன் அன்னபானங்களை விழுங்கவும் கக்கவும் செய்வான், அவன் உதானன். எவனுலிந்த நாடிகள் வியாபிக்கப்பட்டனவோ அவன்வியானன். எ--து

(வி—ரை.) மேலே கீழே என்ற வ்யவகாரங்களெல்லாம் இருதயத்தை எல்லையாய்வைத்தே ஏற்பட்டன; பிராணன் = பிராணனென்றசொல்ஸாமான்யமாகவும் விசேஷமாகவுமிருக்கும் மிருகசப்தத்தைப்போல மிருகசப்தமானது எல்லா விலங்குகளையும் பொதுவாய்க்குறிப்பதுடன்கூடசிறப்பாய் மானைக்குறிக்கும். அங்ஙனம் இந்தப்பிராணனென்றசொல்லும் ஐந்துக்கும் பொதுச்சொல்லாவதுடன்கூட சிறப்பாய் இருதயத்தினின்று மேலேகிளம்பும்வாயுவுக்கும்பெயர். அதேவாயு கீழ்நோக்கிச்சொல்லுங்காலபானனென்றும்வ்யவகரிக்கப்படுகிறது. ஸ்தூலமான அன்னதாதுவை- அன்னமென்பதுபுஜிக்கப்பட்டபொருளெல்லாம்குறித்தது, அதின்ஸ்தூலதாதுவென்பது மலம்; அபானத்தில் = மலாசயத்தில், இது மூத்

ஸ்தானத்திற்கு முலக்ஷணம்: வைத்து = நாளத்தின் வழியே வெளிப்படுத்திக் கழித்து, அணுவான = ஸாரமான ரக்தாதிரூபமான, யாம்புசிக்கும்பதார்த்தங்களில் கிட்டம்வேறு, ஸாரம் வேறு பிரியாமையால் அதனைப்பிரித்து ஸ்தானங்களுக்கேற்றவாறுசெலுத்துவான் ஸமானனும்,விழுங்குதலும்வமனாதிகளில் புசித்தபொருள்களைமேலேகிளப்புவதும்உதானன்றொழிலாம். எவனுவிந்நாடிகள் = நாடிகளின் கூட்டமாகியஇந்தச்சரீரம்வியாபிக்கப்பட்டுளதோ அது வ்யானன் பொருள். இப்பேர்களுக்குக்காரணப் பொருளைக்காட்டவேண்டியதே இப்பிரகரணம். ஆகவே (ப்ர + அந) விசேஷமாய் உயிரைத்தருதலால் பிராணன் (அப + அந) அபக்ருஷ்டங்களான மலங்களைக்கீழேஇயக்குதலால் அபானன் [ஸம் + ஆ + அந) சரீரத்திலுள்ள சராசரங்களையதாஸ்தானத்தில் அமைப்பதால் ஸமானன் (உத் + ஆ + அந) மேனோக்கிப்பொருள்களைக் கொண்டுவருதலால் உதானன் (வி + ஆ + அந) விசேஷமாயெங்கும்வியாபித்திருத்தலால் வியானன் என்றிவையேகாரணப்பொருள்களாம். அவற்றுள்பிராணன்மேனோக்கிச்செல்வதென்று சொன்னமையால்அதற்குஸ்தானம் இதயமாம். அபானன் கீழ்நோக்கிச்சென்று இடையில் நிலைபெறுதலால் அதற்கு ஸ்தானம் மலாசயம்; அல்லது குதமாம்; ஸமானன் சராசரங்களைப்பிரித்தலாலவனிருப்பது கொப்புளாம். மேனோக்கும் இயல்புடைய உதானத்திற்கு கண்டம் ஸ்தானமாம். வ்யானத்திற்கோ எல்லாச்சரீரமும் என்பதுவெளி. இதனாலேயே ஒரேவாயு இடத்தாலும், தொழிலாலும், வேறுபட்டு வ்யவகரிக்கப்படுகின்றமையால் அவனுக்குண்டான ஐவகை பேதங்கள் உபாதியாற்றானே அமைந்தனவாயின. ௪—௫

அவதாரிகை

மேலே முன்னர் நிரூபிக்கப்பட்ட பிராணோபாதியுடன் சரீரத்தையடைந்து க்ஷேத்ரஜ்ஞரூபனான ப்ரம்மத்திற்கு ஜாடராக்னி என்ற வ்யவகாரத்திற்குக்காரணமாய் வைச்வாநர வித்தையில் நிரூபிக்கப்பட்ட ரூபவிசேஷத்தை நிரூபிக்கிறார்

அதோபாம்ஶுரந்தர்யாமமபிபவதி அ
ந்தர்யாம உபாம்ஶும் சைதயோரந்தரா சௌ
ஷ்ண்யம் ப்ராஸுவத் யதௌஷ்ண்யம் ஸபு
ருஷ: ய: புருஷ: ஸோ(அ)க்நிர்வைஶ்வாநர: ௭

(இ-ள்) இனி எவ்விந்த உபாம்சு அந்தர்யாமத்தை ஜயிக்கின்றது; அந்தர்யாமம் உபாம்சுவை ஜயிக்கின்றது. இரண்டினடுவிலே உஷ்ணமுண்டாகின்றது; அவ்வுஷ்ணமே புருஷன். அப்புருஷனே அக்கினி வைசுவாநரன் எ-று

(வி-ரை.) வேதங்களில் உபாம்சுவென்று மந்தர்யாமமென்றும் இரண்டு கிரகங்கள் (கிரகங்களென்பன சோமயாகங்களில் சோமரசத்தை வைக்கும் பாத்திரவிசேஷங்கள்) ஒன்றுக்கொன்று பகாரகங்களாய் விதிக்கப்படுகின்றன. அவைகளுக்குப் பிராணனும், அபானனும், அக்கினியும், சோமனுந் தேவதையாம் “ப்ராணாபாநௌ வா உபாம்ஶ்வந்தர்யாமௌ, அக்நிதேவதாம் காயத்ரீச்சந்தஸம் உபாம்ஶோ: பாத்ரமபிஸம்பா தேவதாம் த்ரிஷ்டுப்ச்சந்தஸமந்தர்யாமஸ்ய பாத்ரமபி ஸ பிராணாபானங்களன்றோ உபாம்சு அந்தர்யாமங்கள். அக்கினி தேவதை காயத்திரி சந்தம் உபாம்சுவின் பாத்திரமாகின்றாய். சோமந்தேவதை திருஷ்டுப்ச்சந்தம் அந்தர்யாமனுடையபாத்திரமாகின்றாய் என்று சுருதி கூறுதலாலென்க. இங்ஙனம் இவ்விரண்டு சொற்களும் கிரகங்களைக் குறிப்பதாயினும் இஃது கர்மப்பிரகரணமன்றாதலால் இதனைத் தேவதைச் சொல்லாகவே படிக்கவேண்டும். அப்படியாயின் இந்த பிராணோபாஸந பிரகரணத்தில் (உப+அம்ஶு) அனேக கிரணங்களுடன் விசிந்தது என்ற சொல் அதன் தேவதையான பிராணனைக் குறிப்பதாம். ப்ராணம் ப்ரஜாநாமுதயத்யேஷ ஸூர்ய: — பிரஜைகளின் பிராணனை இந்த சூரியனுதிக்கின்றான் என்று சரீரங்களைப்பிரேரிக்குந்தன்மை பிராணனிடத்து நிரூபிக்கப் பட்டமையால் வேதங்களில் பெரும்பான்மையில் பிராணன், அக்கினி, ருத்திரன், சூரியன், பிராமணன், காயத்திரி இவர்களை ஒருங்கு சேர்த்து வழங்

கூ

குவதுண்டு. ஆதலாலேதான் இங்கு பிராணனாகவே பிரம்மம்குறிக்கப்பட்டது. பிராணவித்தையும். அந்தராதித்த வித்யையுமிங்கு ப்பிரஸ்ருதமாதலால் இனி அந்தர்யாமபதார்த்தத்தைக் குறிப்பாம். (ஸம் + யாமி ; உள்ளேஇயத்துக் கொள்வதால் ஸம்யமனமாம். அபானன் எப்பொழுதும் பிராணத்துக்கு எதிர்மறையாகவே நடத்தலாலென்க. அது கீழ்நோக்கிய கிரணமுடையதாய் உலகத்தின் உற்பத்திக் கேதுவாதலால் சக்தி என்றுபசரிக்கப்படுகின்றது. அதற்கு தேவதை சோமனென்ற நியாயமே. அக்னீ ஷோமீயாத்தியாயத்தில் புராணத்தில் "அஹமக்நிஶ்ஶிரோநிஷ்ட: த்வம் ஸோமஶ்ஶிரஸி ஸ்திதா| அக்நீஷோமாத்மகம் விஶ்வமாவாப்யாம் ஸம்ப்ருதம் ஜகத் ॥ = நானக்கினி சிரஸிலுள்ளவன்; நீ சோமன் சிரஸிலுள்ளவள்; ஆகவே அக்கினி சோமரூபமான பிரபஞ்சமெல்லாம் எம்மாலேயே தரிக்கப்பட்டது என்று உள்ளவசனம் வேதமூலமாய் இதனால் விளங்கியது. ருத்ரோ வா ஏஷ யதக்நி: = அக்கினியென்று சொல்லப்படுபவன் ருத்திரனன்றோ என்பதாதி பலவிடங்களில் ருத்திராக்கினிகளை ஒன்றுபடுத்தியும், "அஸௌ யஸ்தாம்ரோ அருண: = இவன் எவன் பொன்னிறமுடையவன். என்பதாதி இடங்களில் ருத்திரசூரியாபேதமும் "த்வம் தேவேஷு ப்ராஹ்மண: = நீ தேவதைகளுட் பிராமணன்" என்பதாதி இடங்களில் பிராமணியமும், "ரௌத்ரீ காயத்ரீ = ருத்திரனை காயத்திரி தேவதையாயுடையது" என்பதாதி பல விடங்களில் காயத்திரீ ருத்திரசம்பந்தம், "ப்ராணாநாம் க்ரந்திரஸி ருத்ரோ மா விஶாந்தக: = பிராணங்களுடைய கிரந்தியாய் உள்ள ஓ ருத்திர எனக்கு அந்தகனாக நீ தோன்றவேண்டாம் என்பதாதி விடங்களில் பிராணருத்திராபேதம் இங்ஙனம் குறிக்கப்பட்டது. இப்படியே உமாதேவியாருக்கும் சோமாபேதம் குறிக்கப்பட்டதை வருமாறுகாண்க:— "ஸோமோ கௌரீமதிஶ்ரித:| யா உமா ஸா ஸ்வயம் விஷ்ணு: யோ விஷ்ணுஸ்ஸ ஹி சந்த்ரமா:| சந்த்ராம் ப்ரபாஸாம் = ஸோமன் கௌரியால் அதிட்டிக்கப்பட்டான். உமை என்பவளே மஹாவிஷ்ணு; எவன் விஷ்ணுவோ அவன் சந்திரன்; சந்திரையும் பிரகாசமுடைய

வனும்என்பதாதி விடங்களிலும் சந்திரக்கிரகாராதனத்தில் தேவீமந்திரவிநியோகமும் வெகுவாயுண்டு. ஆக்நேயோ வை ப்ராஹ்மணோ தேவதயா காயத்ரச்சந்தா ப்ராஹ்மண: = பிராமணனுக்குத்தேவதை அக்கினி. ஆதலால் பிராமணன் காயத்திரியைச் சந்தமாயுடையவன் என்பதாதி பலவாக்கியங்களில் மேற்கண்ட பொருள்களுக்கு அபேதங் குறிக்கப்பட்டதை யாங்காங்கு காண்க. இங்ஙனமே, 'யத்ராஸாவாதித்ய உதிஷ்டத், ததோ பில்வ உதிஷ்டத், தஸ்யாஸ்ருக்ஷாயபில்வ:, வைபில்வோ தண்டோ ப்ராஹ்மணஸ்ய = எவ்விடத்திலாதித்தியன் உதித்தான்; அங்கே பில்வம் உதித்தது. உனது விருட்சமன்றோ பில்வம். பில்வமயமான தண்டம் பிராமணனுக்குரியது என்று அநேகமாக ஆதித்தியன், லட்சுமீ பிராமணன் இவர்களுக்கு பில்வ சம்மந்தமும் வேதத்திற்றானே காட்டப்பட்டது. ஆகவே பிராணன், அபானன், சூரியன், சந்திரன், அக்கினி, சோமன், சிவன், சக்தி உபாம்சு, அந்தர்யாமம், உஷ்ணம், சீதம், சத், அசத், புருஷன், பிரகிருதி, காயத்திரீ, திருஷ்டுப், சங்கரன், நாராயணன் முதலியதிரியைகளெல்லாம் ஒன்றுக்கொன்றுபகாரமும், உண்மையிலொன்றுமேயாம். ஆகையால் இம்மந்திரத்தின் முடிந்த கருத்து இது. உபாம்சு = பிராணன்; அந்தர்யாமத்தை = அபானத்தை; ஜயிக்கின்றது = நிக்கிரகித்து மேலே சரீரத்தை நிலைபெறுவிக்கின்றது; அந்தர்யாமமும் = அபானனும் உபாம்சுவை ஜயிக்கின்றது; நிக்கிரகித்து கீழ்நோக்கி மலாதிகளைச் செலுத்துகின்றது. இங்ஙனம் ஒன்றுக்கொன்று விரோதமாய் மேலும் கீழுமாய்ச்செல்லும் பிராணாபானன்களுக்கு இடையே அவ்விரு தொழிலுந் தோன்றுமிடத்து உஷ்ணமுண்டாவது நியாய மாதலாலும், வாயுவினிடத்து அக்கினியுண்டாவது சாஸ்திரசம்மதமும் உசிதமுமாதலாலும், பிறப்புமுதல் மரணபரியந்தம் ஓயாது வேலைசெய்துவரும் பிராணாபானன்களுக்கிடையே தோன்றுமவ்வுஷ்ணமே உள்ளே புசித்த பொருள்களை பரிணமிக்கச்செய்யும் ஜாடராக்கினி எனப்படுகின்றதாம். அதனது பூர்வாவஸ்தையைக் குறிக்கின்றார் எது உஷ்ணமென்பதாதியால். அவ்வுஷ்ணம் பித்தகோசரூபமாய் பரிணமித்தலால் பித்தகதியை யனுசரித்தே மனமிருத்தலால் அம்மனத்தையுபாதியாயுடைய ஆன்மா அதுவே எனவுபசரிக்கப்பட்டது

'அதுவேபுருஷனென்றும் அப்புருஷனையேஜாடராக்கினியெனவும் வைசுவானரனெனவும், உபாஸிக்க வேண்டுமெனப் பிரமாணத்தின் கருத்து. (விஶ்வ + நர + அ) ஸமஸ்தஜனங்களுக்கும் ஹிதத்தைகொடுப்பவனென்ற பொருளிலேயே இச்சொல்லமைந்தது. இவ்வக்கினியையேயல்ல உஷ்ணமென்றமையால் கட்டைகளைக் கொளுத்தும் கடுந்தீ அன்று என்றேற்பட்டது. எ—து

அவதாரணிகை.

மேலே வேறுசுருதிகளிற் சொல்லப்பட்ட வைசுவானரவித்தையும், இச்சேதன வைசுவானர விஷயமென்றுபசங்கிரிப்பாராய் பிரகிருதமான பிராணவித்தையிற்றானே அவற்றையும் சேர்க்கின்றார்.

ஸ்மர்யமாணமநுமாநம் ஸ்யாதிதி ॥ எ—று

(இ—ள்.) வேறிடத்துஞ் சொல்லப்பட்டது இவனே வைசுவானராக்கினி என்று. எ—து

அவதாரணிகை.

அவனிலக்கணத்தைக் கூறுகின்றார்.

யோயமந்த: புருஷே யேநேதமந்நம் பச்யதே யதி
தமத்யதே தஸ்யைஷ கோஷோ பவதி
யமேதத்கர்ணாவபிதாய ச்ருணோதி
ஸயதோத்க்ரமிஷ்யந்பவதி நைநம் கோஷம்
ச்ருணோதி ॥ எ—து

(இ—ள்.) எவன் இந்தப்புருஷனுடைய இருதயத்திலிருக்கின்றான். போஜனம் செய்யப்படும் வஸ்துக்களை எவன் பாகம் செய்கிறான். காதைப்பொத்திக்கொண்டால் கேட்கப்படும் தொனி அவனதே; அவன் எப்பொழுது வெளிக்கிளம்ப எத்தனம் செய்கிறானோ அப்பொழுது இந்தச் சப்தத்தைக்கேட்கமாட்டான். எ—து

(வி—ரை) ஸ வா ஏஷ புருஷவித⁴ ஏவ = அவன் புருட ஸ்வரூபனுயிருப்பான் என்பதாதி பலசுருதிகளிற் கண்டவாறு. இங்கு புருஷனென்ற சொல் சரீரத்தையே குறிக்கும். இருதயத்தில் = உட்புறத்தில்; புருஷனென்ற சொல்லுக்கு ஜீவனே பொருளாயினும் அவ்விதப் புருஷனை உள்ளே உடையது (அந்த꞉புருஷம்) = உள்ளே புருஷனை உடையது என்று அன்மொழித் தொகையாய்க் கொண்டு சரீரபரமாய் வ்யாக்கியானம் செய்தாலும் செய்யலாம். அங்ஙனமாயின் புருஷனென்ற பதத்திற்கு ஆன்மாவென பொருள் கொள்ளவேண்டும். எம்மால் புசிக்கப்படும் வஸ்துக்களை இவன் பாகம் செய்வானென்றதால் இவன் ஜாடராக்கினி யென்றேற்பட்டது. உலகத்தில் யந்திரத்திலேற்றிச் சமையல் செய்யும் சோறுமுதலியவற்றில் ஓர்வகை ஒலி அனுபவிக்கப்படுகின்றது. அவ்விதமானத்தொனி இங்குண்டோவெனின் உண்டென்கிறார். காதைப்பொத்திக்கொண்டால் என்பதாதியால். அதாவது ஷண்முகீமுத்திரையாலென்பதுகருத்து. அவனதே = முற்குறித்தஜாடராக்கினியுனுடையதே. அவ்விதமதுஜாடராக்கினியினுடையதாயின் அது அதன் வ்யாபாரமோய்ந்த பிறகு இராதாயின் இங்கு அது சம்பவிக்கின்றதோவென சங்கை நிகழ அதனை விரித்தோதுகின்றார் அவனெப்பொழுதென்பதாதியால். வெளிக்கிளம்பஎத்தனம்செய்வான் = மரணத்துக்குன்முகனுவான். அப்பொழுது இந்தச் சப்தத்தைக்கேழ்க்கமாட்டான் = இவ்விதம் கேழ்க்காமல் போவது காதென்ற புலனின்குறைவாலல்ல, மற்று அச்சமயம் அவ்வக்கினி யணைந்துபோவதால், இதனால் காதை மூடிக்கொண்டாவது எந்திரங்களைக் கொண்டாவது உள்ளேயுள்ள நாதத்தைசோதித்தால் அதனாலாயுஸ்ஸம் அறியப்படும். இங்ஙனம் சப்தமும் அக்கினியுமொன்றாதலால் (வைஶ்வாநரஸ்ய ...) என்ற அக்கினிதேவதையைக் குறிக்கும் மந்திரத்தை சப்தபரமாக பதஞ்சலிமுனிவர் வ்யாக்கியானம் செய்தருளினாரென்க.

அவதரணிகை.

இனிப்பிராணஸ்வரூபனான பரமேசுவரனுக்கு பக்தர்களால் உபாஸிக்கக்கூடிய ஸ்வரூபத்தைச் சொல்லுகின்றார்.

ஸ வா ஏஷ ஏவம் பஞ்சதாத்மா குஹாயாம் நிஹி
தோ மநோமய: ப்ராணஶரீரோ
பாரூப: ஸத்யஸங்கல்ப ஆத்மேதி || எ—று

(இ—ள்) அவ்வித பரமாத்மா ஐந்தாகப் பிரிந்து குகையில்வைக்கப்பட்டான், மனோமயன், பிராணத்தைச் சரீரமாயுடையவன், பிரகாச ரூபன், சத்திய சங்கற்பன், ஆத்மாவென்று. எ—று.

(வி—ரை.) அவ்வித பரமாத்மா = பிராணரூபனாய் சரீரத்தில் கால் முதல் தலைவரையில் ஐந்து ஸ்தானங்களில் ஐந்துரூபமாக பிர்மா, விஷ்ணு, ருத்திரன், மகேசுவரன், ஸதாசிவன் என்றுவது, பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாசம் என்றதத்துவரூபமாயாவது ப்ராணம் முதலிய ஐந்து வாயுரூபமாயாவது குகையில் இதரர்களாலறியக் கூடாத சரீரத்தினுட்புறத்தில்; வைக்கப்பட்டான = அதாவது வைக்கபபட்டவனைப்போல் தோன்றுகின்றான்; மனோமயன் = அவனுக்கு இயல்பில் சரீரமின்மையால் மனதாற்கற்பித்த சரீரத்தை ஒன்று பெற்றுளானென மனோமயனென்றதால் நிரூபித்தார்; பிராணத்தைச்சரீரமாயுடையவன் = பிராணத்தைச் சரீரமாயுடையவனாயாவது மனதைச் சரீரமாயுடையவனாயாவது அவனையுபாசிக்க வேண்டுமென்றார். அவனுடைய சுத்தச் சொரூபத்தை நிரூபிக்கின்றார் பிரகாசரூபனென்பதாகியால்; பிரகாசரூபன் = சித்ரூபனென்பது கருத்து; ஸத்தியஸங்கற்பன் = ஸவிசேஷப் பிரம்மசொரூபன் ஜீவர்களுக் குசிதமானகன்மப்பயன்களைக் கொடுப்பவன். இவனை வேதங்களிலேனும், மற்றய சாஸ்திரங்களிலேனும் எந்த சப்தத்தாலவனை வ்யவகரிக்கின்றாரெனக் குறிக்கின்றார் ஆத்மாவென்று; ஆத்மா = ஸர்வஇருதயங்களிலுமுள்ளசத்பதார்த்தம் இவ்விஷயத்தையாஞ்ஞியவல்கியபகவான் யோககீதைகளில் கால்முதற்றலைவரையிலுள்ள ஸ்தானங்களை ஐந்தாகப் பிரித்து அவற்றுள் பிருதிவி முதலியதத்துவங்களையும் ப்ரம்மாமுதலிய ஐந்து மூர்த்திகளையுந் தரிக்கவேண்டுமெனநிரூபித்தார். யோகதத்துவோபநிடதத்திலும் விரிவாயிந்தவிடயங்காணப்படுகின்றது. எ—று.

அவதரணிகை

இனி அவ்வாத்மாவே பிரத்யகாத்மாவென்று நிரூபிக்கின்றார்.

स वा एषोऽस्य हृदन्तरे तिष्ठन्नकृता-
र्थोऽमन्यतार्थानश्नानीति तस्मादिमानि
खानि भित्त्वोदितः पञ्चभी रश्मिभिर्विषयान-
त्तीति बुद्धीन्द्रियाणि यानीमान्येतान्यस्य
रश्मयः कर्मेन्द्रियाण्यस्य हयाः रथः श-
रीरं मनो नियन्ता प्रकृतिमयोऽस्य प्रतो-
दः एतेन खल्वीरितं परिभ्रमतीदं शरीरं
चक्रमिव मृते चेदं शरीरं चेतनव-
त्प्रतिष्ठापितं प्रचोदयिता वैषो-
ऽस्येति ॥ எ—று

(இ—ள்.) அவ்விந்த இருதயத்திலுள்ளே உள்ள (ஆத்மா) அகிருதார்த்தனைத் தன்னை நினைத்து தான் புசிக்கிறவனென்றும், இந்திரியாபிமானியென்றும், ஐந்து கடிவாளங்களால் விஷயங்களை கிரகிக்கின்றான், இவனுக்குள்ள புத்தீந்திரியங்களே இவனுக்குக் கடிவாளங்களாகும், கர்மேந்திரியங்கள் இவனுக்குக் குதிரைகள், சரீரமிவனுக்கு ரதம், மனமே இவனுக்கு நியந்தா, ப்ரகிருதியே இவனுக்குச் சாட்டை, இவனால் பிரேரிக்கப்படுகிற இச்சரீரம் சக்கிரம்போல் ஸஞ்சரிக்கின்றது, மிருதனைப் போகும்பட்சத்தில் இந்தச் சரீரம் சேதனம்போல்த் தோன்றுது, இச்சரீரத்திற்கவனே பிரேரகனுமென்று எ—று

(வி—ரை.) அவ்விந்த = முன்னர் நிரூபித்த இலக்கணம் பொருந்திய ஆன்மாவே இதயத்தினுள்ளே இந்தச்சரீரத்தின் நடுவேயுள்ள இதயமென்னும் மாம்சகண்டத்தின் நடுவில் உள்ள சிதாகாயத்தில் (இருந்துகொண்டு) அகிருதார்த்தனைய் = தான்பத்தனென்று நினைத்து = மயங்கி; அம்மயக்கத்தின் ஸ்வரூபத்தைக்காட்டுகின்றார்.

தானென்பதாதியால், புசிக்கிறவனென்றும்=போக்தா வென்றும்; இந்திரியாபிமானி என்றும்=கர்த்தாவென்றும்; மேற்கண்ட வத்தியாஸபலததால்ப்பலவிஷயங்களைப் புலன்கள் வழியேயறிகிறானென்பதை ஐந்து குவெர்ள்ளங்களாலென்பதாதியால் நிரூபிக்கின்றார். குவாளங்களென்றால் அவைகளைக்குதிரைகளுக்கன்றேவிடவேண்டு மவைகளை ஓர் ரதத்திற் பூட்டவேணடும். அதனை ஒரு சாரதியைக்கொண்டு நடாத்த வேண்டும். அதற்காக ரூபகமாய் குவாளம் முதலியவற்றை நிரூபிக்கின்றார். இவனுக்குள்ளவென்பதாதியால்; புத்தீந்திரியங்கள்=ஞானேந்திரியங்கள்; பிரகிருதி=வித்தை; அதனைச்சாட்டை என்றது அதுவேயித்தனைச்சசாரத்தில் விநியோகித்தலாலென்க. சக்கிரம் போல்=மேலுங்கீழுமாகச் சுழலுதலால் இது சக்கிரமென நிரூபிக்கப்பட்டது. மிருதனைப்போகும் பட்சத்தில்=இந்தச்சேதன மிச்சரீரத்தை விட்டுவிடும்பொழுது இது சேதனம்போல் தோன்றாது அப்பொழுத சேதனமெனபது நன்குபுலப்படும், இச்சரீரத்திற்கவனே பிரேரகனுமென்றுடசங்கரிக்கின்றார், அதுவே இங்கறியவேண்டியதாதலால் மனதைச் சாரதி என்றதனால் அம்மனமென்றசாரதி சரீரமென்ற ரதத்தை எந்தவிடத்து ஏவுவான் அந்த விடத்து ரத்தியுள்ளவன் தனக்கிச்சையில்லாவிடினும் போய், தீரவேண்டுமாகவே மனம்போனவழியெல்லாம்ஆமா சுழன்றுவருகிறானென்றேறப்பட்டது. இதனாற்சரீரத்திற்குள்ளாறும்சைதன்யமானது ஆன்மசம்பந்தத்தாலேயன்றி வேறிலையென்பது முடிந்தது.

அவதாரணிகை

இனி சரீரசம்பந்தத்தால் ஆன்மாவுக்குண்டாகும் தூரவஸ்த்தையைக்கூறுகிறார்.

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

(இ—ள்.) அந்த இந்த ஆத்துமா இச்சரீரவசத்தை யடைந்தவனைப்போல் நல்லதுங் கெட்டதுமான கருமப்பயன்களாற்கட்டுப்பட்டவனைப்போற் சரீரந்தோறுஞ்சஞ்சரிக்கின்றான். அவனவ்வியக்த னாதலாலும், ஸூக்ஷ்ம னாதலாலும், அதிருச்யனாதலாலும் அக்கிராஹ்யனாதலாலும், நிர்மமனாதலாலும் அவஸ்தைகடந்தவன். அகர்த்தாவாயுள்ளவன் கர்த்தாவைப்போலிருக்கின்றான். எ---து.

(வி—ரை.) அந்த இந்த=முற்குறித்த விலக்கண முடைய ஆத்துமா=சேதனன்; இச்சரீரவசத்தை யடைந்தவனைப்போல்=தானல்லாச் சரீரத்துத் தானென்று நினைத்தவனாய்; மேற்கண்டபடி சரீரத்துவைத்த அகந்தையின்றிப்படயனைக் குறிக்கின்றார் நல்லதுமென்பதாதியால்; நல்லதுங் கெட்டதுமான கர்மபலன்களால்=ஸுவர்க்கம், நரகம், சுகம், துக்கம் முதலியவற்றால்; கட்டுப்பட்டவனைப்போல்=அவைகளை யனுபவிப்பவனைப்போல்; சரீரந்தோறுஞ்சஞ்சரிக்கின்றான்=ஒரேவான்மா பலசரீரங்களிலுபாதிபேதத்தாலகப்பட்டுழலுகின்றான். அவ்வியக்தனாதலாலுமென்பதாதிகளியல்பிலான்மாவின் சொரூபத்தைக் குறிக்கின்றனவாம்; அவ்வியக்தன்=தேசங் காலம் முதலியவளவிற்கடங்காதவன். ஸூக்ஷ்மன்=சுவானுபவத்தால் மட்டுமறியப்படுபவன். அதிருச்யன்=ஞானேந்திரம்முதலியவற்றிற்கும்விஷயமாகாதவன்; அக்கிராஹ்யன்==மனதாலுமளவிடப் படாப்பெருமையுடையவன் ;நிர்மமன் உண்மையில்மமதை அகந்தையில்லாதவன்;(இங்கு மமதையென்ற தகந்தைக்குங்குறிப்பேயாதலால். அவஸ்தைகடந்தவன்=ஒருவகைஅவஸ்தைகளுக்கு மகப்படாதவன்; அகர்த்தா=கர்த்திருத்துவம் முதலிய பந்தமில்லாதவன்; இத்தகையோனாயினுஞ் (சரீரசம்பந்தத்தால்) கர்த்தாவைப் போல்=பத்தனைப் போல்; இதனாலான்மாவுக்கு சுவபாவம் அஸங்கோதாஸீனத்துவமேயன்றி பந்தாதிகளத்தியாஸமாத்திரமே யென்றீறறப்பட்டது.

அவதரணிகை.

இனி உபசங்கரிக்கின்றார்.

𑌸 𑌵𑌾 𑌏𑌷 𑌶𑍁𑌦𑍍𑌧𑌃 𑌸𑍍𑌥𑌿𑌰𑍋𑌽𑌚𑌲𑍋𑌽𑌲𑍇𑌪𑍋𑌽
𑌵𑍍𑌯𑌗𑍍𑌰𑍋 𑌨𑌿𑌃𑌸𑍍𑌪𑍃𑌹𑌃 𑌪𑍍𑌰𑍇𑌕𑍍𑌷𑌕𑌵𑌦𑌵𑌸𑍍𑌥𑌿𑌤𑌃 𑌸𑍍𑌵
𑌚𑌰𑌿𑌤𑌭𑍁𑌗𑍍𑌗𑍁𑌣𑌮𑌯𑍇𑌨 𑌬𑌲𑍇𑌨𑌾𑌽𑌽𑌤𑍍𑌮𑌾
𑌨𑌮𑌨𑍍𑌤𑌰𑍍𑌧𑌾𑌯𑌾𑌽𑌵𑌸𑍍𑌥𑌿𑌤 𑌇𑌤𑍍𑌯𑌵𑌸𑍍𑌥𑌿𑌤 𑌇𑌤𑌿 ॥ எ-று

(இ—ள்.) அப்படியுள்ள இவன் சுத்தன், ஸ்திரன், சலிக்காதவன், அலேபன், அவ்வியக்கிரன், நிஸ்பிருகன், பார்ப்பவனைப் போலிருப்பவன். தனது சரிதத்தைப் புசிப்பவன். குணமயமான பலத்தாற்றன்னை மறைத்துக்கொண்டிருக்கின்றானிருக்கின்றான். எ—து

(வி—ரை.) அப்படியுள்ள இவன் = முன்மந்திரத்திற் குறித்த விலக்ஷணமுள்ளவன்; சுத்தன், (ஆனால்) சோதித்த சொரூபத்தில். ஸ்திரன் = கூடஸ்தன். சலிக்காதவன் = பரிபூர்ணன். அலேபன் = உபாதியில்லாதவன். அவ்வியக்கிரன் = ஞானகனமுயுள்ளவன் நிஸ்பிருகன் = விருப்பம் வெறுப்பு முதலிய துர்குணங்களில்லாதவன்; இங்ஙனஞ்சொரூபத்திற் சுத்தனாயினுமிச் சரீரசம்பந்தத்தாலவனுக்குண்டாகுந் தீமைகளைமேல வற்புறுத்திப் பேசுகின்றான். பார்ப்பவனைப்போலிருப்பவனென்பதாதியால். பார்ப்பவன் = போக்தா. (ஆகையாலேயே) தனது சரிதத்தைப் புசிப்பவன் = புண்ணியபாவப்பயன்களை யனுபவிப்பவன். அங்ஙனமவனுக்கு நேர்ந்ததற்கேதுவைக் குறிக்கின்றார் குணமயமான பலத்தாலென்பதாதியால்; குணமயமான பலத்தால் = தமோகுணத்தைப் பிரதானமாயுடைய அவித்தையின் பரிணாமமாகிய அந்தக்கரணத்தால். தன்னைமறைத்துக்கொண்டு = தன்சொரூபத்தை மறந்தென்பது கருத்து. இருக்கின்றானிருக்கின்றானென விருமுறை உரைத்தது பிரகரணத்தினிறுதியைக் குறிக்க. இவ்வளவில் சி. விற்றோன்றிய கேள்விக்கேற்றவாறு சரீரத்திற் கதிஷ்டாதாவானவான்மாவின் சொரூபமுபதேசிக்கப் பட்டதென்க. எ—து

இரண்டாம் பிரபாடகம் முற்றிற்று.

மூன்றாம் பிரபாடகம்.

அவதரணிகை.

ஞானி இங்ஙனமிருக்க சிற்கனனான இந்தான்மாவுக்குபந்தரூபமாயமைந்த பூதாத்மா என்பவன் யாவன். எவன் ஸ்வபாவத்திலனாத்மாவாயிருந்தாலும் ஆத்மாவென வ்யவகரிக்கப்பட்டவனாய் அஞ்ஞான தசையுள்ளவரைத் தோன்றுகின்றான். அவன் ஸ்வரூபத்தை எமக்கு உபதேசிக்க வேண்டுமென சீடர்கள் கேட்க ஆசிரியருபதேசிக்கும் முறையை மூன்றாம் பிரபாடகத்தில் நிரூபிக்கின்றார்; அதில் அவர் கேள்வி முதன் மந்திரம்.

தே ஹோசு: பகவந் யத்யஸ்யாத்மனோ மஹி-
மானம் ஸூசயஸ்யந்யோ வா பர: கோऽயமாத்மா
யோऽயம் ஸிதாஸிதை: கர்மபலைரபிபூ-
யமாந: ஸதஸத்யோநிமாபத்யத இத்யவாசீம்
வோர்த்வாம் வா கதிம் த்வந்த்வைரபிபூயமாந: பரி-
ப்ரமதீதி கதம: ஸ இதி ॥ எ—து

(இ—ள்.) அவர்கள் சொன்னார்கள். ஓ பகவானே இந்த ஆன்மாவின் மகிமையை நிரூபிக்கின்றார்களாயின் வேறே ஒரு ஆன்மா யார்? எவன் நல்லதும் கெட்டதுமான கருமபலன்களால் கட்டப்பட்டு சத்துமசத்துமான யோனிகளை யடைந்து கீழும் மேலுமான கதிகளை துவந்துவங்களால் அவமதிக்கப்பட்டு அடைகின்றானவனெவன் என்று. எ—து

(வி—ரை.) அவர்கள் சொன்னார்களென்பது கேள்வியைக் குறிப்பது. பகவானே = எல்லாமறிந்தவனே; இந்த ஆன்மாவின் மகிமையை = ப்ரத்தியகாத்மாவின் மகிமையை, நிரூபிக்கின்றார்கள் (தங்களைப்போன்ற பெரியோர்களென்று எழுவாயை வருவித்துக்கூட்டுக) ஆயின் = என்றது முற்றாற்போற் சொன்னது (வேதங்கள் பிரமாணமாயின்) என்பதாதி விடங்களில் விஷயத்வைதவற்புறுத்திக் காட்டுவது போலவாம். இங்ஙனந் தாங்களுபதேசித்தப் பிரகாரம் இவ்வான்மாபிரும்ம ஸ்வரூபமானால் ஸ்வர்க்

கநரகாதிகளெல்லாம் அநுபவிக்கும்படி இவைகளைச்செய்யுமாத்மா வேறொருவனென்பவன் கேழ்வி. அதாவது எந்தவுபாதியின்சம்பந்தத்தாலிவ்வான்மா இவ்வித நிலைமையைப் பெற்றானென்பது கருத்து. அவ்வுபாதியையே மேலும் ஆத்மாவென் வ்யவகரிக்கப்படுவதாய் எடுத்து நிரூபிக்கிறார். வேறே ஒரு ஆத்மா என்பதாதியால், நல்லதுங் கெட்டதுமான கருமபலன்களாலென்பது தி முன்மந்திரத்திலேயே நிரூபிக்கப்பட்டது. சத்துமசத்துமான=தேவமனுஷ்ய திர்யகாதிகளான. யோனிகளை=உற்பத்திஸ்தானங்களை; அடைந்து=அவற்றிற் பிறந்து; கீழும்மேலுமான=நரகஸ்வர்காதி ரூபங்களான; கதிகளை=ஸ்தானங்களை; த்வந்துவங்களால்=புண்யபாபம் முதலிய இரட்டைகளால்; அவமதிக்கப்பட்டு= அதன் வசப்பட்டதென்பது பொருள். அவனெவன் =அவன் சேதனனோ அசேதனனோ எச்சாதியிற் சேர்ந்தவன் அவனிடத்துளெல்லாப்பொருள்களையுமனுபவிக்கும் தன்மையிருத்தலால் அவனைச் சேதனனென்றும் தமதுபதேசப்படி சரீராதிகளை அசேதனமென்றும் நினைக்கவேண்டியிருத்தலாலும் அவனே ஸத்யம் மற்றது மித்தியை என்று நினைக்கவேண்டியிருத்தலாலும் அனாத்மாக்கள் மிச்சையாவது அனுபவவிருத்தமாதலாலுமெங்களுக்குத் தோன்றிய இச்சங்கையை ஆசிரியர் விலக்கியருளவேண்டியதென்பது இம்மந்திரத்தின் முடிந்த கருத்து.

அவதாரணிகை

இனி சமாதானம் கூறுகின்றார்.

𑌸𑌂𑌕𑌲𑍍𑌪𑌨𑌸𑍍𑌪𑌰𑍍𑌶𑌨𑌦𑍃𑌷𑍍𑌟𑌿𑌮𑍋𑌹𑍈𑌃
𑌗𑍍𑌰𑌾𑌸𑌾𑌮𑍍𑌬𑍁𑌵𑍃𑌷𑍍𑌟𑍍𑌯𑌾 𑌚𑌾𑌤𑍍𑌮𑌵𑌿𑌵𑍃𑌦𑍍𑌧𑌿𑌜𑌨𑍍𑌮 ।
𑌕𑌰𑍍𑌮𑌾𑌨𑍁𑌗𑌾𑌨𑍍𑌯𑌨𑍁𑌕𑍍𑌰𑌮𑍇𑌣 𑌦𑍇𑌹𑍀
𑌸𑍍𑌥𑌾𑌨𑍇𑌷𑍁 𑌰𑍂𑌪𑌾𑌣𑍍𑌯𑌭𑌿𑌸𑌮𑍍𑌪𑍍𑌰𑌪𑌦𑍍𑌯𑌤𑍇 ॥
𑌸𑍍𑌥𑍂𑌲𑌾𑌨𑌿 𑌸𑍂𑌕𑍍𑌷𑍍𑌮𑌾𑌣𑌿 𑌬𑌹𑍂𑌨𑌿 𑌚𑍈𑌵
𑌰𑍂𑌪𑌾𑌣𑌿 𑌦𑍇𑌹𑍀 𑌸𑍍𑌵𑌗𑍁𑌣𑍈𑌰𑍍𑌵𑍃𑌣𑍋𑌤𑌿 ।
𑌕𑍍𑌰𑌿𑌯𑌾𑌗𑍁𑌣𑍈𑌰𑌾𑌤𑍍𑌮𑌗𑍁𑌣𑍈𑌶𑍍𑌚
𑌤𑍇𑌷𑌾𑌂 𑌸𑌂𑌯𑍋𑌗𑌹𑍇𑌤𑍁𑌰𑌪𑌰𑍋𑌽𑌪𑌿 𑌦𑍃𑌷𑍍𑌟𑌃 ॥ 𑌶𑍍𑌵𑍇 ௫-௧௨ ॥ என்று

(இ—ள்.) அவர்களைப் பார்த்துபதேசித்தார். வேறாகிய பூதாத்மா இருக்கின்றானல்லவா, அந்த இவன் நல்லதுங் கெட்டதுமான கர்மபலங்களாற் கட்டுப்பட்டு சத்தும சத்துமான யோனிகளையடைந்து கீழும் மேலுமான கதிகளை இரட்டைகளாற்பிடிக்கப்பட்டவனாயடைந்துசுழல்கின்றான். அவனது சொரூபத்தின் வியாக்கியானம். ஐந்து தன்மாத்திரைகள் பூதசப்தத்தால் வ்யவகரிக்கப்படுகின்றன ஐந்து மகா பூதங்கள் பூதசப்தத்தால் சொல்லப்படுகின்றன. இனி யவைகளின் ஸமுதாயமெதுவோ (அது) சரீரமென்று சொல்லப்படும். எ-து

(வி—ரை) அவர்களைப்பார்த்து = முற்குறித்தவர்களானசிடர்களைப்பார்த்து, உபதேசித்தார். வருமாறு என்பதைவருவித்துக்கொள்க. எங்ஙனமென்பதைக் குறிக்கின்றார். வேறாகிய என்பதாதியால். வேறாகிய பூதாத்மாவென்பது முதல்சுழல்கிறான் என்றவரையிவ்வியர்களின் வாக்கியத்தை யனுசரித்தது. ஆகவே முன் மந்திரத்திலேயே அவை வ்யாக்கியானம் செய்யப்பட்டன. அவனது சுரூபத்தின் என்பதுமுதல் குரூபதேசம். அவனது = நீங்கள்வினவிய பூதாத்மாவினது; சொரூபத்தின் = இலக்கணத்தின், வ்யாக்கியானம் = ஸ்வரூபநிரூபணம் வருமாறென்பது தொக்கிநின்றது. இனி இவர்வினவிய சரீரவிலக்கணத்தைச் சொல்லுகின்றார் ஐந்து தன்மாத்திரை என்பதாதியால்; ஐந்துதன்மாத்திரைகள் = சப்தம் பரிசம், ரூபம், இரசம், கந்தம் என்பன தன்மாத்திரைகளெனப்படும். இவைகளைக் காரணபூதங்களென்பர். ஐந்துமகா பூதங்கள் = பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாசம் இவையே யவையாம். இவைகள் கார்யபூதங்களாம். இவைகளிரண்டின் கூட்டம் சரீரமெனப்படும். அதுவே இவ்வான்மாவுக்குபாதியும் பந்தமுமாம். இது உண்மையில் அசேதனமாயினும் அதனிடத்துச் சம்பந்தித்த சேதனன் அதைத்தானென அகங்கரித்தலாலது சேதனம்போற் றோன்றுவதென்றுகின்றது. அதனிடத்தேவைத்த அகந்தையினடியாய் மமதைதோன்ற மற்றவைகளும்மமதைக்கு விஷயமாயான்மாவை பந்தத்திற்கு ஆளாக்குகின்றன என்பதே இவ்வுபதேசத்தின் ஸாரமாம். ஆன்மாவுக்குச் சரீரத்தினிடத்தே நான்

நெட்டை, நான்குட்டை என்பதாதியாய் அபிமானமனுபவஸித்தமாதலால் அதுவே ஸம்சாரமூலமென்பது நிரூபிக்கப்பட்டது. எ—ஆ

அவதாரிகை.

இனி அனாத்மாவாகிய சரீரத்தில் ஆத்மாவுக்குண்டாகிய அகந்தையில் இப்பந்தம் உண்டாயினும் இயல்பில் அவன் அஸங்கன் என்பதை நிரூபிக்கிறார்.

அத யோ ஹ கலு வாவ ஶரீர இத்யுக்தஸ்ஸ பூதாத்மேத்யு-
க்த꞉ அதாஸ்யாத்மா பிந்துரிவ பு-
ஷ்கர இதி ஸ வா ஏஷோऽபிபூத꞉ ப்ராக்ருதை-
ர்குணைரித்யதோऽபிபூதத்வாத் ஸம்மூடத்வம் ப்ர-
யாதஸ்ஸம்மூடத்வாதாத்மஸ்தம் ப்ரபும் பகவந்தம்
காரயிதாரம் நாபஶ்யத் || எ—ஆ

(இ—ள்) இனி எவன் சரீரமென்று சொல்லப்பட்டானோ அவனே பூதாத்மாவென்றும் சொல்லப்பட்டான்; அவனுக்கு ஓராத்மாவுண்டு, அவன் தாமரையிற் றண்ணீரைப்போலுள்ளவன்; அவன் ப்ரகிருதியின் குணங்களால் கட்டுண்டுத் தன்னிலைமாறி மூடனாய் இருக்கின்றான். மூடனாய்ப்போனபடியால் ஆத்மாவினிடத்திலுள்ளவனும் பிரபுவும்பகவானுமாகிய பிரேரகனைக்காணவில்லை. எ—ஆ

(வி—ரை.) முன்மந்திரத்தில் பூதான்மாவென்று குறித்தது இச்சரீரத்தையே எனவற்புறுத்திக்காட்டுகின்றார். இனி எவன் சரீரமென்பதாதியால், இனி எவன் சரீரம் என்றவிடத்திலும், அவனே பூதாத்மாவென்றவிடத்தும் ஆண்பாற்சொல்லால் சரீரத்தை விசேஷித்தது பூதாத்மாவென்ற ஆண்பாற்சொல்லைநோக்கியே "அனுவதிக்கப்படுவதும் விதிக்கப்படுவதுமான இருபொருள்களுக்கு ஒற்றுமையைக் குறிக்க உபயோகிக்கப்படும் சுட்டுச்சொற்கள் அல்லது பொதுப் பெயர்கள் (ஸர்வநாமங்கள்) அவ்விரண்டினுள் எதன் பாலையாவது ஏற்றுக்கொள்ளுமியல்பின" வென

ஆசிரியர் கையடனார் "க்ஷயமௌனித்ருஹஸ்ஸ: = இனிகேஎன்ற விடத்து சத்தம் யாது" என்றமாபாடிய வாக்கியத்தின் உரையில் நிரூபித்தாராதலினென்க. அவனுக்கு = முற்குறித்தபடி அசேதனமாயினும் சேதனமாய்த் தோன்றும் பூதாத்மாவுக்கு ஓராத்மா = ஸத்தையைக்கொடுப்பவன், சேதனன், அதிஷ்டாதா அபிமானி; உண்டு = இருக்கின்றான்; அவ்வாத்மாவுக்கு இச்சரீரம்பந்தமாயின் அவன் எப்படி ப்ரம்மமென்பதை நிரூபிக்கிறார், அவன் தாமரையில் என்பதாதியால்; தாமரையில் = தாமரை இலையில் தண்ணீரொட்டாதது போல இவனிச்சரீரத்திலிருப்பினும் அதனுடனியல்பில் சம்பந்தமற்றவனே என்பதுபமானத்தின்கருத்து. அங்ஙனமவனுக்கு பந்தமில்லாவிடில் ப்ரத்யக்ஷமாய்த்தோன்றும் பந்தமவனைப்பற்றியதெவ்விதம் என்ற ஆசங்கை நிகழ்ந்துழியதனை 'ப்ரகிருதியின் குணங்களாலென்பதாதியால். மாற்றுகின்றார். பிரகிருதியின் குணங்களால் அனாத்மாக்களிடத்துத் தானென்ற புத்திமுதலிய குணங்களால். அவைகளே கர்த்திருத்துவம் போக்திருத்துவம்முதலியனவுமாகும். காரணகுணங்களாகிய ஸத்வம் முதலிய காரணகுணங்களுமவையேயாம். கட்டுண்டு = தன்ஸ்வரூபம் மறையநின்று, அதாவது தன்னை மறந்து (அதனாலேயே;) தன்னிலைமாறி = தன்பூர்வஸ்வரூபம் மாறினாற்போல; மூடனாய் = சுரூபவிருத்தமான துக்கங்களை யடைந்து இருக்கிறான்; இதனாலவனுக்கு பிரபஞ்சபந்தமானது அத்தியாஸ பலத்தாலென்றேற்பட்டது. தன்னையே கர்த்தாவாகவும் போக்தாவாகவும் நினைத்து ஸர்வப்பிரபஞ்சங்களையும அகந்தை மமதைகளுக்கு விஷயமாக்கித் தம்மிடத்து சன்னிகிதமாயுள்ள பிரேரக சுரூபமான ஸவிசேடப்பிரம்மத்தையும் அறிந்தானில்லை என்பதை மூடனாய்ப் போனபடியாலென்பதாதியால் நிரூபிக்கிறார். மூடனாய்ப் போனபடியால் = மேற்குறித்தவாறு மயக்கமுற்றபடியால்; ஆத்மாவினிடத்திலுள்ளவனும் = அதிசரீரத்தில் ஸ்வரூபபூதனாய் நிற்பவனும் (தமாத்மஸ்தம் யேநுபஸ்யந்தி தீராஸ்தேஷாம் ஸுகம் சாஸ்வதம் நேதரேஷாம்) என்ற தீரர்கள் ஆத்மாவினிடத்திலுள்ள அவனைக்காண்கின்றார்கள் அவர்களுக்கே சுகம் மற்றவருக்கில்லை என்று வேதங்கள் நிரூபிக்கின்றமையால், பிரபுவும் = சுவதந்திரனும் எல்லாபிராணிகளின் விருத்திகளுக்கு பிரேரகனும் (உதாஸீநவத

[illegible]) மகான் ப்ரபுவன்றோ புருஷன், ஸத்துவத்திற்கிவன்பிரேரகன் என்றசுருதியால் பகவானும் = அதிப்ரசித்தமாகிய ஷட்குண பரிபூர்ணனும். அப்பிராகிருததிவ்யமங்களகுணங்களுக்கு இடமாயுள்ளவனும் அஜனம் அவ்யயம்முதலியகுணங்களுக்கிடமாயுள்ளவனும்உமாபதியாதலால் மாயாசபளனும் பிரேரகனை = திரோதை என்ற சக்தியால் பந்தவதுவாயும் எல்லாகருமானுஷ்டானங்களுக்கும் யோக்கியமானசரீராதிகளைக் கொடுத்தருள்பவனும் (ஆனபரமேசுவரனை) காணவில்லை = அறிந்தானில்லை. ([illegible]) என்றிப்பொருளையே வேறுசுருதிகளும் கூறுகின்றன. (இவன்பொருள் சுவேதாசுவரத்தில்) இவ்வளவால் பூதாத்மா ஜீவாத்மா ப்ரம்மாத்மாக்களுடைய சுரூபமுமிலக்கணமுஞ்சொல்லப்பட்டது. சிஷ்யர்களுக்குபூதாத்ம சம்பந்தத்தால் சுத்தவஸ்துவினிடத்து ஜீவத்துவம் தோன்றியதெனவும், அஃதொழிந்து பிரம்மபாவத்தைப்பெருதற்குமேற்குறித்த இலக்கணங்களுடைய ஸவிசேஷ பிரும்மத்தியானமே ஏதுவாமென நிரூபிக்கப்பட்டதுபோல் முடிந்தது. எ—து.

அவதரணிகை.

கேட்போருக்குத்தெளிவுக்காக இவ்வாத்மாவுக்கு பூதாத்மதாதாத்மியாத்தியாஸத்தாலுண்டாகுமனர்த்தபரம்பரையைகுறிக்கிறார்,

[illegible]

(எ—ரு)

(இ—ள்) குணங்களால் தபித்துக்கொண்டு கலக்கமடைந்து அஸ்திரனாய், சஞ்சலனாய், அலைவானாய், ஆசையுள்

னவனாய், ப்ரவிருத்தியடைந்து அபிமானியாய் நான் எனது இது என்று நினைத்துத் தானே தன்னைக் கட்டிக்கொள்ளுகிறான். வலையால் பக்ஷி (தன்னைக் கட்டிக்கொள்வது) போல செய்தவற்றின் பலன்களாலாக்கிரமிக்கப்பட்டுச் சுழல்கின்றான். எ—து

(வி—ரை) குணங்களால் = ஸத்துவம்முதலிய குணங்களால் தபித்துக்கொண்டு = ஆதிபௌதிகாதி முத்தாபங்களைப்பெற்று, கல்கமடைந்து = சுபாவத்திலுள்ள நிர்மலத்தன்மை யொழிந்து, அஸ்திரனாய் = உதாசீனந்தொலைத்தவனாய், சஞ்சலனாய் = புதிய விடயங்களைக்காண்பானாய், ஆலவானாய் = அனைவேனுமென்று நினைப்பானாய், ஆசையுள்ளவனாய் — விருப்பமிகுதி யுள்ளவனாய் அதாவதெப்பொழுதும் விடயத்தில் கட்டுண்டவனாய், பிரவிர்த்தியடைந்து = அவைகளைப்பெறமுயன்று, அபிமானியாய் = பற்றுள்ளவனாய், அப்பற்றை விரித்துக்காட்டுகின்றார் நானென்பதாதியால். சரீராதிகளான அனாத்மாக்களில் நானென்பதும் மக்கள் மானிலம் மங்கைகளிடத்து எனதென்பதும் அனுபவத்திற்கேற்றவாறு கூட்டத்தக்கது தன்னை = சுத்த ஸச்சிதானந்தனாகிய சொரூபத்தை, கட்டிக்கொள்ளுகிறான் = பந்தத்துக்காளாகுகிறான், அதில்திருஷ்டாந்தம் கூறுகிறார்- வலையில்பட்சிபோலவென்று, எங்கும் சுதந்திரமாய் சஞ்சரிக்கத்தக்க பட்சிகள் அற்பபிசிதையிலாசைகொண்டு வேடுவன் வலையிற்பட்டுக் கட்டுண்டு மாண்டுபோவதுபோலவென்பதுகருத்து, செய்தவற்றின் = செய்தபுண்யபாவங்களின், பலன்களால் = சுகதுக்காதிகளால் ஆக்கிரமிக்கப்பட்டு = வசப்படுத்தப்பட்டு. சுழல்கிறான் = பெருமயக்கம்பெறுகிறான், எ—து

அவதரணிகை

இனி அத்தியாசத்தால் தோன்றும் அனர்த்தபரம்பரைகளை வேறுவேதவாக்கியங்களுமிங்ஙனமே குறித்தனவாமெனமென்மேலும் எடுத்துநிரூபிக்கிறார்.

[illegible]
[illegible]

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible] (௬—௯)

(இ—ள்) இனிமேலிட்டத்தினுஞ்சொல்லப்பட்டது. என்கர்த்தாவே! அவித்யையென்கிற பூதாத்மா; காணங்களைக் கொண்டு உள்ளே புகுந்து தேஹத்தையுடைய சரீரமே ப்ரேரணஞ்செய்கின்றது. எப்படி இரும்புக்குண்டானது நெருப்பில் காய்ந்து கர்த்தாக்களாலடிக்கப்பட்டு பலவகையாகின்றதோ அப்படியேயல்லவோ இந்த பூதாத்மா சரீரத்தால் வசப்படுத்தப்பட்டு குணங்களாலடிக்கப்பட்டு பலரூபங்களைப்பெறுகின்றான். இனி அது முக்குணசமுதாயமும் என்பத்திநான்கு லட்ச யோனிகளாய் பரிணமிக்கும் பூதகணமுள்ளதோ அதுவே பலரூபங்களாம் அவைகளாகிய இந்தகுணங்கள் புருடனால் ப்ரேரிக்கப்பட்டு சக்கிரமானது குயவன் சக்கிரத்தால் (ப்ரேரிக்கப்படுவதுபோல் சுழல்கின்றது) எப்படியிருப்பினும் அடிக்கும்போழ்து அக்னியுள்ள அக்னியடிபடுகிறதில்லையோ அப்படியே இந்தப்புருஷனடிபடுகிறதில்லை; இந்த பூதாத்மா அந்தஅடங்களைந்து சுற்றப்படுகின்றது.

(வி - ரை) மேலிட்டத்திலும் = அதிகாரசேதப்பாகங்களிலும்ம் கிரகசுமைகையில் [illegible] சொல்லப்பட்டது = [illegible]

த்துரைக்கப்பட்டது. அதுஎவ்விதமெனில் அதனைவிளக்குகின்றார் "எவன் கர்த்தாவோ" என்பதாதியால். கர்த்தா = சரீரத்தைத்தானென்றபிமானித்து சரீரமயமாய் நிற்குமாத்மா இங்குசரீரமென்றே குறிக்கப்பட்டான். கரணங்களைக்கொண்டு = ஞானேந்திரியம், கர்மேந்திரியமென்ற இருவகை புலன்களைக்கொண்டு, உள்ளே புருஷனையுடையசரீரமே = தம்மால் அதிட்டிக்கப்பட்டசரீரத்தாத்மியமுள்ளவனும், பிரேரணஞ்செய்கின்றது = ஒவ்வொருகன்மங்களிலும் முயலச் செய்கின்றான் என்றதனால் அகந்தையின் ஆதிக்கியாலசரீரத்திடத்தமைந்த இந்திரியங்களால் சரீரத்தையவைகள் சென்றவழி செலுத்திப்பல்வகைய அநர்த்தங்களுக்காளாகின்றான். அதற்கு திருஷ்டாந்தங் கூறுகின்றார் எப்படி என்பதாதியால், இரும்புக்குண்டானது நெருப்பில் காய்ந்து = நெருப்புமயமாய்த் தோன்றும் நிலைமையிற் கர்த்தாக் களாலக் கருமான் முதலியோரா லடிக்கப்பட்டுப் பலவகையாகின்றது. இயல்பில் வெகுகடினமானதாயினும் இது நெருப்பின் சம்பந்தத்தால் இளகுவதுபோல சரீரத்திடத்தமைந்த அகந்தையா லிவ்வாத்மாவும் சுகதுக்கங்களுக்கு வசப்பட்டுப் பல ஜன்மங்களைப் பெறுகின்றானென்பது திருஷ்டாந்த தார்ஷ்டாந்திகங்களால் முடிந்ததோன்றும், முக்குண சமுதாயம் = முக்குணங்களின் பரிணாமம்; எண்பத்துநான்கு லட்சயோனிகள் = இது சம்பிரதாய வசனம்; பூதகணம் = பிராணிகளின் தொகுதி; அவைகளே புலரூபங்கள் என்பதிதன் பொருள். அவைகளாகிய = இச்சரீரசொரூபங்களாகிய. குணங்கள் = முக்குணங்கள்; புருஷனால் பிரேரிக்கப்பட்டு = ஆத்மாவின் சன்னிதியில் அசைவுள்ளதாய்; சக்கிரமானது மருசக்கிரத்தால் சுழல்வதுபோல = ஒருசக்கரத்தோடு நகரத்தால் சுழட்டப்பட்டும் மறுசக்கிரம் அதனால் மோதுண்டு சுழல்வதுபோல ஒருசரீரம் ஆத்மாவின் சன்னிதியில் சேஷ்டிக்கத் தொடங்கி அதனால் மற்றொரு சரீரத்தையும் உண்டாக்குகின்றது: என்பது கருத்து. அங்ஙனமாயின் அந்தச் சுகதுக்கங்கள் சுத்தாத்மாவைப்பற்றுமென சங்கை நீக்க அச்சங்கையை எப்படி இரும்புக் குண்டை என்பதாதியால் நிராகரிக்கின்றார்: எப்படி இரும்புக் குண்டை யடிக்கும்பொழுது அதனிடமுள்ள அக்கினியடி படுகிறதில்லையோ அப்படியே இந்தப் புருஷனடி படுகிறதில்லை = மற்றடிபடுவது சுக

துக்கங்களை யநுபவிப்பது கேவலாத்மாவன்று. மற்று அசத்தையால் சரீரதாதாத்மியம் பெற்ற அவனே என்பதுகருத்து. இவ்வகை பூதாத்மாவுக்கு இவ்வகை நிலைமை வந்த தற்கேது கூறுகின்றார். அதனுடன் கலந்து நிற்றலாலென்று = இஃதாத்மா, இப்பீதனாத்மாவென்ற பாகுபாடற்று ஒன்றை மற்றொன்றாக் கினைத்து இரும்புநெருப்பும் போலக் கலந்து ஒன்றாய்த் தோன்றுந் நிலைமையில்நிற்றலால். ௭—௨

அவதரணிகை

வேறு பிரமாணத்தையும் நிருபிக்கின்றார்.

அதாந்யத்ராப்யுக்தம் ஶரீரமிதம் மைதுநாதே
வோத்பூதம் ஸம்விதபேதம் நிரய ஏவ
மூத்ரத்வாரேண நிஷ்க்ராந்தம் அஸ்திபிஶ்சிதம் மாம்ஸேநா
நுலிப்தம் சர்மணாவபத்தம் விண்மூத்ரபி
த்தகபமஜ்ஜாமேதோவஸாபிரந்யைஶ்ச மலைர்
பஹுபி: பரிபூர்ணம் கோஶ இவாவஸ
ந்நேதி || ௭—௩

(இ—ள்) இனி வேறிடத்திலுஞ் சொல்லப்பட்டது. இந்தச் சரீரம் மைதுனத்தாலேயே உண்டானது. அசேதனம் நரகமென்று சொல்லக்கூடிய மூத்திரத் துவாரத்தால் வெளிவந்தது. எலும்புகள் நிறைந்தது. மாம்சத்தால் பூசப்பட்டது. தோலால் போர்த்தப்பட்டது. மலம், மூத்ரம், பித்தம் கபம், மச்சை, மேதஸ், வஸை முதலியவைகளாலும் வேறனேக மலங்களாலும் பரிபூரணமாய்ப்பணங்களால் நிறைக்கப்பட்ட பொக்ஷம் போலிருக்கின்றது. ௭—௩.

(வி—ரை.) வேறிடத்திலும் = கர்ப்போபநிடதம் முதலிய விடத்திலும்; சொல்லப்பட்டது = விரிக்கப்பட்டது; இந்தச்சரீரம் = மனிதர், விலங்குகள், பறவைகளென வ்யவஹரிக்கப்படும் ஜங்கம சரீரங்கள்; மைதுனத்தாலேயே = ஆண்பெண்சாதியின்

ஆண் பெண் கலப்பாலேயே; உண்மையில் மைதுனமென்பது ஆகுபேராய் சங்கர்ப்பத்தை யுணர்த்துவதாய்க் கொள்ள வேண்டும். அங்ஙனமாயின் ஈசன் சங்கர்ப்பத்தாலுண்டானதாயினுமாகலாம். அல்லது இந்தச்சரீரமென்று குறித்தமையால் மனித சரீரமே இதற்கு இலக்ஷியமாயினுமாகலாம். அசேதனம்=எச்சரீரமாயினுமது ஜடமேயாம்; நரகமென்று சொல்லக்கூடிய=அதாவது எவ்விவேகிகளுக்கும் வெறுக்கத்தக்கது நரகமேயாதலால் அஃதெனவிஃது ரூபிக்கப்பட்டது; மூத்திரத்துவாரத்தால்=மூத்திரத்துவாரத்திற் கடுத்த யோனித்துவாரத்தால்; இதனிடத்தே எ. மூதாதுக்களின் வ்யவஸ்தை ஸம்பவிக்கின்றமையால் அவைகள் தனியே எடுத்து நிரூபிக்கப் படுகின்றன. இச்சரீரம் சேதனனாகிய ஆத்மாவினகத்தையால் ஆக்கிரமிக்கப் படாதவரைப் பிணமேயன்றி வேறெவ்வகையாலும் விவேகிகளுக்கு விரும்பத் தக்கதல்ல. எலும்புமுதலியதாதுக்கள்; மலம் முதலியவை இவற்றின் இலக்கணங்களை கர்ப்போபநிடத உரையில் காண்க. பணங்களால் நிறைக்கப்பட்ட பொக்கிஷமானது லோபிக்குப் பெரியபீடைக்கும் பயத்திற்கு மேதுவாவதுபோல என்பது உபமானக் கருத்து. எ-து

அவதாரிகை

இனி பலவகையாய் மேலுள் ஸூக்ஷ்மான சரீரங்களை யடைவதற்கு ஏதுவாயிவுள்ள பழக்கப்படுத்தப்பட்ட வாசனைகளை நிரூபிக்கின்றார்.

காமக்ரோதலோபமோஹபயவிஷா
[illegible] ஜரா ஶோகம்
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]

𑌷𑍍𑌟𑍇𑌷𑍍𑌵𑌭𑌿𑌷𑌙𑍍𑌗 𑌇𑌤𑌿 𑌰𑌾𑌜𑌸𑌾𑌃 𑌪𑍂𑌰𑍍𑌣 𑌏𑌤𑍈𑌃
𑌰𑌭𑌿𑌭𑍂𑌤 𑌇𑌤𑍍𑌯𑌯𑌂
𑌭𑍂𑌤𑌾𑌤𑍍𑌮𑌾 𑌤𑌸𑍍𑌮𑌾𑌦𑍍𑌰𑍂𑌪𑌾𑌣𑌿 𑌨𑌾𑌨𑌾𑌰𑍂𑌪𑌾𑌣𑍍𑌯𑌾𑌪𑍍𑌨𑍋
𑌤𑍀𑌤𑍍𑌯𑌾𑌪𑍍𑌨𑍋𑌤𑍀𑌤𑌿 ॥

௭—று

(இ—ள்.) வேதத்திலுஞ் சொல்லப்பட்டது. ஸம்மோகம், பயம், துக்கம், நித்திரை, சோம்பல், விரணம், ஜரை, ஓய்வு, தாகம், கார்பண்யம், கோபம், நாத்திகம், அஞ்ஞானம், மாத்ஸரியம், கரணங்கள் குறைதல், மூடத்தன்மை, லச்சையில்லாமை, நிந்தை செய்யப்படுதல், கர்வம், பொருவாயில்லாமை என்ற தாமஸகுணங்களுடன்கூடியும், திருஷ்ணை, ஸ்நேகம், ஆசை, லோபம், இம்சை, அதிருப்தி, திருஷ்டி, முயற்சி, ஈருஷியை, தன்னிச்சைபோல் நடத்தல், சபலம், ஒன்றைக்கவரும் விருப்பம், பொருளைச்சம்பாதித்தல், மித்திரனை அநுக்ரகித்தல், எங்கும் ப்ரதிக்ரகத்தைச் செய்வது, தனக்கனிஷ்டமான இந்திரியார்த்தங்களில் த்வேஷம், இஷ்டமான பொருள்களில் பெரும்பற்று என்பதாதி ராஜஸகுணங்களுடன் கூடியும், மேற்கண்டவைகளால் கட்டுப்பட்டு இந்த பூதாத்மா பலரூபங்களைப்பெறுகின்றான் பெறுகின்றானென்று. ௭—து.

(வி—ரை.) ஸம்மோகம் = ஒருபொருளின் உண்மையை அறியாது அதை விபரீதமாயறிந்து கொள்ளுதலென்ற மயக்கம்; பயம் = நடுக்கம் முதலியவற்றிற்கு ஏதுவானகுணம்; துக்கம் = ஸுகத்திற்கு எதிர்மறை; கருதியபொருள் கைகூடாமையாலும், வெறுக்கத்தக்க பொருள் தம்மை அணுகாதலாலும் உண்டாகக்கூடிய குணமென்பது பொருள். நித்திரை, சோம்பலிவை வெளி; விரணம் = மற்றைய சரீரத்தில் வ்ரணமுண்டாக்கச்செய்யும் நிக்ருணம்; ஜரை = கிழத்தனம்; கிழவனுக்குண்டாகக் கூடிய துயரம். கார்ப்பண்யம் = தெருக்காறு யிருத்தல்; கோபம் = காரணமின்றி எப்பொருளையும் கோபித்துக் கொள்ளுமியல்பு; நாத்திகம் = தெய்வமில்லையென்று இருமாந்து அஞ்ஞானமீதிடைமயிருத்தக்

செய்யுந் துர்க்குணம்; அஞ்ஞானம் = பரலோக விஷயத்தில் முற்றுமறிவில்லாமை; மாற்சரியம் = அபகாரஞ் செய்த வரிடத்துண்டாகும் கோபம்; கரணங்கள் குறைதல் = கண் காது முதலிய புலன்கள் குறைந்து குருடு, செவிடு என்பதாகி பெயர் பெறுதல்; மூடத்தன்மை = இஃது இன்னதென்று பகுத்தறிவின்மை; கூச்சமில்லாமை = மனதிற்கு வெறுக்கத்தக்க ஒரு தொழிலைச்செய்து அதனால் கூச்சமில்லாதிருத்தல்; நிந்தைசெய்யப் படுதல் = பிறர் தம்மைப் பரிபவிக்கும் நிலைமையிலிருத்தல்; கர்வம் = தம்மிடத்திலாப் பெருமையை அல்லதுள்ள பெருமையைத் தாம்மிகப்படக் கொண்டாடல்; பொறுமையில்லாமை = தம்மைப் போலேனையவுயிர்களை எண்ணுதலை என்ற தாமஸ குணங்கள். தமஸ்ஸு என்ற து குணத்தால் அவையும் முற்றும் பாவ ஏதுக்களே இங்கு குறிப்பிடப்பட்டன. மேலே ப்ரவிருத்தியையே சொரூபமாயுடைய ரஜோகுணத்தின் காரியத்தைக் குறிக்கின்றார் திருஷ்ணை என்பதனாதியால். திருஷ்ணை = தமக்ககப்படாதனவும் முதலியவை தமக்கு வேண்டுமென்றெண்ணம்; ஸ்நேகம் = காரணமில்லாது ஓரிடத்துண்டாகும் பற்று; லோபம் = அகப்பட்டனவும் முதலியவற்றில் அளவு கடந்த அன்பு; ஆசை = பத்தினி, பசு முதலிய விடத்துண்டாகும் விருப்பம்; ஹிம்ஸை = மற்றவர்களுக்குத் துக்கத்தையுண்டாக்குதல்; அதிருப்தி = கிடைத்ததைக் கொண்டு சந்தோஷமுடையாமை; திருஷ்டி = உலகவறிவு; முயற்சி = அறவில்லாமைத் அதாவது ஓயாது பிரவிருத்தி மார்க்கத்திலேயே நிற்றல். ஈருஷை = பொறாமை; பிறர் பெருமைக் கண்டுழ் தீயோர்க் குண்டாந்திர்க்குணம். தன்னிச்சைப்போல் நடத்தல் = நிர்க்கதர்மிகளை பெரியோர்களிய மித்தருளிய சாஸ்திரம் சம்பிரதாயம் முதலியவற்றை கடந்தொழுகுவது; சபலம் = ஒன்றிலுந்நிலையற்று புத்தி; இன்னதைக்கவரும் விருப்பம் = பிறர் பொருளை எந்தப் பல வழியிற் சேர்த்தல்; பொருளைச் சம்பாதித்தல்; மித்திரனை யனுக்கிரகித்தல் இவ்விருவிடயங்களிலு மபிமான மேலிட்டால் புண்யபாவங்களைக் கவனியாது முயற்சித்தல்; எங்கும் பரிக்ரகத்தைச் செய்வது = எவ்விடத்தும், எக்காலத்தும், எவனிடத்தும். எதனையும் ஏற்றுக்கொண்டு அது சகிக்கொள்ளுதல்; தனக்கநிஷ்டமான இந்திரியார்த்தங்களில் துவேஷம் = மக்களினிகள் சொல்லழியாமை, பரிவாச

ங்கள் சொல்லும் வழியிலாவது, ஓர் பொருளிடத்து வைரம்வை த்தல்; அல்லது தம்புலன்களுக்கே வெறுக்கத்தக்கபொருள்களி டத்துதாசீனமாயிராமல் கோபித்தல்- இஷ்டமான பொருள்களி ல்ப்பெரும்பற்று = அளவை மீறிய பற்று எங்கும் குணமாவதில் லையாதலால் அதனை இத்தொகுதியிற்சேர்த்தாரென்க. ராஜஸ, குணங்கள் = ப்ரக்ருதியில் ராஜஸகுணமென்ற குணத்தின் விகா ரங்கள்; கட்டுப்பட்டு = அக்கன்மப்பயன்களை யனுபவிக்கநேர்ந்து. பு ல்ருபங்களை = தேவர்மக்கள்விலங்குகள் முதலியசரீரங்களை; பெறு கின்றான் = சம்சாரியாகின்றான்; இவ்வளவால் முன்னிலும் விரிவா கச்சமாதான மளிக்கப்பட்டதென்க. இருமுறைகூறியது அத்தி யாயத்தின் இறுதியைக்குறிக்க. எ—று

மூன்றாம் பிரபாடகம் முற்றுப் பெற்றது.

நான்காம் பிரபாடகம்.

அவதரணிகை.

இனிச்சம்சாரமூலம் யாதென வினவியசிஷ்டர்கள் அவித்தையேயெனவறிந்து அஃதொழியும் வழியை ஆசிரியனைக்கேட்பதும் அதற்கு அவருபதேசிக்கும் முறையும் நான்காம் ப்ரபாடகத்திற்சொல்லப்படுமாகவே அதற்குச்சிஷ்டர் வினாவை முதலில் குறிக்கின்றார்.

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]|| எ—து

(இ—ள்) அந்த ஊர்த்துவரேதஸ்வர்கள் அதிகவாச் சரியத்தையடைந்து ஆசாரியனை மிகவாய் வணங்கிச் சொ ன்னார்கள். ஓ பகவானே உமக்கு நமஸ்காரம். நீர் எங்களை

அனுக்ரகிக்கவேண்டும் வேறுகதியில்லை. இந்தபூதாத்மாவுக்கு அதிதியெவன். எவனாலிதனைவிட்டு ஆத்மாவினிடத்திலேயே ஸாயுஜ்ஜியத்தை அடைவானென்று எ—து

(வி—ரை) அந்தமுனிகளும் விஷயத்தினருமையாலுமுபதேசத்தின் சாதுர்யத்தாலும் மிகவியந்து முன்னிலுமதிகமாய் உபசரித்து இவனொருவனை சத்குருவென்ற உறுதியடைந்து கேட்கும்கேழ்வியை இந்த பூதாத்மாவுக்கு என்பதாதியால் நிரூபிக்கின்றார். இந்தபூதாத்மாவுக்கு=சரீரத்தினிடத்து அபிமானம்வைத்து அதன்மயமாய் வ்யவகரிக்கப்படும் பிரத்யகாத்மாவுக்கு; அதிதி= முன்னினையாது வந்து ஸர்வதேவமயனாய் அர்ச்சிக்கப்பட்டு பரமபுண்ய பலத்தைக்கொடுக்கும் அதிதியைப்போன்றவன்; எவனால் =எவனதருளால்; இதனைவிட்டு =இப்பிரபஞ்சத்தையொழித்து; ஆத்மாவினிடத்திலேயே=சொரூபத்தினிடத்திலேயே பரார்த்தாந்தகாலத்தையாவது,கைலாஸாதிமகாலோகங்களையாவது எதிர்பார்க்காது இங்கேயே;ஸாயுஜ்யத்தை=அத்யந்தைக்ய மெனப்படும் மோட்சத்தை அதாவதவித்யாநாசத்தைப்பெருவானென்று. எ-று

அவதரணிகை.

மேலேயவர்களுக்குச்சத்குருபந்தசத்தைக்குறிக்கின்றார்.

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]

நடஜவக்ஷணவேஷம், [illegible]
[illegible] ||
[illegible] |
[illegible] ||

(இ—ள்) அவர்களைப்பார்த்து உபதேசித்தார். வேதிடத்திலுஞ் சொல்லப்பட்டது. மகாநதிகளில் அலைகளைப்போலுள்ளவரிவர். இவனுக்கு முன்னே செய்யப்பட்ட கர்மமானது நிவர்த்தகமாயுள்ளது. ஸமுத்திரத்தின்கரையைப்போல் கடக்கமுடியாததுஇவனுக்கு மிருத்யுவின் வரவு. கெட்டது நல்லதுமான கர்மங்களின் பல்ஸ்வரூபங்களான பாசங்களால் பசுவைப்போல்க்கட்டுப்படும். கட்டிலகப்பட்டதைப்போல் சுதந்திரமிராது, எமன் ராஜ்யத்திலுள்ளதைப்போல் வெகுபயமான அவஸ்தையைப்பெற்றிருக்கும். கள்ளைக்குடித்தவனைப்போல் வாசனையுள்ளகள்ளால் மயங்கியிருக்கும். பாபக்கிரகத்தால் பிடிபட்டதைப்போலச் சுழலும். பெருநாகந்தீண்டினாற்போல் ஆபத்துகளால் வருந்தும்; பெரியதோரிருட்டிலகப்பட்டதைப்போல் ஆசையிலகப்படும். இந்திரஜாலத்தைப்போல் மாயாமயமாகக்காணும். ஸ்வப்னத்தைப்போல்ப்பொய்யாகப்போகும். வாழைத்தண்டைப்போல்சாரமற்றிருக்கும். கூத்தாடியைப்போல்ஒருக்ஷணமுள்ள வேஷமுடையதாகும். சித்திரமுள்ளசுவரைப்போல்ப் பொய்யழகையுடையதாகும்என்றும்மேலுஞ்சொல்லப்பட்டது. சத்தப்பரிசம் முதலியஎந்தவிஷயங்களுளவோ அவையனர்த்தங்களாயிருக்கின்றன. எவைகளிடத்து ஆசைவைத்த பூதாத்மா பரம பதத்தைநினைக்கமாட்டான்.

(வி—ரை) வேதிடத்திலும், [illegible]
[illegible]
[illegible]

எப்படிநதிகள் ஓடிசமுத்திரத்தையடைந்துசொரூப்த்தைதுலைத்து
க்கொள்ளுகின்றனவோ இங்ஙனம்புருஷனிடத்தமையும் பதினாறு
கலைகள் புருஷனையடைந்து ஸ்வரூபம் மாறுகின்றன. என்றவே
றுசுருதிகள் சொன்னபடி ப்ரம்மத்தினிடத்தே ஆத்மாக்கள்மகா
நதிகளில் அலைகளைப்போலுள்ளவர். இவனுக்கு=இந்தச்சீவனுக்
கு;முன்னே செய்யப்பட்டகர்மமானது =பூர்வஜன்மங்களிலுள்ள
கர்மமானதுநிவர்த்தகமாயுள்ளது இவனையுலகத்தில்த்திருப்புவதாயு
ள்ளது'எப்படியகண்டமான ஜலத்தினிடத்துகாற்று அலையையுண்
டாக்குகின்றதோ அங்ஙனம்மாயைபிரும்மத்தினிடத்து ஜீவர்களைத்
தோற்றுவைக்கின்றது. அதற்குதிருஷ்டாந்தத்தைக்குறிக்கின்றார்ச
முத்திரத்தின்,கரையைப்போலென்று. எங்ஙனம் சமுத்திரம்நீர்ச்
சாதியும் கரைநிலச்சாதியுமாய் வெவ்வேறுசாதியாயிருந்தும் இது
தென்சமுத்திரம் இது கீழ்சமுத்திரம் என்பதாதிவேற்றுமைகளை
கற்பிக்கின்றது, அலைமுதலியவற்றையுண்டாக்குகின்றது. இயல்பில்
இனிமைபொருந்தியநீரைஉவர்நீராக்குகின்றது. நுரையுண்டாக்குகி
ன்றது கொந்தளிக்கச்செய்கிறது. அங்ஙனமே இம்மாயையும்பிரு
ம்மத்தை பலவாறாகக்காட்டுகிறது. துயரமுடையதாக்குகிறது. டுப்
க்கத்தைத்தருகிறது, வேறுவிபரீதங்களை மிகச்செய்கிறது. இங்ங
னம் சமுத்திரத்தின் கரையைப்போல் மேலே குறித்தகன்மத்தை
யே [மீண்டும் விசேடிக்கின்றார் கடக்கமுடியாதது என்று. கடக்க
முடியாதது= அற்புதத்தியுடையார்க்கும்ஆசையினருள்பெறாதார்
க்கும் இதனைக்கடப்பது மிகவரிதாம் ஆன்மாக்களுக்கு இதுவேமர
ணவேது என்கிறார் மிருத்யுவின் வரவு என்பதால்; மிருத்யுவின்வ
ரவு= மிருத்யுவின்வரவிற்கேது; நித்யமாயுள்ளஆத்மாவுக்கு மர
ணாதிவிகாரங்கள் அவித்யா சம்பந்தத்தினாலேயே என்பதுகருத்து
இவனுக்கு மிருத்யு உண்டாவதைக்காட்டுகின்றார் கெட்டதும் நல்
லதுமான என்பதாதியால். கெட்டதும் நல்லதும்= பாவமும் புண்
யமும்; அவற்றின் பலரூபங்களான பாசங்களாவன நரக-ஸ்வர்க்கா
திகள், பசுவைப்போல்க் கட்டுப்பட்டும் = எங்ஙனம் பசுக்கள்
பட்டுபெருத்தி சங்கலைமுதலியவற்றால் க்கட்டுப்படுகின்றன. அது
போல் இதுவாம்; ஆத்மாவென்ற விசேஷ்யத்தை வருவித்துக்கூ
ட்டுக. சீடர்க்கு ப்பற்றுமிகவேண்டி வேறுபல திருஷ்டாந்தங்
களையும் காட்டுகின்றார். கட்டிலகப்பட்டதைப்போல =சிறையி

லகப்பட்டதைப்போல; சுதந்திரமிராது= வெளி. இதனை உற்று நோக்குவாரான விவேகிக்கு அதுதோன்றும் வழியை எமன்ராஜ்யத்திலென்பதாதியால் காட்டுகின்றார். எமன்ராஜ்யத்திலுள்ளதைப்போல = எமன்ராஜ்யமென்பது நரகங்கள் அவற்றிலுள்ள அவிவேகி எப்படி தான் விரும்பிய பொருள்களையெல்லாம் விட்டு அதற்கு விபரீதமான கடுந்துயரமடைந்து கஷ்டப்படுகின்றானோ அது போலவே இதுவும்; வெகுபயமான அவஸ்தையைப் பெற்றிருக்கும்= ஸ்வர்க்கமென்பது துன்பமிலா யின்பமாவதுபோல நரகமென்பது இன்பமிலாத்துன்பமாதலாலென்க. வேறு திருஷ்டாந்தங் கள்ளைக் குடித்தவனைப் போலென்கிறார். கள்ளைக்குடித்தவனைப் போல் =எங்ஙனம் தனக்கனிஷ்டத்தைக் கொடுக்கும் கள்ளை இஷ்டமெனக் கொண்டு குடித்து மயங்குகின்றான். அவனைப்போல பரலோகத்திற்கு விரோதமான பெண்கள் முதலிய பல பொருள்களில் மயங்கித் தன்னிலை கெட்டு இவனிருப்பானென்பதை வாஸனையுள்ள கள்ளால் மயங்கி நிற்குமென்று நிரூபித்தார். வாஸனையுள்ள கள்ளென்பது புருடனுக்கு மயக்கத்தைக் கொடுக்கக் கூடிய பெண் முதலிய வைகளையுங் குறிக்கும். பாவக்ரகத்தால் பிடிபட்டதைப் போல்ச் சுழலும்= பாவக்ரக மென்பது பிசாசங்களின் பேதம்; பெருநாகந்தீண்டி நாற்போல் ஆபத்துக்களால் வருந்தும் = பெருநாகந் தீண்டினவனுக்கு மீட்சி இல்லாதிருத்தல் போல இக்கர்மநாகங் கடித்தவனுக்கும் மீட்சி மிகவரிதென்றேற் பட்டது. பெரியதோரிருட்டிலகப்பட்டதைப்போலாசையிலகப்படும் =பெரியதோரிருட்டிலுள்ளவன் மேடுபள்ளங்களையும் பாம்பு பூமாலைகளையும் எங்ஙனம் பகுத்தறியமாட்டான்; அங்ஙனமே ஆசையிலகப்பட்டவனும் கொள்ளத்தக்கது, தள்ளத்தக்கது என்ற பகுத்தறிவும் பெறமாட்டான். இவ்விடத்தில் முறையே பசு, சிறையிலுள்ளவன், நரகத்துள்ளான், குடிகாரன், பிசாசம்பிடித்தவன், பாம்புகடித்தவன், இருளிலகப்பட்டவன, இவர்களை திருஷ்டாந்தமாகக் காட்டினமையால் இவனது பந்தம் பல சக்தியுடையதென்றேற் பட்டது. பசு திருஷ்டாந்தத்தாலிவனை ருசி பத்தனென்றேற்படுகிறது. பசுச்சாதிக்கு கட்டுண்டிருத்த லியல்பாதலால். சிறையிலடைபட்டவனைக்காட்டியது தன்வினையாலடைந்த பந்தத்திற்கு

வமானம். சிறையிலே தீச்செயலுடைய திருடர்முதலியவர்களே
அடைக்கப்படுவாராதலால். நரகத்திலுள்ளானை திருஷ்டாந்தமா
யெடுத்தது மற்றவரறியாது ரகஸ்யமாய்ச் செய்த பாவபலானுப
வத்திற்கே நாஸ்திகனாயிருந்து இங்கு செய்யும் பாவங்களெல்
லாம் மறுபிறப்பிலிவனை விடாதென்பது இதன் கருத்தாம். கு
டிகாரனை உவமித்தது தமக்கனிஷ்டமான வஸ்துவை இஷ்ட
மென்று மயங்கி அதையேற்றுக்கெடுவதற்கே. பிசாசம் பிடித்த
வனைக் காட்டியது தமது அசுசியால் நேருந் துபரத்திற்கே. பாம்
புகடித்தவனைக் காட்டியது தாமெதிர் பார்க்காது மரணாதிகளைப்
பெறுதற்கே. இருளைக்காட்டியது தம்து புலன்களுக்குதகக்க உ
தவிகளின்மையால்நேரிடும் உபத்திரவத்தைக் குறித்தற்கே. ஆக
வே முடிந்தது யாதெனில் "தன்னியலானுங் கன்மத்தாலும்நாத்தி
கத்தாலும் பகுத்தறிவின்மையையச் சுதந்திரம் அநித்யமாதலும்
அவாநிலையானும் பந்தம் முண்டாம் புருடர்க்கன்றே" என்பது. இனி
உள்ளபந்தத்தைதிருஷ்டாந்தங்களால் விளங்குகிறார் இந்திரஜா
லத்தைப்போல் மாயாமயமாகக் காணுமென்பதாகியால். இந்தி
ரஜாலமெங்ஙனம் ஜாலிகன் சங்கற்பத்தால் தோற்ற மாத்தி
ரையாகின்றது. அப்படியே இதுவாமென்க; ஸ்வப்னத்தைப்
போல்ப் பொய்யாகப் போகும் = எங்ஙனம் ஸ்வப்னந் தம் முன்
த்தம்மாலே கற்பிக்கப்பட்டு தமக்கே பலவனர்த்தங்களைக் கொடுக்
கின்றது அங்ஙனமே இஃதுமாம்; 'வாழைத்தண்டைப்போல் சா
ரமற்றிருக்கும் = தத்காலம் சாரமுள்ளதாய்த் தோன்றினுமது கா
லஞ்சென்று லழுகி துர்நாற்றம் வீசுமாதலால் அதுபோலவே இ
துவும் காலத்தால் விபரீதமாமென்பதிதன்கருத்து. கூத்தாடியை
ப்போலொருட்சண முள்ள வேஷமுடையதாகும் = இளமை முது
மைகள் சரீரத்தில் மாறுதலாமென்க. சித்திரமுள்ள சுவரைப்
போல்ப் பொய்யழகை யுடையதாகும் = சித்திரரூபமான மங்கை
மதலை, மாளிகைமுதலியவையவைகளுக் குரிய நல்லமைப்புப்பெற்
றிருப்பினும் அஃது காரிய காரியாகாததுபோல இஃதுமாமென்
க. ஆகவே இங்கு ஐந்து திருஷ்டாந்தங்கள் குறிக்கப்பட்டன.
அவற்றால் கிடைத்தது யாதெனில் இம்மாயாமய ப்ரபஞ்சம் தோ
ற்ற மாத்திரம், அனிர்வசனீயம், பரிணாமத்தில் விரசம், நிலைய
ற்றது, வஸ்துவல்லாதது என்பன. மேல் இங்ஙன்மாகிய அனாத்

மாவினிடத்துத் தானென்றும், தனதென்றும் அமைந்த வத்யா ஸத்தின் பயனைக் குறிக்கின்றார் மேலுஞ் சொல்லப்பட்ட தென்பதாதியால். சத்தம், பரிசம் முதலிய ப்ரபஞ்சங்கள் ஒரு பொருட்போற்றோன்றி உண்மையில் பொருளல்லாத வையாய் ஆத்மாவுக்கு பந்தரூபமாம் என்று. அப்பந்தமமைந்ததால் அவ்வாத்மாவுக்கு வுண்டாகும் கெடுதி யாதெனில் அதனை எவைகளிடத்து என்பதாதியால் நிரூபிக்கின்றார். பரமபதத்தையும் நினைக்கமாட்டான் = எவ்வளவு நல்லுபதேசங்களிருந்தாலும் நித்ய சுகமான ஸ்வரூபத்தையும் நினைக்க மாட்டான் பலபவங்களிற் செய்த புண்ய பரிபாகத்தால் இப்பற்றுகளொழிய முமுட்சுத்வந் தோன்ற அவனுக்கு பிரும்மவிசாரத்தில் பிரவிருத்தியுடாகு மென்பது கருத்து. பிரும்ம விசாரத்தில் பிரவிருத்திப்பவனுக் குமுதலில்தெரிந்து கொள்ளவேண்டிய அவித்தை யெனப்படும் அத்யாரோபமிவ்வளவால் குறிக்கப்பட்டதாம். இங்கு கேட்கும் சீடர்களுக்கு பிரும்ம சொரூபத்தில் விசாரசிரத்தை யுண்டானதாய் இருப்பதாலேயே ஸாதனபரிபூர்த்திசொல்லப்பட்டதாயிற்று. எ-று

அவதரணிகை-

இனி முன்மந்திரத்தினிறுதியில் பரமபதமென்று குறிக்கப்பட்ட ஞானத்துக்கேதுவான சித்த சுத்திக்கு முக்கியசாதனமான வைதிக கர்மத்தைப்புகழ்கின்றார்.

[illegible]

தே ஸத்த்வம் ஸத்த்வாத் ஸம்ப்ராப்யதே மந: || மந
ஸா ப்ராப்யதே த்வாத்மா ஹ்யாத்மாப்த்யா ந நி
வர்ததே || எ—று

(இ—ள்) இவனல்லவோ இந்தபூதாத்மாவின் பிரகிருதி. இவனுக்கு ஞானமுண்டாகும் வழி எதுவோ (அது) ஸ்வதர்மத்தை யனுசரிப்பது. தனதாச்சிரமங்களிலேயே இருப்பது. ஸ்வதர்மமே எல்லாவற்றையுங்கொடுக்கும். ஸ்தம்பமுங் கிளைகளுமாம் மற்றது. இதனால் ஊர்த்துவதேசத்தையடைவான். இல்லாமற்போனால் கீழேவிழுவான். ஸ்வதர்மமென்பது எது வேதங்களிற்சொல்லப்பட்டதோ அது. ஸ்வதர்மத்தைக்கடந்தவன் ஆச்சிரமியாகமாட்டான். ஆச்சிரமங்களிலேயுள்ளவனே தபஸ்வி எனப்படுவான். தபஸ்ஸு இல்லாதவனுக்கு ஆத்மஞானமுண்டாவதில்லை. கர்மசுத்தியுண்டாகாதெனச் சொல்லப்பட்டது தபஸ்ஸினால் ஸத்துவங் கிடைக்கும். ஸத்துவத்தால் மனங்கிடைக்கும். மனதால் ஆத்மாகிடைப்பான். ஆத்மாக்கிடைத்தால் நிவிருத்தியில்லை.

(வி—ரை) இந்தபூதாத்மாவின் = சரீராபிமானியாகிய ஜீவனது, பிரகிருதி = சொரூபஞானமானது சுத்தமான அந்தக்கரணத்தில் பிரதிபிம்பித்தாவது விருத்தி ஞானமாயினும் நிவிருத்தியைப்போல் புண்யகர்மமென்றுசொல்லப்படும். இங்கு அந்தக்கரணத்திற்குச் சுத்திசொன்னது பூர்ணசுத்தியல்ல. மற்றுமுன்னிலுமதிகமான சுத்தியே பரிபூர்ணசுத்தியுண்டானால் பிரும்மஞானமுண்டாகத்தடை இராதாதலாலென்க. அவ்வவஸ்தையைக் குறிக்கின்றார் இவனுக்கு ஞானமென்பதாதியால். ஞானமுண்டாகும்வழி எதுவோ = சித்தசுத்தியைச்செய்து அனல் பிரும்மவித்தையைத்தோற்றுவிப்பதெது. (அதுமேலேசொல்லப்படுவதொன்றும்) ஸ்வதர்மத்தையனுசரிப்பது = நித்ய நைமித்திகங்களையனுசரிப்பது. அதனையே விரித்தோதுகின்றார்; தனதாச்சிரமங்களிலேயே இருப்பது என்று தனதாச்சிரமங்களிலேயே தத்தமனுஷ்டானத்திலிருக்கும் பிரும்மசாரி கிருஹஸ்தன் வானப்பிரஸ்தன் ஸன்யாஸி என்கிறநா

ன்களுள் ஒன்றிலேயே இருத்தல் அவ்வாச்சிரமிகளுக்கு சுருதிமுத லிய நந்நூல்களால் விதிக்கப்படும் கருமங்களைவழாது நடத்தல் எத னுலிவ்விதமிவ்விதம் சுவயாச்சிரமதருமம் கட்டாயப்படுத்தப்படுகி றதென விஞ்ஞிகழாவழியதனைபபுகழ்கின்றார். ஸ்வதருமமே எல் லாவற்றையும் கொடுக்கும் என்று. எல்லாவற்றையும், = மக்கள் கருதக்கூடிய நற்பயனைத்தையும். கொடுக்கும் அனுஷ்டிப்பவ ன் கருதுவதுபோல ஒருவன் நிஷ்காமனாய் செய்வானானால் அவ னுக்கு சீக்கிரம் சித்தசுத்தியும் ஞானமுமே பயனுமென்பது கரு த்து. மற்றது = ஆசிரமதருமமன்றி மற்றுவழிகள் ஸ்தம்பமும் = மேற்கட்டையும் கிளைகளும் அதன்மேற்பட்டவைகளுமாம். இத னல் சர்வதர்மங்களும் சுவயாசிரம தருமமில்லாதவிடம் பயன்ப டாதனவாம் என்றது முடிந்தது. அதன்பயனை' இதனால், என்ப தாதியால் நிரூபிக்கின்றார். இதனால் = இந்தசுவயாச்சிரமதருமானு ஷ்டானத்தால் ஊர்த்துவதேசத்தை மேலுலகங்களையல்லது உத்த மபிருக்மஞானத்தை அடைவான் = பெருவான் கீதைமுதலிய சா ஸ்திரங்களில் சுயாச்சிரம தருமானுஷ்டானமே மிக்கச்சிரப்பிக் கப்பட்டபடியாலதுவே எல்லா நன்மைகளும் அடைவதற்கு மூல வேதுவாம். மற்றவை அதனுசாரிகளாம் என்றது தெளிவு. அங்ஙனமாயின் கஞ்சாநீக்குதல் கருணை முதலிய வைகள் ஸாமான்யதருமங்கள் ஆச்சிரமதருமங்களும் வருணதருமங்களும ன்றேயவை பயனன்றனவாவென ச்சங்கிக்கவேண்டாம். அவை கள் மக்கள் அதோகதியையடையாது காக்க சுவயாச்சிரமதரு மங்கள அவனுக்கு ஊர்த்துவகதியைக்கொடுக்கும் என்பது அதனு ட்கருத்தாம். அதனையே விரித்துக்காட்டுகின்றார் இல்லாமற்போ னால் கீழே விழுவானென்று. இல்லாமற்போனால் = சாமான்யத ருமங்களையும் அனுஷ்டிக்காமற்போனால; கீழேவிழுவான் = அ தோகதியைப்பெறுவான்; இதனால் ஸ்வதர்மங்களையும்சாமான்யதர் மங்களையும் அனுஷ்டிக்கவேண்டியதென்றேற்பட்டது. இத்தர்மங்க ளும்உலகவழக்கால்அறியக்கூடினவையோஎன்ற ஆசங்கைஉண்டா காவழியதன் சொரூபத்தை க்குறிக்கின்றார் ஸ்வதர்மமென்பதெ ன்பதாதியால். எது வேதங்களிற்சொல்லப்பட்டதோ அது = வே தவேதாந்தங்களில் எவ்வர்ணத்தவர்களுக்கு எவ்வாச்சிரமிகளுக்கு எவ்வித கர்மம் விதிக்கப்பட்டதோ அதுவே ஸ்வதர்மமாம். இதுஸ் வதர்ம விலக்கணம், வேதங்களிற்சொல்லப்பட்டது என்றமையா

வேதமொழிந்த மற்றதந்திரங்கள் தர்ம பிரமாணமன்றுமென்பது வெள்ளிடமலையாகும். ஆகவே வேததந்திரஸமானவாதம் அவைதிகமாம், அவ்விதம் வேதங்களிற் குறிக்கப்பட்ட ஸ்வதர்மங்களை விட்டு தந்திரம் முதலியவற்றிற் குறிக்கப் பட்ட கர்மங்களைக் கைக்கொண்டவன் வேத விகிதஸ்வதர்மஹீனனாகவே அவனைக் குறை கூறுகின்றார் ஸ்வதர்மம் கடந்தவன் ஆச்சிரமியாகமாட்டானென்று. அவ்வவ்வாச் சிரமங்களுக் குறிய வேடம் பூண்டிருப்பினும் அவன் ஆச்சிரமியாக மதிக்கப்பட மாட்டான். அவ்வவ்வாச்சிரமங்களுக்குறிய பயனைப் பெறமாட்டானென்பது கருத்து. ஆச்சிரமங்களில் தத்தமக்குறிய பயன் மட்டுமே கிட்டுமோ அல்லது வேறு குணங்களுமுண்டோவெனச் சங்கை நிகழ அதற்கு மேலான தவ நிலையுமுண்டாமென நிரூபிக்கின்றார் ஆச்சிரமங்களிலே உள்ளவனென்பதாதியால். ஆச்சிரமங்களிலே யுள்ளவனே = ஸ்வதர்மநிஷ்டையிலே யுள்ளவனே; தபஸ்வி எனப்படுவான் = நற்றவமுடையோனென ஆன்றோரால் வ்யவகரிக்கப்படுவான். தபஸ்ஸு என்ற சொல்லின்மேல் (வின்) என்ற மைந்த உடைமை விகுதி புகழ்ச்சியும் குறிக்குமாதலாலே இங்கு நற்றவமுடையோனெனப் பொருள் கொடுத்தோம். தவமில்லாதாற்குத் தாழ்வியாதெனி லதனைக் குறிக்கின்றார் தபஸ்ஸு இல்லாதவனுக்கு ஆத்மஞானமுண்டாவதில்லை என்று. ஆத்மஞானம் = பிரும்மஞானம்; பிரும்மஞானமெனக்கு வேண்டாம் கர்மசித்தியுண்டானாற் போதுமென்பாருக்கும் தவமில்லாவிடில் சித்தியில்லை என்கிறார் கர்மசுத்தியுமென்பதாதியால். கர்மசுத்தி = கர்மத்தின் காரிய காரணரூபமாயுள்ள வாசனைகளின் சுத்தி; அவற்றிலுள்ள ஸித்தாந்தத்தை நிரூபிக்கின்றார் தபஸினாலென்பதாதியால்; ஸத்வம் = ஸத்துவமென்ற குணம்; பலம் = தெளிவு; இவையுண்டாம். அதனாலுண்டாகும் மனமென்பது தியானிகளுக்கு யோக்யமாய் ஓர் லட்சியத்திலசைவற்றுநிற்கும் மனதின் சொரூபம்- அவ்விதமனதால் = சஞ்சலமற்று ஊக்கம் நிறைந்த மனதால்; ஆத்மா = ஸ்வரூபம்; கிடைப்பான் = தியானிக்கப்படுவான்; ஆத்மத்யானத்தின் ப்ரயோஜனத்தைக் குறிக்கின்றார் நிவிருத்தியில்லை என்று. நிவிருத்தியில்லை = மீட்சியில்லை; அங்ஙனம் தியானத்தால் மனமானது ஆத்மாவினிடத்து லயிக்குமாகவே அவனுக்கு மீட்சியற்ற மோட்சம் கிடைக்குமென்பது

அ

ஏற்பட்டது. இவ்வளவால் தத்தமாச்ரமங்களுக்குறிய வேதோக்த தர்மங்களுக்கு விரோதமில்லாது தத்தம் தர்மங்களையும் ஸாமான்யதர்மங்களையும் அனுஷ்டித்துவரும் உத்தமர்க்குத்தவமிலக்கைகூடி சங்கற்பமொழிய மனந் தூய்மைபெற்று ஆத்மாவிடத்து லயிக்க மோட்சமுண்டாமாதலின் முமுட்சுக்கள் கர்மநிஷ்டையைக் கைவிடக்கூடாதென்றேற்பட்டது.

அவதரணிகை-

இனி மனோலயத்தின் சொரூபத்தையும்; மோட்சத்தின் சொரூபத்தையும் நிரூபிக்கின்றார்.

அத்ரைதே ஶ்லோகா ப⁴வந்தி (என்று)

(இ—ள்) இவ்விஷயத்தில் அடியில் வரும் சுலோகங்களிருக்கின்றன,

(வி—ரை) வேறுசாகைகளில் இப்பொருளைக்குறிக்கும் பதினொருசுலோகங்கள் படிக்கப்பட்டமையால் எல்லாச்சுருதிகளுக்கும் இவ்விஷயத்திற் பொருளொற்றுமை காட்ட அவை இங்கனுவதிக்கப்படுகின்றனவென்பதிதன் கருத்து.

அவதரணிகை.

அவற்றில் முதல் சுலோகம் மனோலயோபாயத்தைக் குறிக்கின்றது,

யதா² நிரிந்த⁴நோ வஹ்நி꞉
ஸ்வயோநாவுபஶாம்யதி ।
ததா² வ்ருத்திக்ஷயாச்சித்தம்
ஸ்வயோநாவுபஶாம்யதி ॥ எ—று

(இ—ள்) எப்படி கொளுத்தக் கட்டையில்லாதபொழுது நெருப்புத் தன்காரணத்திலேயே ஒடுங்குகின்றதோ அங்ஙனம் விருத்தியொழிந்தபொழுது சித்தம் தன்காரணத்திலேயே ஒடுங்கும்.

(வி—ரை.) விஷயங்கள் விசித்திரங்களாயிருப்பதும் மன த்தின் பிரவிருத்திக்கேதுவாதலால் ஆதாரமான கட்டையொழிந் த நெருப்பைப்போல விஷயங்களைப் பரிசோதித் தசாரமென் றொதுக்கிய மனம் தனது காரணபூதமான ஆத்மஸ்வரூபத்தில் லயத்தை யடையுமென்பது மந்திரத்தின் கருத்து. இங்கு எடுக் கப்படும் மனம் முதலிய சொற்கள் அந்தக்கரணத்தையே குறிப் பனவாமென்க. எ—று

அவதரணிகை.

அங்ஙனம் மனோலயம் வந்தபொழுது அதனை நோக்கி உலகஸ்திதியைக் குறிப்பது இரண்டாஞ் செய்யுள்.

ஸ்வயோநௌ நாவ்யமாஜஸ்ய
ஜநஸ்ஸத்யகாமிந: ॥
இந்த்ரியார்த்தவிமூடஸ்ய
ந்ருதா: கர்மவசாநுகா: ॥ ௨ ॥ எ—று

(இ—ள்) மனமானது ஸத்யத்தை யபேட்சித்து இந்தி ரியார்த்தங்களில் மயங்காமல் தன் காரணத்தில் லயித்தால் கர்மவசத்தைப்பற்றி வந்தவை எல்லாமநிருதங்களாகும்.

(வி—ரை) ஸத்யத்தை = ஸத்யசொரூபமாகியபிரும்மத்தை; அபேட்சித்து = அதனில் பற்றுற்றுத் தன்மயமாய் நின்று; இந்தி ரியார்த்தங்களில் = புலன்களுக்கு விஷயமாகும் பிரபஞ்சப்பொரு ள்களில்; மயங்காமல் = விபரீதவிருப்பங்கொள்ளாமல்; தன்கார ணத்தில் = தன்காரணமென முன்னே குறிக்கப்பட்ட ஆத்மசொரூ பத்தில்; லயித்தால் — தன்மயமானால் கர்மவசத்தைப்பற்றிவந்தவை = கர்மப்பயனாய்த் தோன்றிய பிரபஞ்சம்; அநிருதமாகும் = பொய் க்கும்; யத்ர த்வஸ்ய ஸர்வமாத்மைவாபூத் தத்கேந கம் பச்யேத் = எங்கு இவனுக்கெல்லாமாத்மாவாயது அங்கவன் எதனை எதனாற்காண்பான். என்பதாதி வேதங்களறைதலா லென்க. எ—று

அவதரணிகை

இனி சித்தம் லயித்தால் சம்சாரந்தொலையும். சித்தமிருந்தால் சம்சாரமிருக்கும். ஆக இவற்றிற்குள்ள சம்பந்தமெத்தன்மைத்தென விளங்கமூன்றாஞ்செய்யுளதனை விளக்குகின்றது;

சித்தமேவ ஹி ஸம்ஸாரம்
தத்ப்ரயத்நேந ஶோதயேத் ।
யச்சித்தஸ்தந்மயோ பவதி
குஹ்யமேதத்ஸநாதநம் ॥ ௩ ॥ ஏ-ஜு

(இ—ள்) சித்தமே சம்சாரமாதலால் அதனைப்பூர்ணயத்தினத்தால் சோதிக்கவேண்டும். சித்தமெந்தவழிற்போகுமோ அப்படியே (புருஷனுவான்) இது நித்யமான ரகசியம்.

(வி—ரை) இங்கு சித்தமென்றது சங்கற்பம். பூர்ணயத்தினத்தால் = யோகம் முதலிய பலவழிகளிலேதோவழியைக்கொண்டு; சோதிக்கவேண்டும் = அசங்கற்பமாய் ஏகாக்ரப்படுத்தவேண்டும்; எந்தபலத்திற்காக வெனின் அதனைக்குறிக்கின்றார் சித்தமெந்தவழி என்பதாதியால; சித்தமெந்தவழியிற் போகுமோ அப்படியே = வெளிப்பொருள்களைப்பற்றிச் சென்றால் தன்மயமாவதுபோல அகப்பொருளாகிய ஆத்மாவிடத்தும் தன்மயத்வமுண்டாமென்பது. இது நித்யமான ரகசியம் = என்றுமுள்ள வுண்மை.

அவதரணிகை

சித்தத்தைஜயிப்பதே மோட்சத்திற்கு பரமோபாயமென்று குறிப்பது நான்காவது செய்யுள்.

சித்தஸ்ய ஹி ப்ரஸாதேந
ஹந்தி கர்ம ஶுபாஶுபம் ॥
ப்ரஸந்நாத்மாத்மநி ஸ்தித்வா
ஸுகமவ்யயமஶ்நுதே ॥ ௪ ॥ ஏ—ஜு

(இ—ள்) சித்தத்தின் பிரஸாதத்தால் சுபாசுபங்களான கர்மங்களைத் துலைப்பான் தெளிவடைந்த ஆத்மா ஆத்மாவிடத்தே இருந்து அட்சயமானசுகத்தைப்பெருவான். எ-து

(வி—ரை) சித்தத்தின் பிரசாதத்தால் = அந்தக்கரணலயத்தால்; சுபாசுபங்களான = புண்ய்பாவமயங்களான; கர்மங்களை = சஞ்சிதாதிகளை; துலைப்பான் = ஒழிப்பான்; தெளிவடைந்த ஆத்மா = யோகாதிகளால் தெளிவடைந்த ஆத்மா; ஆத்மாவிடத்தே யிருந்து = சொரூபத்திலே நிட்டைபெற்று; அட்சயமான சுகத்தை = மோட்சத்தை; பெறுவான் = அடைவான். எ—து

அவதரணிகை.

இதற்கு வ்யதிரேக திருஷ்டாந்தம் காட்டுவது ஐந்தாஞ் செய்யுள்.

ஸமாஸக்தம் யதா சித்தம்
ஜந்தோர்விஷயகோசரே|
யத்யேவம் ப்ரஹ்மணி ஸ்யாத்தத்
கோ ந முச்யேத பந்தநாத்|| ௫ || எ—று

(இ—ள்) பிராணிகளுக்கு விஷயத்திலெவ்வளவு ஆசையுண்டாகின்றதோ அவ்வளவு பிரும்மத்தினிடத்து உண்டானால் எவன் பந்தத்தை விட்டு மோட்சத்தையடையமாட்டான். எ—து

(வி—ரை) எப்படி ஒருவிஷயத்திற் சம்பந்தித்த மனம் அதைக்கூடும் வரை அதேத்யானத்திலிருக்கின்றனவோ அப்படியே பிரும்மத்யானத்திலுமிருந்தால் அம்மனமே மோட்சஹேதுவாமென்பதிற் றடையில்லை என்பது இம்மந்திரத்தின் கருத்து. எ—து

அவதரணிகை.

இனி மனதிற்கு பிரும்மத்தினிடத்துண்டாகு மாசக்தி சுவபாவவிருத்தமும் நிலையற்றது மென்பதைப்பற்றி ஆறு, ஏழு, எட்டு, இச்செய்யுள்கள் நிரூபிக்கின்றன.

𑌮𑌨𑍋 𑌹𑌿 𑌦𑍍𑌵𑌿𑌵𑌿𑌧𑌂 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌂
𑌶𑍁𑌦𑍍𑌧𑌂 𑌚𑌾𑌶𑍁𑌦𑍍𑌧𑌮𑍇𑌵 𑌚 |
𑌅𑌶𑍁𑌦𑍍𑌧𑌂 𑌕𑌾𑌮𑌸𑌂𑌕𑌲𑍍𑌪𑌂
𑌶𑍁𑌦𑍍𑌧𑌂 𑌕𑌾𑌮𑌵𑌿𑌵𑌰𑍍𑌜𑌿𑌤𑌮𑍍 || ௬ || எ—றும்

𑌲𑌯𑌵𑌿𑌕𑍍𑌷𑍇𑌪𑌰𑌹𑌿𑌤𑌂
𑌮𑌨𑌃 𑌕𑍃𑌤𑍍𑌵𑌾 𑌸𑍁𑌨𑌿𑌶𑍍𑌚𑌲𑌮𑍍 |
𑌯𑌦𑌾 𑌯𑌾𑌤𑍍𑌯𑌮𑌨𑍀𑌭𑌾𑌵𑌂
𑌤𑌦𑌾 𑌤𑌤𑍍𑌪𑌰𑌮𑌂 𑌪𑌦𑌮𑍍 || ௭ || எ—றும்

𑌤𑌾𑌵𑌦𑍇𑌵 𑌨𑌿𑌰𑍋𑌦𑍍𑌧𑌵𑍍𑌯𑌂
𑌯𑌾𑌵𑌦𑍍𑌧𑍃𑌦𑌿 𑌗𑌤𑌂 𑌕𑍍𑌷𑌯𑌮𑍍
𑌏𑌤𑌜𑍍𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 𑌚 𑌮𑍋𑌕𑍍𑌷𑌂 𑌚
𑌶𑍇𑌷𑌾𑌸𑍍𑌤𑍁 𑌗𑍍𑌰𑌨𑍍𑌥𑌵𑌿𑌸𑍍𑌤𑌰𑌾𑌃 || ௮ || எ—றும்

(இ—ள்) மனமென்றது சுத்தமென்று மசுத்தமென்றுமிருவகை என்று சொல்லப்பட்டது. அசுத்தமென்பது காம சங்கர்ப்ப முடையது. சுத்தமென்பது காமமில்லாதது. எ—றும்

மனதை லயம் விட்சேப மிரண்டு மில்லாததாகச் செய்து எப்பொழுது அமனஸ்கயோகத்தைப் பெறுகிறானோ அப்பொழுதே பரமபதம் கைகூடும். எ—றும்

எதுவரையில் இருதயத்தில் லயத்தை யடையுமோ அதுவரையிலேயே தடுக்கவேண்டும். இதுவே ஞானமும் மோட்சமும். மற்றதெல்லாம் கிரந்தவிஸ்தாரங்களேயாம்.

(வி—ரை) சிறிதமைப்புமாறிய இச்செய்யுள்கள் அமிருதபிந்தூபநிடதத்தில் விசேஷமாயுரை செய்யப்பட்டன. இங்குள்ள விசேஷத்தையே குறிப்பாம். லயம் = ஓரிடத்தில்விசேடப்பற்று. விட்சேபம் = தற்செயலாய்த் தோன்றும் பற்று, அல்லது ஐயம்

சுகம், விட்சேபம் துக்கம், இவை இரண்டு மில்லாதபடி மன தைச்செய்தால் கொளுத்துஞ்சக்தியற்ற நெருப்பைப்போல் மனந் தொலையுமென்பது மிவ்வுண்மையை யுபதேசித்தற்கே அதிகாரிதார தம்யத்தால் கிரந்தங்கள் விரிந்தன வென்பது இம்மந்திரங்களின் முடிந்தகருத்து. எ-று.

அவதாரிகை

அங்ஙனமாயின் சமாதி சுகத்தையறிவது எப்புலனுலென்னுஞ் சங்கையை நிவர்த்திசெய்வது ஒன்பதாஞ்செய்யுள்.

𑌸𑌮𑌾𑌧𑌿𑌨𑌿𑌰𑍍𑌧𑍂𑌤𑌮𑌲𑌸𑍍𑌯 𑌚𑍇𑌤𑌸𑍋
𑌨𑌿𑌵𑍇𑌶𑌿𑌤𑌸𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌨𑌿 𑌯𑌤𑍍𑌸𑍁𑌖𑌂 𑌭𑌵𑍇𑌤𑍍 ‖
𑌨 𑌶𑌕𑍍𑌯𑌤𑍇 𑌵𑌰𑍍𑌣𑌯𑌿𑌤𑍁𑌂 𑌗𑌿𑌰𑌾 𑌤𑌦𑌾
𑌸𑍍𑌵𑌯𑌂 𑌤𑌦𑌨𑍍𑌤𑌃𑌕𑌰𑌣𑍇𑌨 𑌗𑍃𑌹𑍍𑌯𑌤𑍇 ‖ ௯ ‖ எ—து

(இ—ள்) ஸமாதியினுல் ஸமஸ்தமலங்களு நீங்கி ஆத்மாவினிடத்தே வைக்கப்பட்ட சித்தத்தின் சுகம் ஏதுண்டோ அது வாக்கால் வர்ணிக்கமுடியாது. அப்பொழுதே தன்னுலே தன்னந்தக்கரணத்திலே க்ரகிக்கப்படும். எ—து

(வி—ரை) வெளிவிஷயங்களை முற்றிலுந்தொலைத்து ஆத்மாவினிடஞ்சேர்ந்து தன்மயமாய் நின்று சொரூபசுகத்தைக் கவரும் மனம் ஸ்வானுபவத்தாற்முன் றெரியும். ஓர்தீபத்திற்கு மறுதீபம் வேண்டுவதில்லையாம்போல மனதையறிய வேறு கருவிவேண்டுவதில்லை என்பது கருத்து.

அவதாரிகை

இந்தப்பிரகரணத்தில் நிரூபிக்கப்பட்ட மனோலயமானது மனதிற்கு முற்றும் நாசமல்ல. மற்று இதுவேறு அதுவேறு என்றறியப்படாத நிலைமையிலிருத்தலே அஃதெனப் பத்தாஞ்செய்யுள் குறிக்கின்றது.

ஜலே ஜலம் வியத்வ்யோம்நி
தேஜஸ்தேஜஸி வா யதா |
ஸமமேதி ததா சித்தம் ஸதீ
ஸாங்க்யாஷ புருஷ: ஸ்பஷ்டம் || ௰ || எ—று

(இ—ள்) எப்படி ஜலத்தில் ஜலமும், அக்கினியி லக்கினியும், ஆகாயத்தில் ஆகாயமும் (வேறாக) காணப்படுகிறதில்லையோ இப்படி ஆத்மாவினிடத்து சித்தம் லயிக்கும் பொழுது புருஷன் காணப்படுகிறான். எ—து

(வி—ரை) இங்கு காட்டப்பட்ட திருஷ்டாந்தங்களில் மென்மேலும் விசேஷமறியவேண்டும். அக்கினி யென்பது தேயு; அக்கினியி லக்கினியும் என்பதற்கு சூரிய பிரகாசத்தில் தீபபிரகாசம்போல் என்பது கருத்து. அம்மனமும் புருஷனும் வேறாகக் காணப்படமாட்டான் என்பது மந்திரார்த்தம்.

அவதாரணிகை

இதில் சித்தாந்தத்தைக் கூறுவதுபதினொன்றாஞ்செய்யுள்.

மந ஏவ மநுஷ்யாணாம்
காரணம் பந்தமோக்ஷயோ: |
பந்தாய விஷயாஸக்தம்
முக்த்யை நிர்விஷயம் ஸ்ம்ருதம் || கக || எ—று

(இ—ள்) மனமே மனிதர்களுக்கு பந்தமோட்சங்களுக்குக்காரணம். விஷயத்தைப்பற்றியது பந்தத்திற்கும் விஷயத்தை விட்டது மோட்சத்திற்கு மேதுவாம். எ-து

(வி—ரை) இம்மந்திரம் அமிருதபிந்தூபநிடதத்தில் விசேடமாயுரையிடப்பட்டமையாலும், அமைப்பு வேற்றுமை சிறிதுமின்மையாலும் இங்கு இதனை விரித்திலேம்.

அவதரணிகை

இனி பகவான் கௌத்ஸாயனியும் இப்பொருளை ஒப்பிறெனக்காட்டுகின்றார்,

𑌅𑌥𑍇𑌯𑌂 𑌕𑍌𑌤𑍍𑌸𑌾𑌯𑌨𑌿𑌸𑍍𑌤𑍁𑌤𑌿𑌃 எ—து

(இ—ள்) வருவது கௌத்ஸாயனி செய்தஸ்தோத்திரம்

(வி—ரை) கௌத்ஸாயனிபகவான் ஸார்வாத்மிய ஞானத்தாற்றம்மனுபவத்தை நான்கு செய்யுள்களால் துதித்தாரென்பது கருத்து

அவதரணிகை

அச்செய்யுள்கள் வருமாறு—

𑌤𑍍𑌵𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾 𑌤𑍍𑌵𑌂 𑌚 𑌵𑍈 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌃
𑌤𑍍𑌵𑌂 𑌰𑍁𑌦𑍍𑌰𑌸𑍍𑌤𑍍𑌵𑌂 𑌪𑍍𑌰𑌜𑌾𑌪𑌤𑌿𑌃 ।
𑌤𑍍𑌵𑌮𑌗𑍍𑌨𑌿𑌰𑍍𑌵𑌰𑍁𑌣𑍋 𑌵𑌾𑌯𑍁𑌃
𑌤𑍍𑌵𑌮𑌿𑌨𑍍𑌦𑍍𑌰𑌸𑍍𑌤𑍍𑌵𑌂 𑌨𑌿𑌶𑌾𑌕𑌰𑌃 ॥
𑌤𑍍𑌵𑌮𑌨𑍍𑌨𑌸𑍍𑌤𑍍𑌵𑌂 𑌯𑌮𑌸𑍍𑌤𑍍𑌵𑌂
𑌪𑍃𑌥𑌿𑌵𑍀 𑌤𑍍𑌵𑌮𑌥𑌾𑌚𑍍𑌯𑍁𑌤𑌃 ।
𑌸𑍍𑌵𑌾𑌰𑍍𑌥𑍇 𑌸𑍍𑌵𑌾𑌭𑌾𑌵𑌿𑌕𑍇𑌰𑍍𑌥𑍇𑌷𑍁
𑌬𑌹𑍁𑌧𑌾 𑌸𑌂𑌸𑍍𑌥𑌿𑌤𑌿𑌸𑍍𑌤𑍍𑌵𑌯𑌿 ॥
𑌵𑌿𑌶𑍍𑌵𑍇𑌶𑍍𑌵𑌰 𑌨𑌮𑌸𑍍𑌤𑍁𑌭𑍍𑌯𑌂
𑌵𑌿𑌶𑍍𑌵𑌾𑌤𑍍𑌮𑌾 𑌵𑌿𑌶𑍍𑌵𑌕𑌰𑍍𑌮𑌕𑍃𑌤𑍍 ।
𑌵𑌿𑌶𑍍𑌵𑌭𑍁𑌗𑍍𑌵𑌿𑌶𑍍𑌵𑌮𑌾𑌯𑌸𑍍𑌤𑍍𑌵𑌂
𑌵𑌿𑌶𑍍𑌵𑌕𑍍𑌰𑍀𑌡𑌾𑌰𑌤𑌿𑌃 𑌪𑍍𑌰𑌭𑍁𑌃 ॥
𑌨𑌮𑌃 𑌶𑌾𑌨𑍍𑌤𑌾𑌤𑍍𑌮𑌨𑍇 𑌤𑍁𑌭𑍍𑌯𑌂
𑌨𑌮𑍋 𑌗𑍁𑌹𑍍𑌯𑌤𑌮𑌾𑌯 𑌚 ॥
𑌅𑌚𑌿𑌨𑍍𑌤𑍍𑌯𑌾𑌯𑌾𑌪𑍍𑌰𑌮𑍇𑌯𑌾𑌯
𑌅𑌨𑌾𑌦𑌿𑌨𑌿𑌧𑌨𑌾𑌯 𑌚 ॥ எ—து

(இ—ள்) நீப்ரம்மா, நீயே விஷ்ணு, நீயே உருத்திரன், நீயே ப்ரஜாபதி, நீ அக்கினி வருணன், வாயு, நீஇந்திரன், நீ சந்திரன், நீமனு, , நீயசஸ்ஸு, நீபூமி, நீஅச்சுதன், ஸ்வார்தமாகவும். ஸ்வாபாவிகார்தமாகவும், அநேகரூபனாய் ஆகாசத்திலிருக்கிறாய். விசுவேசுவர உனக்கு நமஸ்காரம். விசுவஸ்ரூபன், விசுவகர்மாவைச்செய்பவன், விசுவத்தைச் செய்பவன், விசுவமாயையுடையவன், நீ விசுவக்ரீடையிலாசையுள்ளபிரபு, சாந்தாத்மாவாகிய உனக்கு நமஸ்காரம். ப்ரமரகசியனும், சிந்திக்கக்கூடாதவனும், அப்ரமேயனும், ஆதியந்தமுமில்லாத உனக்கு நமஸ்காரம்.

(வி—ரை) இந்தத்தோத்திரம் பகவான் கௌத்ஸாயனியானவர் விசுவனுதனை யுபாசித்து அவனைத்துதித்தது. அதைபகவான்சாகாயன்யர் அனுவதிக்கின்றார். இங்கு விசுவேசுவர் னென்றது பரமசிவனே. அவனே மாயாசபளனுதலால் ஜகத்காரணமாகின்றான். அவனிடத்துத் தோன்றின பிருமா, விஷ்ணு, ருத்திரன் முதலிய இதரதேவர்கள் தன்மயமாகவே உபசரிக்கப்படுகிறார்கள். ஆகையாலேதான் மேலேயும் அதே மூர்த்தியை நிரூபிக்கும் ப்ரகரணமாயிவ்வித்தை தோன்றி அவனிடத்தடங்கிய முக்குணங்களில் ஒவ்வொன்றின் கூறு ஒவ்வொருமூர்த்தியென நிரூபிக்கின்றது. ஆகவே முதல் மும்மூர்த்திகள் அவனதம்சங்களாயின. பிரஜாபதி = கசியபர் முதலிய அவாந்திர ப்ரஜாபதி; அக்னி, வருணன், வாயு, இந்திரன், சந்திரனிவர்கள் பிரசித்தர்கள். நீமனு = மனுவென்றது பதினான்கு மனுக்களையும் குறித்தது; நீயசஸ் = புகழென்பது லகத்திலுள்ளது ஸ்வரூபமேயாம்; நீபூமி = வெளி; அச்சுதன் = நாசமில்லாத ஆகாயம் முதலியவை; நீ என்றும் உத்தமலோகத்தில் உள்ளவனென்கின்றார் ஸ்வார்தமாகவு மென்பதாதியால். ஸ்வார்தம் = ஸமஸ்த ஜீவோத்தாரண ரூபமாகிய தனது கருணை வெளியிடுதற்காக; ஸ்வாபாவிகார்த்தமாக = ஸ்வபாவத்திலமைந்த பூதங்களை நிலைநிறுத்துவதற்காக; அநேகரூபனாய் = அபராகிருத திவ்யமங்கள விக்ரகனாயும், அந்தர்யாமியாயும், மற்றும்பல ரூபனுமாய், ஆகாசத்தில் = உத்தமலோகத்தில்; இருக்கின்றாய் = அருட்டிருமேனியுடனெழுந்தருளி யடியார்களைக் காக்கின்றாய்;

அதனாலேயே ஓ விசுவேசுவர நீ; விசுவஸ்வரூபன் = ஸர்வஸ்வரூபன்; விஷ்ணு வென்பது பிரகிருதியே யாதலால் (விஸ்வம் விஷ்ணு) என்று ஸ்மிருதியால் அவருக்கு விசுவமென்ற பெயருள்ளதாதலால் விஷ்ணுஸ்வரூபனும்; விசுவகர்மாவைச் செய்பவன் = பிரும்மாவுக்கும் ஸிரஷ்டா; விசுவத்தைச் செய்பவன் = ஸிருஷ்டி விஷயத்தில் எல்லா ஸ்வதந்திரமுடையான்; விசுவமாயை யுடையவன் = விஷ்ணுரூபமானமாயைக்கு நாதன்; அல்லது ஸர்வமாயைகளுமுடையவன்; அவனுக்குலகத்தை ஸிருஷ்டிப்பதில் பயன்யாதென வினுங்கால் விசேடிக்கின்றார் விசுவக்ரீடையிலாசையுள்ள பிரபு என்பதால். உலகமென்பதே விளையாட்டு என்றமையால் அதனீசனுக்கு ஒரு முயற்சியன்றி சாதிக்கக்கூடியதென்றேற்பட்டது. சாந்தாத்மா = எல்லா ப்ரபஞ்சமும் ஒடுங்கு மிடமாயுள்ளவன்; பரமரகஸியன் = சூக்குமரூபனாதலால்; சிந்திக்கக் கூடாதவன் = உனதருளின்றி எவ்வளவையாலும் உனது ஸ்வரூபமறியப்படாமையால்; அப்ரமேயன் = அளவைக் கடங்காதவன்; ஆதியந்தமில்லாதவன் = ஸத்யரூபன். எ—து

அவதாரணிகை

இத்தகைய மகிமை பொருந்திய வாத்மாவுக்கு ஸிருஷ்டி முதலியவை எம்முறையிலமைந்ததென ஆசங்கைநிகழ வதனைவிளக்குகின்றார்.

𑌤𑌮𑍋 𑌵𑌾 𑌇𑌦𑌮𑌗𑍍𑌰 𑌆𑌸𑍀𑌦𑍇𑌕𑌂 𑌤𑌤𑍍𑌪𑌰𑍇𑌣𑍇𑌰𑌿𑌤𑌂 𑌵𑌿
𑌷𑌮𑌤𑍍𑌵𑌂 𑌪𑍍𑌰𑌯𑌾𑌤𑍍𑌯𑍇𑌤𑌦𑍍𑌵𑍈 𑌰𑌜𑌸𑍋 𑌰𑍂
𑌪𑌂 𑌤𑌦𑍍𑌰𑌜𑌃 𑌖𑌲𑍍𑌵𑍀𑌰𑌿𑌤𑌂 𑌵𑌿𑌷𑌮𑌤𑍍𑌵𑌂 𑌪𑍍𑌰𑌯𑌾𑌤𑍍𑌯𑍇𑌤
𑌤𑍍𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌸𑍍𑌯 𑌰𑍂𑌪𑌂 𑌤𑌤𑍍𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌮𑍇𑌵𑍇𑌰𑌿𑌤𑌂 𑌤𑌤𑍍𑌤𑌾
𑌰𑌸𑌸𑍍𑌸𑌂 𑌪𑍍𑌰𑌾𑌸𑍍𑌰𑌵𑌤𑍍 𑌸𑍋𑌽𑌂𑌶𑍋𑌽𑌯𑌂 𑌯𑌶𑍍𑌚𑍇
𑌤𑌾𑌮𑌾𑌤𑍍𑌰𑌃 𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑍁𑌰𑍁𑌷𑌂 𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌜𑍍𑌞𑌃 𑌸𑌙𑍍𑌕
𑌲𑍍𑌪𑌾𑌧𑍍𑌯𑌵𑌸𑌾𑌯𑌾𑌭𑌿𑌮𑌾𑌨𑌲𑌿𑌙𑍍𑌗𑌃 𑌪𑍍𑌰𑌜𑌾𑌪𑌤𑌿𑌃 எ—து

(இ—ள்) தமஸ்ஸே ஒன்றேயாயிது இருந்தது. அதுபரனால் பிரேரிக்கப்பட்டு விஷமமாச்சுது. இதுவேரஜஸ்ஸின்ரூ

பம் அந்த ரஜஸ்ஸால் பிரேரிக்கப்பட்டு விஷமமாகியது. அது ஸத்துவத்தின் ரூபம். அச்சத்வம் பிரேரிக்கப்பட அதிலிரஸம்வெளிவந்தது. அந்த அம்சமே சேதனமாத்திரன். புருஷர்கள்தோறும் க்ஷேத்திரஞ்ஞன் ஸங்கல்பம் அத்யவஸாயம், அபிமானம், இவைகளைத்தனக்கு க்குறியாயுடையவன். பிரஜாபதி. ௭-அ

(வி—ரை) இது= யாம்காணும் பிரபஞ்சமெல்லாம், தமஸ் ஸு= மூலபிரகிருதி, அதினிடத்தே எல்லாம் பூர்வ பூர்வப்ரளயங்களில் உபசங்கரிக்கப்படுகின்றமையாலும் நாமரூபங்களைப்பிரித்து அறியக்கூடிய நிலைமையில் இல்லாமையாலும் அது இருளெனப்பொருள் கொடுக்கும் தமஸ் என்றசொல்லால் நிரூபிக்கப்பட்டது. அல்லது தமஸ் எனபது தமோகுணத்தின் பெயராயினுமாகலாம், அங்ஙனமாயின் அத்தமஸ் என்ற உபாதி பிரும்மத்தை ருத்ரமூர்த்தி எனக்காட்டுமுபாதியாதலால் ஆதியில் ருத்ரனேயிருந்தானெனப்பொருள் கொடுக்கும். அங்ஙனமாயின் நாராயணோபநிடதம் நாராயணனை முதற்காரணமாகக்கொண்டு ஓரவாந்தர சிருஷ்டியைக்குறித்தாற்போல ருத்திரனை முதற்காரணமாய்கொண்டு இவ்வித்தை ஒருசிருஷ்டியை ப்ரதிபாதிக்கின்றதெனச்சொல்லவேண்டும். ஆயின் இங்கு குணச்சொல்லாயிருந்த தமஸ்ஸென்பது குணிச்சொல்லாய் ஆகுபெயராகும். இங்ஙனம்பொருளுரைப்பந்த நியாயம். இவ்விடத்து முதலில் தமஸ்ஸும் பிரகுரஜஸ்ஸும், அதன்பின் ஸத்வமும், ஒன்றன்பின் ஒன்றுகளுன்றிடத்து மற்றொன்றுண்டானதாகநிரூபிக்கப்படுதலாலென்க. புராணங்களில பிரும்ம விஷ்ணு ருத்திரர்களுள் ஒவ்வொருவரைத்தலையாய்க்கொண்டு ஒவ்வொருவகைசிருஷ்டியும் சொல்லப்பட்டமையால் அவற்றுள் ஒன்றுக்குஇவ்வசனமூலமென்பதுமுற்றும்பொருந்தியதே. ஆகவே; அது= அந்தக்காரணபூதமான மூலபிரகிருதிஅல்லதுருத்ரன்; பரனால்= அந்தர்யாமியால்; ப்ரேரிக்கப்பட்டு= உட்புகுந்து கலக்கப்பட்டு: அல்லது உட்புகுந்தேவப்பட்டுஒரே இனிப்புடைய பால் தயிரான காலத்து புளிபபுள்ளதாய்க்காட்டி கடைதலால்மோரும் வெண்ணெயுமாவது போல தனனின்த்திற்கு வேறுன இனத்தால் தாம் முற்றும் கலக்கப்பட்டு தம்முள்ளொருங்கிஒன்றாய் நின்றநாமரூபங்களை வேறாகக்காட்டுங்கால் அது; விஷம

மாச்சுது = பிறச்சாதியாய்த் தோன்றியது; இதுவே ரஜஸ்ஸின்
ரூபம் = அந்தர்யாமி ப்ரேரிதமான தமோகுணத்தினோர்வகைத்தி
ர்பே ரஜஸ்ஸு என்பதாயிற்று. இதனால் ருத்திரனிடத்தில் பி
ரும்மா உத்பத்தியானானென்றேற்பட்டது. பிறகு அந்தரஜஸ்ஸே
முன்போல் பரனால் ப்ரேரிக்கப்பட அதனிடத்து சத்வமுண்டா
யிற்று. மீண்டும் வெண்ணெயைக்காச்ச அது நெய்யாவதுபோல
இங்கு திருஷ்டாந்தங் கூறியது வேறு சாதியாய்ப் பரிணமித்தல்
மாத்திரைக்கேயன்றி வேறு வகையில் காரணசொரூபம் கெடு
தல் முதலியவற்றிற்கல்ல. இதனால் பிரும்மாவினிடத்து ஹரி
தோன்றினானென்றேற்பட்டது. ஸத்வமென்ற நிலை சித்தும சித்
தும் பகுக்கக்கூடிய நிலைமையிலிருப்பது. ஆதலாற்றான் அச்சத்
வம் பரமேசுவரனாற் ப்ரேரிக்கப்பட அற்புதமாகிய ரஸாம்சம்
அதனில் வெளிவந்தது. அதுவே சேதனமாத்திரமென மேலே நி
ரூபிக்கப்படுதலால் அந்தரஸமொழிய ஏனைய பாகங்கள் அசித்
து என்றேற்பட்டது. ஆகவே ஜீவஸமஷ்டிரூபனான விராட்
இங்கு விஷ்ணுவெனப்பட்டான் சேதனமாத்திரமென்றமையால்
ஈசுவரனும் மற்றைய சேதனர்களும் ஸத்ரூபர்களே என்பது
சொல்லாதமைந்தது. எங்ஙனம் பெருநெருப்பில் சிறுபொறிகள்
வெளிப்படுகின்றனவோ அங்ஙனமே ஸர்வப்ரமாதாக்களுக்கும் ப்
ரதிநிதியாகிய நாராயணனிடத்து ஜீவர்கள் பலவாறாகத்தோன்றி
னார்கள் என்பது கருத்து. அவனுக்கிலக்ஷணம் யாதெனவினா
நிகழ அதனை நிரூபிக்கின்றார். புருஷர்கள் தோறும் = சரீரங்கள்
தோறும்; க்ஷேத்ரஞ்ஞன் = அச்சரீராபிமானி; ஸங்கல்பம் = நி
னைத்தல்; அத்யவஸாயம் = விபரீதநிச்சயம்; அபிமானம் = சரீரம்
முதலிய அனாத்மாக்களிடத்து ஆத்மாவென்றபற்று; இவைகளைத்
தனக்குக் குறியாயுடையவன் = இலக்கணமாய் தமக் குபாதியாய்ப்
பெற்றவன்; பிரஜாபதி = இவனே உலககர்த்தா, இவ்வளவால்ம
னதின் சம்பந்தத்தால் ஆத்மாவிடத்தே ஜடஜீவேசுவராதி வேற்
றுமைகளுள்ள பிரபஞ்சம் கற்பிக்கப்பட்டதென்று ஏற்பட்டது.

அவதாரணிகை

இனி பரமேசுவரனது வித்யோபாதியான சொரூபங்க
ளை நிரூபிக்கின்றார்.

தஸ்ய ப்ரோக்தா அக்ர்யாஸ்தநவோ ப்ரஹ்மா ரு-
த்ரோ விஷ்ணுரிதி அத யோ ஹ வாவாஸ்ய
ராஜஸோம்சோஸௌ ஸ யோயம் ப்ரஹ்மா அத
யோ ஹ வாவாஸ்ய தாமஸோம்சோஸௌ ஸ
யோயம் ருத்ர: அத யோ ஹ வாவாஸ்ய
ஸாத்த்விகோம்சோஸௌ ஸ யோயம் விஷ்ணுரிதி|| ௭-௫

(இ—ள்) அவருக்கு பிரும்மா, ருத்திரன் விஷ்ணு என்று ஆதியிலுண்டான சரீரங்கள் சொல்லப்படும். இனி எதுதானவருடைய ராஜஸாம்சமோ அதுவே பிரும்மாவாம். எதுதானவருடைய தாமஸாம்சமோ அதுதான் ருத்திரனாம். எதுதானவருடைய ஸாத்விகாம்சமோ அதுதான் விஷ்ணு. ௭_௫

(வி—ரை) இம்மந்திரத்திற்கு பதார்த்தங்கள் மிகத் தெளிவாயிருத்தலால் இதற்குப் பதவுரையில் விசேடமொன்றுமில்லை. ஆனாலும் இவ்விடத்திலுள்ள உண்மை ஒன்றுண்டு. அதனை முற்றும் விளக்குவாம். பிரும்மாவினுள்ள அம்சம் ரஜஸென்றும், ருத்திர விஷ்ணுக்களிடத்து தமோம்சமும், ஸாத்விகாம்சமும் இருக்கின்றது என்று சொல்லப்பட்டமையால் அவ்விடத்துவே றுகுணமுண்டென்பது குறிக்கப்படுகின்றது- தமஸினம்சமென்றால் அம்சம் அவ்விடத்தல்பமென்றேற்படுகிறது. ஆகவே ஸத்வமிகுதியும் அங்கு சொல்லாதமையும். ஸத்வத்தினம்சமென்றால் ஸத்வகுணம் குறைவும் மற்றையகுணம் மலிவுமாயேற்படும். ஆகலாற்றான் ஸ்காந்தத்தில் (அந்தர்பஹிர்விரிஞ்சோபி ராஜஸ: பரிகீர்த்தித:| ருத்ர: ஸத்த்வம் தமோ த்வந்த: விஜ்ஞேய: ஸ்வபஹிஸ்தம:|| விஷ்ணோஸ்ஸத்த்வம் பஹிர்ஜ்ஞேயம் ஸாந்தஸ்தமஸ்ஸ்ம்ருதம் — உள்ளும் வெளியும் பிரும்மா ராஜஸனே ருத்திரமூர்த்திக்கு உள்ளே ஸத்வம் வெளியே தமஸ்ஸு, விஷ்ணுவுக்கு வெளியே ஸத்வம் உள்ளே தமஸ்ஸு. என்று சொல்லப்பட்டது. இங்ஙனம் ஸூதஸம்ஹிதாதிகளில் விரிக்கப்பட்டிருக்கிறதென்பதை வேறிடத்தில் நிரூபித்திருக்கின்றோம். ௭—௫

அவதரணிகை.

மேலே பரமாத்மாவுக்கு சாஸ்திரங்களிற் காணப்பட்ட நாநாஸ்வரூபங்களைக் காட்டுகின்றார்.

𑌸 𑌵𑌾 𑌏𑌷 𑌏𑌕𑌧𑌾 𑌤𑍍𑌰𑌿𑌧𑌾 𑌭𑌵𑌤𑍍𑌯𑌷𑍍𑌟𑌧𑍈
𑌕𑌾𑌦𑌶𑌧𑌾 𑌦𑍍𑌵𑌾𑌦𑌶𑌧𑌾𑌪𑌰𑌿𑌮𑌿𑌤𑌧𑌾 𑌵𑍋𑌦𑍍𑌭𑍂𑌤
𑌉𑌦𑍍𑌭𑍂𑌤𑌤𑍍𑌵𑌾𑌦𑍍𑌭𑍂𑌤𑍇𑌷𑍁 𑌚𑌰𑌤𑌿 𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌾 𑌸
𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑌾𑌨𑌾𑌮𑌧𑌿𑌪𑌤𑌿𑌰𑍍𑌬𑌭𑍂𑌵𑍇𑌤𑍍𑌯𑌸𑌾𑌵𑌾
𑌤𑍍𑌮𑌾𑌨𑍍𑌤𑌰𑍍𑌬𑌹𑌿𑌶𑍍𑌚 ௭ — ௩

(இ—ள்) அந்த இவனன்றோ ஒருமூர்த்தியாய் மும்மூர்த்தியாய் அஷ்டமூர்த்தியாய்ப் பதினொருமூர்த்தியாயுள்ளவனாய், பன்னிரண்டுமூர்த்தியாயுள்ளவனாய், அளவிலாமூர்த்தியுள்ளவனாய்க் காணப்படுவான். காணப்படுதலாற்பூதங்களிற் சஞ்சரிப்பான். எல்லாப் பூதங்களுக்கும், இருப்பிடமுமதிபதியுமாம். அவ்வாத்மாவே உள்ளும்வெளியுமுள்ளவன்

(வி—ரை) ஒருமூர்த்திாய் = 𑌏𑌕 𑌏𑌵 𑌰𑍁𑌦𑍍𑌰𑌃 𑌏𑌕𑌮𑍇𑌵 𑌰𑍁𑌦𑍍𑌰𑌂 𑌹𑌵𑌿𑌷𑌾 𑌯𑌜𑍇𑌤, 𑌏𑌕𑌾𑌕𑍀 𑌵𑍈 𑌰𑍁𑌦𑍍𑌰𑌃, 𑌯 𑌏𑌕𑍋 𑌰𑍁𑌦𑍍𑌰 𑌉𑌚𑍍𑌯𑌤𑍇, 𑌤𑌸𑍍𑌮𑌾𑌦𑍍𑌰𑍁𑌦𑍍𑌰𑌸𑍍𑌯 𑌏𑌕𑍋 𑌰𑍁𑌦𑍍𑌰𑌃 = ஒருவனன்றோ ருத்திரன், ஒன்றாகவே ருத்திரனுக்கு ஓமஞ்செய்யவேண்டும். ஏகாகியன்றோ ருத்திரன். எவன் ஓரேருத்திரனென்று சொல்லப்படுவான். ஆதலால் ருத்திரனேகனெனப் படுவான். என்பதாதி சுருதிகளில் குறிக்கப்பட்டவாறு அநேகம் சோமலோகா பரணமான அற்புத உமாஸகாய மூர்த்தியிதனாற் சொல்லப்பட்டது; மும்மூர்த்தியாய் = அடுத்த முன் மந்திரத்தில் குறிக்கப்பட்டபடி பிரும்மா விஷ்ணு ருத்திரன் என்ற மும்மூர்த்தியுடையவனாய்; அஷ்டமூர்த்தியாய் = அஷ்டமூர்த்தி பிராம்மணம் முதலியவற்றிற் சொன்னவாறு பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாசம், சூரியன், சந்திரன், யஜமானனென்ற எட்டு சரீரங்களை யுடையவன். அல்லது அவற்றிற்கு அதிஷ்டாதாவான பவாதி மூர்த்திகளெட்டுடையவன்; பதினொரு மூர்த்தியாயுள்ள

வனும் = ஏகாதச ருத்திரமூர்த்தியாயுள்ளவனும்; பன்னிரெண்டுமூ ர்த்தியாயுள்ளவனும் = ஆதித்தரூபனென்பது கருத்து. அளவில்லா மூர்த்தியாயுள்ளவனும் = ஸஹஸ்ராணி ஸஹஸ்ராணி ஸஹஸ்ரஶோ யே ருத்ரா: = அளவில்லா தாயிரங் கள் ஆயிரங்களாயிரங்களாய் எந்தருத்திரர்கள் என்பதாதி பல வேதவாக்யங்களிருத்தலால்; காணப்படுவான் = ஸோபாதிக மூர் த்தியாயாவிர்பவிக்கின்றான்; ஆகையாலே தானே; பூதங்களில் சஞ் சரிப்பான் = அந்தர்யாமியாய் எங்கும் நிறைந்திருப்பான்; யே தேவா: ப்ருதிவிஷத:, யே வ்யந்தரிக்ஷ எந்த தேவதேவர்கள் பிருதிவியிலுள்ளவர்கள், எவர்கள் பிருதிவி யில், எவர்களந்தரிக்ஷத்தில், என்ற வேதபாகங்களில்ஸ்பஷ்டமா ய்ப்பல மூர்த்திகளாயிருந்து லகத்தை நடாத்துபவன் ஈசுவரனெ ன்றேறப்படுகின்றமையால் அவனே; எல்லாப்பூதங்களுக்கு பிரு ப்பிடமும் = அதிஷ்டானமும்; அதிபதியும் = பிரேரகனுமாம்; ஆ கவே அவ்வாத்மாவே உள்ளும் வெளியும் உள்ளவனென்பது மூ டிவுரைஎன்பதோர்சிறிது. எ—று

நான்காம் பிரபாடகம் முற்றுப் பெற்றது.

ஐந்தாம் பிரபாடகம்.

அவதரணிகை.

இனி ஸாமத்தைச்சேர்ந்த சாகையே இஃதாதலால் சாந் தோக்கியோப நிடதத்தைப்போல் பிரும்மத்தை யடைவதற்குப் ப ரம்மோபாயமாயுள்ள அந்தராதித்த வித்தையையும் இருதி அத்தி யாயத்தால் நிரூபக்கின்றார்.

அஸாவாதித்யோ ப்ரஹ்ம ...
ய: ப்ராணோ யஶ்சாஸாவாதித்ய: ॥ எ—றும்

(இ—ள்) இரண்டாகவல்லவோ இவன் ஆத்மாவை தரிக்கின்றான். பிராணனென்றுமாதித்யனென்றும். எ—று

(வி—ரை) இவ்வுபநிடதத்திலிரண்டு ரூபங்களே பரமேசுவரனுக்கு உபாஸனார்த்தமாயெடுத்துக் காட்டப்படுகின்றன. அவை எல்லாசுருதிகளிலும் பிரசித்தங்களே அது பிராணனென்றுமாதித்யனென்றுமழைக்கப்படும். அப்பிராணரூபமானது இருதயசிதம்பரத்திலுபாஸிக்கத்தக்கதென தகரவித்தைகளில் நிரூபிக்கப்படுகின்றன. வாயுவென்றது ஆகாயத்திலுண்டானதாதலால் காரணத்தில் காரியத்தையுபாசிப்பது நியாயமே. அப்படியே ஆதித்தனென்றரூபமும் வெளியிலுபாசிக்கத் தக்கது. அஃது நாநாரூபம் அவ்வவ்வண்டங்களுக்கு கோளமத்தியமாய்க் காணும் சூரியமண்டலத்திற்றானே ஈசுவரனையுபாசிக்கவேண்டுவது நியாயமாதலால் சுருதியானது இவ்வாதித்தனென எமக்குக்காணு மாதித்தனைக் குறிக்கின்றது. ஒவ்வோரண்டத்திலுள்ளோர்க்கு மவ்வவ்வண்டத்திற்குத்தோற்றும் ஆதித்தனே இவ்வாதித்த னெனப் படுவானாதலின் இவ்வசனமெல்லாவண்டத்தார்க்கும் ஒவ்வுமென்க. காயத்திரீவித்தையிலும் இவ்வந்தராதித்ய வித்தை பெரும்பான்மையில் கலந்து நிற்கும். ஆகவே இவ்விடத்தில் மூன்றுவித்தைகளெடுக்கப்பட்டன. ஒன்று பிராணவித்தை யெனப்படும் தகரவித்தை. இரண்டாவதந்தராதித்தவித்தை, மூன்றாவது காயத்திரி வித்தை, வேதங்களில் ([illegible]) பிராணங்கள் தொகுதியாயுள்ள ருத்திரன் இவனன்றோ பிராணன். பிராணனை மனதில் கரணங்களுடன் நாதாந்த பரமாத்மாவிடத்துச் சேர்த்து தியானிக்கவேண்டுமீசானனை. என்பதாதியால் பிராணன் ருத்திரரூபமென நிரூபிக்கப்பட்டிருக்கின்றமையாலும்வேறிடங்களில் [illegible] ரதிகளிற்குள் சிறந்தவன் கபர்த்தி, இவனல்லவோ சிவந்தவனருணன் என்பதாதி வசனங்களால். சூரியரூபனென்று ருத்திரன் நிரூபிக்கப்படுதலாலும் சின் பிராணாதித்த ரூபனென்று காயத்திரீவித்தையிலும் அதன் வியாக்யானத்திலும் மிகவிரித்தோமாதலாலுமென்க. இவ்வுபநிடதம் காயத்திரியின் பொருளை விரிக்க எழுந்தமையால் காயத்திரீ மந்திரத்திற்கு இது பிராம்மணம் போலாகுமென்பதற் காட்சேபமில்லை. ஆதலாற்றான் இவ்வுபநி

டதங்குறித்தாற்போலவே இச்சாகையைச் சேர்ந்த (தலவகாரி) பிராம்மணமும் காயத்திரியினிரண்டாவது பாதத்தை ச்சிவபர மாய் விரித்தது. அங்கு எவன் சவிதா" எதுசாவித்திரி என்றவினு விடையாய் வரும் முறையில் இடையேயகப்பட்ட காயத்திரீ மந்திரம் வியாக்யானஞ் செய்யப்படுகின்றது. தலவகாரிகளுடைய உபனயனத்திலும் எவன் ஸவிதா முதலிய மந்திரங்கள் விநியோகிக்கப்படுகின்றன. இவ்விருசரீரங்களும் பரமசிவனது கோராகோர சரீரங்களென சுருதிகளிற் சொல்லப்பட்டன. அதையே ஸ்ரீமகாபாரதம் ஆனுசாஸனிக பர்வம் விரித்துக்காட்டியது வருமாறு" த்வே தநூ தஸ்ய தேவஸ்ய வேதஜ்ஞா ப்ராஹ்மணா விது:| கோராமந்யாம் ஶிவாமந்யாம் தே தநூ பஹுதா புந: || உக்ரா கோரா தநூர்யாஸ்ய ஸோக்நிர்வித்யுத்ஸ பாஸ்கர: | ஶிவா ஸௌம்யா ச யா தஸ்ய தர்மஸ்த்வாபோத சந்த்ரமா: || அந்த மகாதேவனுக்கு வேதமறிந்த பிராமணர்கள். கோரமொன்று சிவம் ஒன்று என இருசரீரங்களை யறிவார்கள் அவை யொவ்வொன்றும் பலவகைப்படும் உக்கிரமாயுள்ளது கோரசரீரமாம். அஃதக்கினி அஃது மின்னல் அஃது சூரியன் சிவமாயுள்ளது சௌம்யமாயிருக்கும். அஃது தருமம் அஃது நீர் அஃது சந்திரன் என்று. இதே பொருளை ஆரோணபர்வத்திலுள்ள சதருத்திரீயாத்தியாய மனுவதித்துள்ளது. ஆகவே இங்கு இவ்விருரூபங்களும் மூன்று வித்தைகளா லுபாசிக்கத்தக்கனவென நிரூபிக்கப்பட்டதாயிற்று. ௭—௯

அவதரணிகை.

மேலே மேற்கண்ட இரண்டுரூபங்களின் மகிமையை உபாஸனார்த்தமாய் விரிக்கிறார்.

> ஜயமேதௌ தாவஹம் வந்தே ஸுதாமாநௌ
> பஹிஷ்டாதேஹோபாரோ தேஜஸ்ஸ்ராவதே
> தே ஸௌம்யாக்னீ ப்ரஹ்மபூதா ஸ
> பூதா ஸ்ய || பஹிர்பூதா மந்த்ராக்ஷரா
> ஸ்தாநீயதே | ௭—௰

(இ—ள்) இனி இரண்டுமூர்த்திகளிருக்கின்றன. அவை உள்ளும் வெளியுமைந்து ரூபங்களாக அஹோராத்திரங்களை யளவிடுகின்றன. இந்த ஆதித்தனென்பவன் வெளியாத்மா பிராணனென்பவனுள்ளாத்மா. வெளியாத்மாவின் வரவாலுள்ளாத்மா அனுமானஞ் செய்யப்படுகின்றான்,

(வி—ரை.) இவ்விரண்டு மூர்த்திகள்=முற்குறித்த விரண்டுரூபங்கள்; இருக்கின்றன=என்றுமுள்ளன; அவை=இரண்டும்; உள்ளும் வெளியுமைந்துரூபங்களாக=பிராணன், அபானன் வியானன், உதானன், ஸமானனென்றும் ஐந்தும், நாகன், கூர்மன், கிருகரன், தேவதத்தன், தனஞ்சயன் என்றுவெளியே ஐந்துமாம். சூரியனென்ற மூர்த்தியுமைந்து சோதிரூபமாகின்றது. சூரியன், சந்திரன், அக்கினி ஜாடராக்கினி, கண் எனவைந்துஞ்சூரியரூபங்களாம். அஹோராத்திரங்களை=இராப்பகலை; அளவிடுகின்றன=அதாவது ஒரு சூரியோதயம் முதல் மறு சூரியோதயம் முதலாவது இருபத்தோராயிரத்து அறுநூறுசுவாஸங்களாவது ஒருதினமென்று கணக்கிடப்படுதலாலென்க. அந்தப்பிராணனென்பதொவ்வொரு புருடர்க்கு மாயுளதாதலினதனை யளவிடுவது சூரியனே யென்றேற்பட்டது. எங்ஙன மிவ்விருவர்களுள்ளும் வெளியுஞ்சஞ்சரிக்கின்றார்களென சங்கை நிகழ வதனை விலக்குகின்றார். இந்த ஆதித்த னென்பதாதியால். வெளியாத்மா=பிரத்தியக்ஷமாகக்காணக் கூடியவன். உள்ளாத்மா=சூக்குமமாய்ப்புலன்களுக்ககப்படாநிலைமையிலுள்ளவன். இந்தவெளியாத்மாவையறிவதேதகுவலனிவனுக்கு மேல் வேறொருப்பிரேரகனையாம் கண்டிலமாதலினிவனே ஆத்மாவென்றேமென்க. முதலிற்பிரமாதாவினாலிவன் சூரியனெனவறியப்பட்ட பிறகு பிராணனாலவனாகதி அளவிடப்படுகிறது. ஆகவே சூரியனும் பிராணனுமொன்றுக்கொன்றுபகாரமாய் அஹோராத்திரமென்ற வாயுஸ்ஸையளவிடுகின்றனவாயின. மற்றதுவெளி எ—று.

அவதாரணிகை

முன்னர் பிரமாதாவிற்கு வேறானபிராணனுடைய சொரூபத்தையறிவதில் பிரமாணம் வருதலென்று சொல்லப்பட்டமையாலதற்கெதிர்மறைப் பொருளான போதலை நிரூபிக்கிறார்.

மதிம்வெதஂவம் ஹஂராஹயஃ க்ஷிதிஷாநவ்ஹ
தவாத்வாஂயஂவிக்ஷாஂவஷாநந்நாவிஷ்ஷுணாவ்ரு
த்வக்ஷுஃவிஷ்ஷாஂஞாரா ஂஸ்மதஂா பஹிராத்
தெநாஂநஃஜ்யதெஂமத் ரிதெக்வஂஹஂராஹ் எ—து

(இ—ள்) கதியென்றலலவோ சொல்லுகின்றது. உத்த ஒருவித்துவான் பாவங்களையொழித்து ப்பிரத்தியக்ஷனாய் சுத்த மனஸ்ஸாயிருந்துகொண்டு கண்ணை த்திருப்பிக் கொள்வான் அவனாத்மாவினிடத்துட் பிரவேசித்து வெளியாத்மாக்களுக்கனுமிக்கப்படுகிருன் வாவென்றல்லவோ சொல்லப்பட்டது. எ—று

(வி—ரை.) கதியென்றல்லவோ சொல்லுகின்றது. வேதங்களாலென்றிங்கு கர்த்தாவை வருவித்துசொள்ளவேண்டும். இங்கே கதியென்பது ஞானம். அது ப்ரத்தியகாத்மசொரூபஞானமே, “பராஂசிகாநிவ்யத்ருணத்ஸ்வயம்பூஸ்தஸ்மாத்பராஙஂபஶ்யதிநாந்தராத்மந் | கஶ்சித்தீர: ப்ரத்யகாத்மாநமைக்ஷதாவ்ருத்தசக்ஷுரம்ருதத்வமிச்சந் = ப்ரம்மா இந்திரியங்களை வெளிநோக்காய் சிருஷ்டித்தார். ஆகவே வெளியே பார்ப்பான். உள்ளே பார்க்கமாட்டான், ஏதோ ஒருதீரன மோக்ஷத்தை யிச்சித்துப் புலன்களைத் திருப்பிப் பிரத்தியகாத்மாவை யடைவான்” என்ற வேதாந்தத்தையே விரிக்கின்றார் எந்த ஒருவித்துவானென்பதாகியால்; வித்துவான் = ப்ரத்யகாத்மா பிரம்மசொரூபனேயென்றறிவுள்ளவன். பாவங்களையொழித்து = ஞானோற்பத்தி பந்தகமாய் நிற்கும் பாவங்களைத்துலைத்து சர்வபாவங்களுமொழிக்காலன்றி அபரோட்சமுண்டாகாதாகையாலென்க; பிரத்தியட்சனாய் = அபரோட்சசாட்சாத் காரம் பெற்றவனாய் பந்தம் நிவர்த்தியானபொழுது அபரோக்ஷ சாட்சாத்காரமுண்டானதுநியதமாதலாலென்க. (ஆகலாலேதானே) சுத்தமனஸ்ஸாயிருந்துகொண்டு = மனோலயம் பெற்று சத்தாமாத்திரனாய் கண்ணைத்திருப்பிக்கொள்வான். = கண்ணென்பது மற்றப்புலன்களுக்கு முபலக்கணமே. அதனைத்திருப்பிக்கொண்டு, என்றால் விஷயங்களிடத்

தே அதனைச்செலுத்தாதெபன்து பொருள். (அவ்விதமான ப்ரம்ம நிஷ்டனை) ஆத்மாவினிடத்துப் பிரவேசித்து = சொரூபத்தில்லயித்துத்தன் மயமாய்நின்று, ஜீவன் முக்தனுயென்பது பொருள். வெளியாத்மாக்களுக்கு வெளிநோக்குள்ள ஏனைய பக்தர்களுக்கு; அனுமிக்கப்படுகிறான் = கொளுத்திய வாடைபோலிருந்து கொண்டுந் துருத்தியைப் போலுயிர்த்தலால் மற்றைய காண்போர்க்கு இவன் தேவதத்தன் பிராமணன் என்பதாதி தர்மங்களாலனுமிக்கப்படுகின்றான். தன்மட்டுந் தன்னைத்தவிற வேறெப்பொருளையு மறியாது நிற்கும் நிலையே கதியாம். அதுவே நல்லறிவாம்; அதனையே போதமென்றுபசரித்தது. உலகத்தில் வந்த ஜீவன் மீண்டுங் காரணத்தை நோக்கிச் செல்லுதலால் இதனைநிற்மறையே வருதலாம். ஆகவே அகம், புறம், பிரேரகன் பிரேரிக்கப்படுபவன் என்பதாதி வேதவியவகாரங்களெல்லாம் பிரபஞ்ச சம்பந்தத்தாற்றானே நிகழ்ந்தனவாயின. ஆகவே அஞ்ஞானவிலாஸமே வேற்றுமை யறிவென்றெனமுடிந்தது. எ-று

அவதரணிகை.

இனி அறிவுள்ளோர்க் கிரண்டுமொன்றேயென நிருபிக்கிறார்.

ஸ ய ஏஷோ(அ)ந்தராதித்யே ஹிரண்மய: பு
ருஷோ ய: பச்யதீமாம் ஹிரண்வத் ஸ ஏஷோ
(அ)ந்தர்ஹ்ருதயபுஷ்கர ஏவாச்ரிதோ(அ)ந்நமத்தி॥ எ-று

(இ-ள்) இனி எவனாதித்தனடுவே சுவர்ணமயனான புருஷனோ எவனென்னை சுவர்ணம்போல பார்ப்பான். அந்த இவனே உள்ளே ஹிருதயத்தாமரையிலிருந்து கொண்டு அன்னத்தைப் புசிக்கின்றான். எ-று

(வி-ரை.) இனி உண்மையை விசாரித்தாலுள்ள சொரூபத்தைக் காட்டுகின்றார் இனியென்பதாதியால். எவனாதித்தனடுவே = சாந்தோக்கியம், தைத்திரியம், முதலிய வுபநிடதங்களிற் பிரசித்தன். சுவர்ணமயனான = சுவர்ணமயனென்று மேற்கண்ட வுபநிடதங்களிற் குறிக்கப்பட்டவன் முற்குறித்த விலக்கண மு

டைய பரமேசுவரன்; எவனென்னை = ஜீவாமர்க்கத்தை; சுவர்ண ம்போல் = தனது சரீரம்போல்; பார்ப்பான் = "யஆத்மநி திஷ்டந் ஆத்மநோந்தரோ யமாத்மா ந வேத யஸ்யாத்மா சரீரம் = எவனாத்மாவினிடத்திருந்தாத்மாவுக் கந்தர்யாமியாவான் எவனுக்காத்மா சரீரம்" என்பதாதி பலவுபநிடதங்களாலும், "தேஹீ தேஹமிவாதிஷ்டஸி ஸர்வம் = தேஹீ யானவன் தேகத்தை யதிட்டித்தாற்போல் நீர் உலகமெல்லாவற்றையுமதிட்டித்தீர்" 'என்றுசிரியர் சுதர்சனமூர்த்திகள் குறித்தமையாலு மஃதொவ்வுமென்க. அந்த சிவனை = சூரியமண்டலத்திலுள்ள பரம புருஷனை; உள்ளே = சரீரத்தினுட்புறத்தில்; ஹிருதயத்தாமரையில் = தாமரைபோன்ற இதயமெனப்படும் மாம்சகண்டத்தில்; அன்னத்தைப் புசிக்கின்றான் = அருந்திய வன்னத்தைப் பாகஞ்செய்விக்கின்றான்; அல்லது சுகதுக்கங்களை யனுபவிக்கிறான். ௭—௩

அவதாரிகை

இனி அவனே சர்வசொரூபனென்றுமெல்லாவித்தைகளாலு முபாஸிக்கப்படுவனென்றும் நிரூபிக்கிறார்.

ஸ ஏஷோ அந்தர்ஹ்ருதய புஷ்கரே நைவாஶ்ரிதோ அந்நமத்தி | ஸ ஏஷோ அக்நிர் திவிஶ்ரித: ஸௌர: காலாக்யோ அத்ருஶ்ய: ஸர்வபூதாந்யந்நமத்தீதி || ௭—௩

(இ—ள்) இனி எவன் உட்புறத்தில் இருதயதாமரையி லிருந்துகொண்டே அன்னத்தைப் புசிக்கிறான். இவனே அக்னி ஆகாசத்திலிருந்து சூரியனாகிறான். காலனென்ற பேருடையவன். கண்ணுக்குக் காணாதவன், எல்லாப்பூதங்களாகிற அன்னத்தைப்புசிக்கின்றான். ௭—௩

(வி—ரை) இனி எவன் உட்புறத்தில் இருதயத்தாமரையி லிருந்துகொண்டே அன்னத்தைப் புசிக்கின்றான் என்பது முன் மந்திரத்திற்றானே உரையிடப்பட்டது. இவனே அக்னி = இருதயத்திலுள்ள ஜாடராக்னி; இவனே வெளியிலண்டத்திற்காணப்படும் காலத்துள்ள ஸ்வரூபத்தைக்கூறுகின்றார் ஆகாயத்திலே

ன்பதாதியால். ஆகாயத்தில்=வெளிப்புறத்தில்; சூரியனாகிறான்= சூரியமண்டலமாகத்தோன்றுகின்றான்; இவனே காலசக்ரத்துக்கு பிரேரகனாதலால் காலனென்ற பேருடையவன் என்று; காலனெ ன்றுபேருடைய மூர்த்தி அரூபமாதலால் அது கண்ணுக்குக் கா ணப்படாதென்கின்றார் கண்ணுக்குக் காணாதவனென்பதால். அக த்தேயுள்ள பிராணனென்ற ஆத்மா நாம் புசிக்குமன்னத்தை பா கஞ் செய்விப்பானாகில் புறத்தேயுள்ள ஆதித்தனென்ற ஆத்மா எதனைப்புசிக்கிறானென விநாவிகழ அதற்கு விடையளிக்கின்றாரெல் லாப்பூதங்களாகிற என்பதாதியால். இவனுக்கு எல்லாப்பூதங்களுமு ன்னமாம் அதாவது ஒருமுறை இவன்சுழன்டால் பூதங்களினாயுள் குறைதலால் அவன் எல்லாப் பூதங்களுக்கும் பட்சகனெனச்சொ ல்லப்பட்டான். (யொவெஷ தவந்நெதி ஸஷவெ-ஷாம் ஊதா நாம் ப்ராணாநாதாயொதெதி| யொஸஷ தவஷஸ்தெதி, ஸஷவெ-ஷாம் ஊதாநாம் ப்ராணாநாதாயாஸ்தெதி) எவன் தபித்துக்கொண்டுதயமாகிறான். அவன் எல்லாப்பூதங்களின் பிராணத்தை எடுத்துக்கொண்டு தயமாகிறான் எவன் தபித்துக்கொண் டஸ்தமயத்தை யடைகிறான். அவன் எல் லாப்பூதங்களின் பிராணத்தை எடுத்துக்கொண்டே அஸ்தமயத் தை யடைகிறான் என்பதாதி சுருதிகளிருத்தலால்;

அவதரணிகை

இனி பிராணாதித்தர்களின் உபாஸனத்தை விரிப்பாராய் வி னாவிடையைத் தோற்றி வைக்கிறார்.

கிஂ வைஷ்வாஂ கியஂ ஏ—று

(இ—இ) ஏது தாமரை, எவனிவன். என்பது

(வி—ரை.) உபாஸநாஸ்தானத்தையும் உபாஸிக்கவேண்டி ய பொருளினிலக்கணத்தையும் வினவியதிது.

அவதரணிகை

இனி இவ்வினாவுக்கு விடையளிப்பாராய் அவ்வுபாஸனை யை இலக்கணங்களுடன் நிரூபிக்கிறார்.

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible] எ—று.

(இ—ள்) அந்தந்தாமரை என்பது வேதங்களை எது அந்தவிடத்திலுள்ள வாகாசம். அதற்கு இந்நான்கு திக்குகளும் நான்கு உபதிக்குகளும் ஸ்தானமாம் இவ்வக்கினி கீழே உள்ளவன் வேறு புறத்திலிருந்த பிராணாதித்தியர்கள். இவர்களை ப்ரணவம் வியாகிருதி, காயத்ரி இவைகளாலுபாசிக்கவேண்டும், எ—று.

(வி—ரை) அந்தத்தாமரை என்பது = இதயத்தாமரை என்று தகரோபாஸனஸ்தலங்களில் நிரூபிக்கப்பட்ட மாம்ஸகண்டம் அது தாமரை போன்று நான்கு இதழ்களுடன் கூடியமையால் அதனைத் தாமரை என்று நூல்கள் உருவகப்படுத்தினவென்க. அது வேதங்களாக பாவிக்கத்தக்கதென்பது கருத்து; எது அந்தவிடத்துள்ளவாகாசம் = சிச்சக்தி ரூபமாகிய சிதம்பரம்; அதற்கு அவ்வாகாயத்திற்கு; இந்நான்கு திக்குகளும் நான்குபதிக்குகளும் = அதாவது ஸமஸ்த ப்ரபஞ்சங்களும்; ஸ்தானமாம் = ஸ்வரூபமாம்; 'யாவான்வா அயமாகாஶஸ்தாவானேஷோந்தர்ஹ்ருதய ஆகாஶ:' = எவ்வளவு இவ்வாகாசமோ அவ்வளவு உள்ளேயுள்ள ஆகாசமும் என்று வேதம் நிரூபித்தலால் அண்டத்திலும் பிண்டத்திலும் நிறைந்தது இவ்வாகாசமாம். இவ்வாகாசமும் மேற்குறித்த மாம்சபிண்டமும் சேர்ந்தே தகரவித்தைகளில் தாமரையெனச் சொல்லப்படுமென்பது பொருள். இஃது எது தாமரை என்ற வினாவுக்கு விடை. அதனிடத்தே உள்ள புருஷனை நிரூபிக்கின்றார் இவ்வக்கினி என்பதாதியால். இவ்வக்கினி = ஜாடராக்கினி என்று சொல்லப்படுமக்கினி; கீழே = அதனடிப் புறத்தே; உள்ளவன் = என்று அறியப்படுபவன்; இங்கு அக்கினி என்றது அக்கினியின் சிகையிலுள்ள ஆத்மஸ்வரூபத்திற்குங் குறிப்பு; ஆகவேயவன் உபாஸகனெனக் காட்டப்பட்டான். வேறுபுறத்தில் =

அவ்விதயத்திற் ககத்தும் புறமும்; பிராணாதித்யர்கள் = பிராணனும் ஆதித்யமூர்த்தியுமாம்; பிராணன் சமீபத்திலுள்ளவன். ஆதித்தியன் தூரத்திலுள்ளவன் இவர்களே உபாஸ்யர்களென நிரூபித்தமையால் இரண்டாம் வினாவுக்கும் விடையளிக்கப்பட்டது. இனி இவ்விருவர்களையும் வெவ்வேறாக வழிபடக்கூடுமோவெனின் (ப்ராண꞉ ப்ரஜாநாமுதயத்யேஷ ஸூர்ய꞉) பிரஜைகளுக்குப் பிராணனான இந்த சூரியன் உதிக்கின்றான் என்று பல வேதாந்தங்கள் நிரூபித்தமையால் கூடாதெனக் கொள்க. அவ்வுபாசனைக்குரிய மந்திரத்தைக் குறிக்கின்றார் பிரணவம் என்பதாதியால்; பிரணவம் வ்யாஹ்ருதி இவைகளுடன் கூடிய காயத்திரியே இங்கு மந்திரம். தனித்தனி எனப்பொருள் கோடல் கூடாது; தனித்த வ்யாஹ்ருதி அங்கமாகாமையாலென்க.

அவதாரிகை.

மேலே உபாஸிக்கத்தக்க ரூபவிசேஷத்தைக் குறிக்கின்றார்.

த்வே வாவ ப்ரஹ்மணோ ரூபே மூர்த்தம் சாமூ
ர்த்தஞ்ச யந்மூர்த்தம் ததஸத்யம் யதமூர்த்தம் த
த்ஸத்யம் தத்ப்ரஹ்ம யத்ப்ரஹ்ம தஜ்ஜ்யோதிர்யஜ்ஜ்யோ
தி꞉ ஸ ஆதித்ய꞉ (என்பதாதி)

(இ—ள்) இரண்டல்லவோ பிரும்மத்துக்குள்ள ரூபங்கள், மூர்த்தமும் அமூர்த்தமும்; எது மூர்த்தமோ அது அஸத்யம், எது அமூர்த்தமோ அது ஸத்தியம். அது பிரும்மம் எது பிரும்மமோ அது ஜோதி, எது ஜோதியோ அது ஆதித்தியன். எ-று

(வி—ரை) பிரும்மத்துக்குள்ள = மேற்குறித்தபடி ஸவிசேஷமாயும் நிர்விசேஷமாயும் நிரூபிக்கப்பட்ட பிரும்மத்திற்கு; இரண்டுரூபங்கள் = உபாசனார்த்தமாகவும் உண்மையிலுள்ளதாயாகவும் இரண்டு குறிக்கப்பட்டிருக்கின்றன. அவையாவன—மூர்த்தமும் அமூர்த்தமும்; மூர்த்தம் = இந்திரியங்களால் காணக்கூடியது; அமூர்த்தம் = ஸ்வானுபவத்தாலேயே அறியக்கூடியது. எதுமூர்

த்தம் = பிருதிவிமுதலிய எண்மூர்த்திகள் பிரத்தியட்சங்களாதலி லவை; அசத்யம் = ஸத்யாமனஸ்வரூபத்திற் கற்பிக்கப்பட்டு ஸத்ய ம்போற்றோன்றுவது. ஒவ்வொருகாரியமும் காரணத்திலும் வேற ன்றாதலின் 'ஈசுவரனைக்காரணமாகவுடைய இப்பிரபஞ்சம் ஈசுவர னாகவே இருத்தல் நியாயமேயாதலால். ஆதலாற்றான் வேறுக ருதியிலும் (வாசாரம்பணம் விகாரோ நாமதேயம் ம்ருத்திகேத்யேவ ஸத்யம்) = வாக்கால் வ்யவகரிப்பது விகாரமும் நாமதே யமும் மிருத்திகை என்பதே ஸத்யம் என்று காரியகாரணங்களி னைக்யம் நிரூபிக்கப்பட்டது; எது அமூர்த்தம் = சூக்குமம் இந்தி ரியங்களுக்ககப்படாதது. பக்தர்பாவனைக்கேற்றவாறு பலவகைப் படுந்தன்மையுளது. ஜகத்காரணம் மாயாசபளம்; அதுஸத்யம் = காரியத்தைநோக்கக் காரணம் ஸத்யமாதலின். இதனைச்சத்ய மென்றது தேவர்களை மரணமில்லாதாரென்றாற்போல். அற்றேல் மூர்த்தமென்பதற்குக்காணக்கூடியதெனவும் அமூர்த்தமென்பத ற்குக் காணக்கூடாதெனவும் கிடைத்தவாறு பொருளுரைப்ப தில் குற்றம் வந்தது யாதெனில் கூறுதும். அங்ஙனம்பொருள் கொண்டால் ஸத்யமான பிரும்மஸ்வரூபம் எப்புலன்களுக்குமக ப்படாததாகமுடியும். முடிந்தால் அதனுபாஸனைகைகூடாது. அ ப்படியானல் மேலேயதனைச் சூரியனென்று நிரூபித்தது மிகக் குற்றமற்றதாகும். ஆகையாலேயே அங்ஙனம் பொருளுரைத் தாமென்க. அதுபிரும்மம் = அதுவே யுபாசிக்கத்தக்க ஸவிசேஷ பிரும்ம ஸ்வரூபம் - உமாபதியாம் (தயோக்தம் மந்த்ரவர்ணே ஏதத் ஸம்புஷ்டம் மந்த்ரவர்ணே ஏதத் ஸம்புஷ்டம்' இனி எதனைப் பரப்பி ரும்மமெனச் சொல்லப்படுகின்றான் (என்று விஞ்ஞாநகீத்தி) அத னல் பரப்பிரும்மமெனச் சொல்லப்படுகின்றானென்பதுவரை அத ர்வசிரோபநிடதத்தில் பரப்பிரும்மமென்றசொல்லுக்கு சிவனே பொருளென நிரூபிக்கப்பட்டமையாலென்க. இனி யது பிரும்ம மாயிருக்க. உபாஸனைசெய்யுமெமக்கு அதனுற்பயன் யாதென வினவுகின்றோர்க்குவிடை யதனை விசேஷிக்கின்றார் அது ஜோதி என்று. ஜோதி = பிரகாசஸ்வருபம்; சோதியாதலால் காலத்தால் ஞானமுண்டாம் என்பது கருத்து. அச்சோதியை எவ்விதம் வழிபடுவதெனவாசங்கை நிகழக் குறிக்கின்றார் அவனுதித்தனே ன்று. ஆதித்யன் = மண்டலம் மண்டலபுருஷன் அவனந்தர்யாமி

என் மூவ்வகைப்பட்ட மூர்த்தி; இதுவேபிரகிருதமாம் இவ்வளவும் ஆதித்யோபாஸ்தியின் அர்த்தவாதம். எ—து

அவதாரணிகை

இனி உபாஸனத்தைவிரிக்கின்றார்.

ஸவா ஏஷ ஓமிதி த்ரேதாத்மா, ஸ த்ரேதா
த்மாநம் வ்யகுருத ஓமிதி திஸ்ரோ மாத்ரா
ஏதாபி: ஸர்வமிதமோதம் ப்ரோதம், சைவ
வாஸ்மிந்நிதி த்ரேதாவம் ப்ரபத்ய ஆத்மாநம் யுஞ்
ஜீத। ॥ எ—று

(இ—ள்) அப்பரமாத்மா பிரணவஸ்வரூபனாயுள்ளவன் அவன் தன்ஸ்வரூபத்தை மூன்றுவகையாக்கினான். பிரணவத்திற்கு மூன்றுமாத்திரைகள். அம்மாத்திரைகளால் பிரபஞ்சமெல்லாம அந்தப்பிரணவத்தினிடத்திலே ஓதமும் ப்ரோதமுமாய் இருக்கிறது. இப்படி தியானஞ்செய்து அப்படியே ஆத்மாவைச்சேர்க்கவேண்டும். எ—து

(வி—ரை) அப்பரமாத்மா = முன்னிரூபிக்கப்பட்ட சவிசேஷன். பிரணவஸ்வரூபன் = பிரணவம் ஓங்காரமென்பவைகளை சிவநாமதேயமாய் அதர்வசிரோபநிடதம் குறித்தமையால் என்க. அவன் = அந்த ஈசன்; தன்ஸ்வரூபத்தை = பிரணவத்தை, மூன்றுவகையாக்கினான் = பிரம்மவிஷ்ணுருத்திரனாய் மூன்றுருபங்களும் அவர்களுக்குரிய மும்மாத்திரைகளுமவைகளாம். அதனையே வற்புறுத்துகின்றார்.பிரணவத்திற்குமூன்றுமாத்திரைகளென்று;பிரணவத்திற்கு = பிரணவமென்ற அட்சரத்திற்கு; அல்லது பரமேசுவரனுக்கு; மூன்றுமாத்திரைகள் = மூன்றுள்ளட்சரங்கள்; அல்லது மூன்றம்சங்கள், ஒவ்வொருகுணோபாதியில் ஒவ்வொருமூர்த்தி ஒவ்வொருமாத்திரையுடன் அமைதலாலென்க. அம்மாத்திரைகளால் = அம்மும்மாத்திரைகளால். அம்மும்மூர்த்திகளால்; பிரபஞ்சமெல்லாம் = உலகமெல்லாம். அந்தப்பிரணவத்தினிடத்திலே =

அந்தபரமேசுவரனிடத்திலே, அல்லது அந்த மூலமூர்த்தியினிடத்திலே. ஓதமும் ப்ரோதமும் = ஆடையில் நூல்களைப்போல உள்ளடங்கச்செய்யப்பட்டன.; இவ்விரண்டு சொற்களுஞ் சேர்ந்து இருபுறத்திலும் வியாப்தியைநிரூபித்தனவாம். ஆதலாற்றான் வேறுவேதத்திலும் (ஸர்வேஷு ப்ரஹ்மவிஷ்ணுருத்ரேந்த்ராஃ) ஈதெலாம் பிரும்மவிஷ்ணுருத்திரேந்திரர்கள் இப்பிரணவாதித்யனிடத்தில் இப்படி தியானஞ்செய்து = இந்தப்பிரணவமே ஆதித்தன் ஆதித்தனே பிரணவமென்று தியானித்து. ஆத்மாவை = சொரூபத்தைசேர்க்கவேண்டும் = அவ்வாத்மாவினிடத்தே தானென்று தியானித்தலைக்கவேண்டும். அதனாலேயே வேதம்சொல்லுகின்றது. (ஸர்வந்த ப்ராஹ்மணோ வித்வாந் ஸகலம் ஸத்ரூபமேவ அஸாவாதித்யோ ப்ரஹ்மேதி ப்ரஹ்மைவ ஸந் ப்ரஹ்மாப்யேதி) இவ்வாதித்தனே பிரும்மமென்று அங்ஙனமுபாசிக்கும் பிராமணன் எல்லாப்பெருமையையும் பெறுவான்' பிரும்மமாகவே இருந்துகொண்டு பிரும்மத்தையடைவான் என்று எ—து.

அவதாரணிகை

இனி இவ்விஷயத்தில் ஸ்வசாகையான சாந்தோக்யத்தையும் பிரமாணமாகக் காட்டுகின்றார்.

அத க²லு ய உத்³கீ³த²ஸ்ஸ
ப்ரணவோ ய: ப்ரணவஸ்ஸ உத்³கீ³த² இதி அஸாவாதி³
த்ய உத்³கீ³த² ஏஷ ப்ரணவ இதி என்று

(இ—ள்) இனிவேறிடத்திலுஞ்சொல்லப்பட்டது. இனி எது உத்கீதமோ அது பிரணவம்; எது பிரணவமோ அது உத்கீதம்; ஆதித்தனே பிரணவம்; அவனே உத்கீதன் என்று.

(வி—ரை) சாந்தோக்யத்தில் சொன்னதே ரிக்கு வேறிடத்திலென்று சொல்லப்பட்டது. இத்தியைய யபேக்ஷித்த ஏருமெதனை விசேஷமாயுபாசிப்பார்; அதுவே உத்கீதமாம். அதுபி

ரணவம் = தாரகம் இரண்டையுமொன்றுபடுத்திக் கூறுகின்றார் எது பிரணவமோ அது உத்கீதம் என்று. மேலுபசங்காரத்தைக் குறிக்கின்றார் ஆதித்தனே பிரணவம் என்பதாகியால். இங்கு ஆதித்தனது உபாஸ்தி பிரகிருதமாதலால் அதனையே உபசங்காரத்தில் நிறுத்தி அந்த ஆதித்தனிடத்து பிரணவாபேதத்தைக் காட்டுவதுசிதமென்க. எ—து

அவதாரணிகை.

மீண்டுமதனையே விரிக்கின்றார்.

இத்த²ம் ஸர்வேசா²நீய: ப்ரணவாக்²யம்
ப்ரணேதாரம் பா⁴ரூபம் விக³தநித்³ரம் விஜரம்
விம்ருத்யும் வா ந: பஞ்சதா⁴ஜ்ஞேயம் நிஹிதம்
கு³ஹாயாம் எ—று

(இ—ள்) இப்படியல்லவோ உத்கீதவித்தை சொல்லுகிறது. பிரணவமென்றபெயருடையவனும் காமரூபங்களை பிரேரணஞ்செய்பவனும் நித்திரையில்லாதவனும், கிழத்தனமில்லாதவனும், மிருத்யுவில்லாதவனும், மேலுமைந்துவிதமாகவறியக்கூடியவனும், குகையிலுள்ளவனுமாம். (அவன்)

(வி—ரை) பிரணவாதித்த சொருபனும் உபாசிக்கத்தக்கவனென்று வேதாந்தங்களால் நிரூபிக்கப்பட்ட பரமேசுவரவிஷயத்தில் உத்கீதவித்தையினபிப்பிராயத்தை நிரூபிக்கின்றார் இப்படியல்லவோ என்பதாதியால்; உத்கீதவித்தை என்பது சாந்தோக்கியம் முதலிய உபநிடதங்களில் நிரூபிக்கப்பட்டது, அஃதெங்ஙனம் நிரூபித்ததென்பதைப் பற்றி பிரணவமென்ற பெயருடையவனுமென்பதாதியால் நிரூபிக்கின்றார். பிரணவமென்ற பெயருடையவன் = இனி எதனால் பிரணவமெனச் சொல்லப்பட்டான் என்று தொடங்கி அதர்வசிரசு பரமேசுவரனுக்கே பிரணவமென்ற பெயர் உரித்தாமென நிரூபித்திருக்கின்றமையால்" அவனே இங்கு பிரதிபாதிக்கப்படுகின்றவன். இதேபொருளதர்வசிகையிலும் சொல்லப்பட்டதுண்டு. அவனுக்கு பிரணவமென்றபெயர் வந்ததற்குக்

காரணமாய் எவ்லாவற்றையும் பிரேரிப்பவனே யவனென அதிர்வசிகையும் சிரஸ்ஸாம் கூறியவாறு வினைய சுருதிகளும் கூறினவாமென இம்மந்திரமனுவதிக்கின்றது நாமரூபங்களை என்பதாதியால். நாமரூபங்களை = நாமரூபமயமான பிரபஞ்சத்தை; பிரேரணைஞ்செய்பவன் = அவனிடத்தே நாமரூபமயமான பிரபஞ்சம் கற்பிதமாதலால் ஆத்ம சைதன்னியமின்றி உலகத்திற்கு வேறுசத்தை இன்மையால்; நித்திரை இல்லாதவன் = நித்திரை என்பது தமோகுணத்தின் காரியமாதலால் எல்லாவகைத் தமோகுணகாரியங்களுக்கும் இதனையுபலக்கணமாய்க்கொண்டு எவ்விதத் தமோகுணகாரியங்களும் ஈசனிடத்தில்லையெனப் பொருள் கொள்ளவேண்டும். கிழத்தனமில்லாதவனும் = ஷோடஶவர்ஷாக்ருதிஸௌந்த³ர்யஸர்வலக்ஷணலக்ஷித꞉| யச்சக்ஷுர்ப்ராணத³ம் ரூபமேவம் தத³பஶ்யாமி = பதினாறுவயதுள்ள ஆகாரத்தைப்பெற்றவன் சுகுமாரன் எல்லா இலக்கணங்களையுமுடையவன் என்றும், எதுகல்யாணத்தைக் கொடுக்கக்கூடிய உனது ரூபம் அதைப்பார்க்கின்றேன் என்றும், புராணவேதங்கள் நிரூபித்தமையால்; மிருத்யுவில்லாதவன் = மிருத்யுஞ்செயனாதலால்; ஐந்துவிதமாகவறியக்கூடியவன் = ஸத்யோஜாதன், வாமதேவன், அகோரன், தத்புருஷன், ஈசானன் என்ற ஐந்துரூபத்தாலும்; அல்லது பிரும்மா விஷ்ணு, ருத்திரன், ஈசுவரன், ஸதாசிவனென்ற ஐந்துமூர்த்திகளாலும், அவனுபாஸனை வேதங்களில் சொல்லப்பட்டமையால்; குகையிலுள்ளவன் = இருதயசிதம்பரத்தில் வசிப்பவன்; ஆகவே அந்தப்பரமேசுவரனையே யுபாசிக்கவேண்டுமென்பது அனந்தவேதாந்தங்களின் கருத்தாமென்பதாயிற்று.

எ—று

அவதாரணிகை.

இனிவேறுசாஸ்திரத்தையுமனுவதித்து அதனையுமிவ்வித்தையினிடத்தே உபசங்கரிக்கின்றார்.

> ஏதத்³வம் ஸர்வேஷாம் ப்⁴ருதாநாம் ஸுஷுப்த
> ஸாவோ ஆகாஶவாயுஹ்வக்³நிஜலப்⁴ருத்²வ்யாதீ³ந
> ஏகநாத³ம்வா தத்³த்³ருஷ்டா தத்தத்³ப³ஸ்ரேதத்³ய

யதஸாவாதித்ய ஓங்காராக்யஸ்ய சைதத்

தஸ்மாதோங்காரேணைததுபாஸீதாஜ

ஸ்ரமித்யேகோஸ்ய ஸம்போதயிதா எ-று

(இ—ள்) இப்படியல்லவோ சொல்லுகின்றார். மேலேவேரும் பிரும்மாவரை கிளைகளுள்ளதும், ஆகாசம், வாயு, அக்கினி, ஜலம், பூமி, முதலியனவை ஒன்றாலேயே இருக்கப்பட்டன. அதுவே பிரும்மம். ஆகையால் அவனுடையது முன்னுடையதுமாயுள்ள இந்தரூபம் இந்த ஆதித்யனும் பிரணவாட்சரத்திற்குள்ளதுமாம். ஆகையால் பிரணவாட்சரத்தினாலே இதனை இடைவிடாமல் உபாசிக்கவேண்டுமென்று ஒருவனுக்கொருவன் அந்தரஸத்தைபோதிக்கவேண்டும். எ-று

(வி—ரை) மேலேவேரும் = ஊர்த்வமூலமதச்சாகமச்வத்தம் ப்ராஹுரவ்யயம் = மேலேவேரும் கீழேகிளையுமுள்ளதாய் நித்தியமான அசுவத்தத்தைச் சொல்லுவார்களென்று கீதைநிரூபித்தவாறு இந்தப்பிரபஞ்சமென்ற மகாவிருட்சம் மேலே வேருடையதாம். வேரென்பது மகதாதிகாரணங்களைக்குறிப்பது. பிரும்மாவரை கிளைகளுள்ளது = இதற்கு பிரும்மதேவன் முதல் புழுக்கள் வரை கிளையே. அந்தக்கிளைகளையே விரித்துக்காட்டுகின்றார். ஆகாசம் என்பதாதியால். ஆகாயம் முதலிய பஞ்சபூதங்களுமதன் கிளைகளே. முதலியனவை என்பது இந்திரியம் முதலியனவற்றைக் குறிக்கும். ஆகவே எல்லாஉலகப்பொருள்களும் இதனாற்சொல்லப்பட்டது. இவையெல்லாம் ஒரே பிரும்மமாகிய காரணத்தினின்டத்து உண்டானவென நிரூபிக்கின்றார் ஒன்றாலேயே.. என்பதாதியால்; ஒன்றாலேயேயிருக்கப்பட்டன = ஒரேபிரும்மத்தினாலே தம் முள்தாம் சிருஷ்டிக்கக்கொள்ளப்பட்டன. அதுவே பிரும்மம் = இவ்விதம் சிருஷ்டிக்கிறதும், சிருஷ்டிக்கப்பட்டதும், பிரும்மசொரூபமேயாம். எங்ஙனம் மண்ணானது குடம் முதலிய பலஅமைப்புகளைப்பெறினும், மண்ணியல் குன்றாதங்ஙனமே இதுவாம்; ஆகையால் = எல்லாப்பிரபஞ்சமும் சோதனையில்பிரும்மசொரூபமேயாதலால் அந்தஸவிசேடரூபமும் ஜீவனுடையரூபமும் பிரணவாதித்தர்களி

ன்ரூபமும் ஒன்றேஎன்கின்றார் அயனுடையது மென்பதாகியால்; பிரணவாட்சரத்திற்குள்ளது = பிரணவத்திற்குள்ளரூபம்; ஆகவே ஆதித்தன் பிரணவம் பிராணன் இவைகளையுபாசிப்பது பிரம்மோபாஸ்தியேயாயிற்று. அதற்கு மந்திரம் ஈதெனக்குறிக்கின்றார்பிரணவாட்சரத்தினாலே என்பதாகியால. பிரணவாட்சரத்தைக்கொண்டுபிராணாதித்தாதிகளை உபாசிப்பவனுக்கு ஓர்ஆசாரியனவசியம் வேண்டப்படுவானாதலின் அவனது ரூபத்தைச் சொல்லுகின்றார் என்று ஒருவனுக்கொருவன் என்பதாகியால். ஒருவனுக்கு = ஒருசிஷ்யனுக்கு; ஒருவன் = ஆசாரியன்; அந்தரஸத்தை = ஸர்வஸாரபூதமானபிரும்மசொரூபத்தை. போதிக்கவேண்டும் = உபதேசிக்கவேண்டும். குருபதேசமில்லாமல் தானாய்ச்செய்யுமுபாசனை வியர்த்தமேயாமென்பது கருத்து.

அவதாரணிகை

மேலே அட்சராபாஸ்தியை உபசம்சரிக்கின்றார்.

𑌏𑌤𑌦𑍍𑌧𑍍𑌯𑍇𑌵𑌾𑌕𑍍𑌷𑌰𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌏𑌤𑌦𑍍𑌧𑍍𑌯𑍇𑌵𑌾𑌕𑍍𑌷𑌰𑌂 𑌪𑌰𑌂
𑌏𑌤𑌦𑍍𑌧𑍍𑌯𑍇𑌵𑌾𑌕𑍍𑌷𑌰𑌂 𑌜𑍍𑌞𑌾𑌤𑍍𑌵𑌾 𑌯𑍋 𑌯𑌦𑌿𑌚𑍍𑌛𑌤𑌿 𑌤
𑌸𑍍𑌯 𑌤𑌤𑍍 எ-ரு

(இ—ள்) இப்படியல்லவோ சொல்லுகின்றார்கள். இத்த அட்சரமே புண்ணியமாம். இந்த அக்ஷரத்தை அறிந்து எவன் எதை இச்சிக்கிறான் அவனுக்கு அது (உண்டு).

(வி—ரை) இந்த அட்சரமே = அட்சரமென்று வேதாந்தங்களிற்சொல்லப்பட்ட பிரணவசொரூபபிரும்மமே. புண்ணியம் — துக்கசம்பந்தமில்லாத சுகஸ்வரூபம். இந்தஅட்சரத்தை அறிந்து = இதுவே ஸர்வஸாரூபமென்று தெளிந்து; எவன் எதை இச்சிக்கின்றான் = எவன் இந்தச்சொரூபத்தையுபாசிக்கின்றான், அவனுக்கு அது = அவன் அந்தரூபனாகவேயாவான் ப்ரஹ்மவித்ப்ரஹ்மைவ பவதி, பிரும்மத்தையறிந்தவன் பிரும்மமேயாவான் என்பதாதி பலசுருதிகளில் கூறுகின்றமையால்.

எ—ரு

அவதாணிகை

இனி இந்தவிஷயத்தில் வேறுபிரமாணங்களின் ஒற்றுமை யையுங்காட்டுகின்றார்.

அதாந்யத்ராப்யுக்தம் ஸ்வநவத்யேஷா ஸா தநூ
ரோமிதி ஸ்த்ரீ புமாந் நபும்ஸகமிதி லிங்கவத்யே
ஷா, அதாக்நிர்வாயுராதித்ய இதி பாஸ்வத்யே
ஷா, அத ப்ரஹ்மா ருத்ரோ விஷ்ணுரித்யதிபதி
வத்யேஷா, அத கார்ஹபத்யோ தக்ஷிணாக்நி
ராஹவநீய இதி முகவத்யேஷா, அத ருக்யஜு
ஸ்ஸாமேதி விஜ்ஞாநவத்யேஷா, அத பூர்புவ
ஸ்ஸுவரிதி லோகவத்யேஷா, அத பூதம் ப
வ்யம் பவிஷ்யதிதி காலவத்யேஷா, அத ப்ரா
ணோக்நிஸ்ஸூர்ய இதி ப்ரதாபவத்யேஷா அதா
ந்நமாபஶ்சந்த்ரமா இத்யாப்யாயநவத்யேஷா,
அத புத்திர்மநோஹங்கார இதி சேதநவ
த்யேஷா, அத ப்ராணோபாநோ வ்யாந
இதி ப்ராணவதீ. ஏதேநோமித்யுக்தே
தாஸ்ஸ ப்ரஸ்தாவிதா பவந்தீத்யேவம்
ஹ்யாஹைதத்வை ஸத்யகாம பரஞ்சாபரஞ்ச
ப்ரஹ்ம யதோமித்யேததக்ஷரமிதி எ-து

(இ—ள்) வேறிடத்திலுஞ்சொல்லப்பட்டது. இந்தபரமேசுவரனுக்கு நாதத்துடன் கூடிய சரீரம் பிரணவமென்றும், லிங்கத்துடன்கூடிய சரீரம் ஸ்திரீ புமான் நபும்ஸகமென்றும், இனி அக்கினி வாயு ஆதித்யனென்றது தேஜஸ் உள்ளதென்றும், இனி பிரும்மாவிஷ்ணு ருத்திரன் என்பது ஆதிபத்யமுள்ளதென்றும், இனி கார்ஹபத்யம் ஆஹவனீயம் தெட்சிணாக்கினி என்பது முகமுடையதென்றும், ரிக்கு எஜு

ஸ் ஸாமமென்றது அறிவுடையதென்றும், இனி பூ புவ ஸ்ஸு
வ என்பன லோகமுடையதென்றும், சென்றது நடப்பது
வருவது என்பது காலமுடையதென்றும், இனிபிராணன்
அக்கினி சூரியன் இது பிரதாபமுடையதென்றும், இனி
அன்னம் ஜலம் சந்திரன் இவைகள் திருப்தியுடையதென்
றும், இனி புத்தி மனஸ் அகங்காரமென்பது சேதனமுடை
யதென்றும், இனி பிராணன் அபானன் வ்யானன் என்
பது பிராணனையுடையதென்றும், ஒன்றேயென்றும், அனு
என்றும், சொன்னவுடன் இதுகளை எவன் ஸ்தோத்திரஞ்
செய்வான்; அவன் (பிரும்மத்தில்) அர்ப்பிக்கப்படுவான்.
இப்படியல்லவோ சொல்லுகிறது. ஓ சத்தியகாம இதுவே
பரமும்பரமுமாயுள்ளது. இப்பிரணவமே அட்சரமென்பது
என்று எ-று.

(வி—ரை) ஒவ்வோரிடத்தில் ஒவ்வொருவிதமான சரீரம்
ஈசுவரனுக்கு நிரூபிக்கப்பட்டமையால் அவைகளை எல்லாமோரிட
த்தில் உபசங்கரிக்கின்றார் நாதத்துடன் கூடிய சரீரம் என்பதா
தியால். நாதத்துடன் கூடியசரீரம் = நாதரூபமாயுள்ள சரீரமெ
ன்பது கருத்து இப்படியே மேலேவரும் உடைமைப்பொருள்
கொடுக்கும் சரீரத்தை எல்லாம் தன்னிடத்தே நிலைபெறுவிக்க
வேண்டும். லிங்கத்துடன்கூடியது = ஆண்குறி, பெண்குறி, அலிக்
குறி என்பன லிங்கமென்ற சொல்லுக்கு உண்மைப்பொருளா
யினும், வடமொழியில் சொற்களிலமைந்த லிங்கம் சொற்றன்
மையேயாதலால் இங்கு லிங்கமென்பதெல்லாம் அஃதே யாமெ
ன்க. அப்படி என்றால் ஆண்பால், பெண்பால், ஒன்றன்பாலென
ப்பட்ட இப்பிரபஞ்சமெல்லாம் ஈசனது சொரூபமே என்பதா
யிற்று. வாயுவிற்கும் சூட்சுமமான பிரகாசமுண்டென்றும், அது
வேகத்துடன் செல்லுங்கால் அதனிடத்து தேயுவுண்டாகுமென்
பது வாயுவை தேயுவிற்சேர்த்த சுருதியின் கருத்து. ஆதித்ய
முள்ளது = சிருஷ்டி ஸ்திதி சங்காரமென்றமுத்தொழிலுடையது
இம்மும்மூர்த்திகளும் பரமேசுவரசொரூபங்களேயாமென இவ்வுப
நிடதமே நிரூபித்திருக்கின்றமையால் இங்ஙனம் கூறப்பட்டன

முகமுடையது = முகம் ஹ்யக்நிர்தேவதாநாம் முகம் ஹவா ஏஷ தேவா: = அக்கினி தேவதைகளுக்கு முதல்வன் முக மெனப்படுவான். தேவதைகள் அக்கினியை முகமாயுடையவர் கள் என்பதாதி சுருதிகளால் அக்கினிதேவமுகமாதலால் இங்கச்ச ரீரம் முகமென நிரூபிக்கப்பட்டது; அறிவுடையது = அறிவையு ண்டாக்குவது; லோகமுடையது = லோகமாயுள்ளது. பிரதாப முடையது = வேறொருபொருளுக்கு பாகத்தைக்கொடுப்பது. பி ராணனும் யாம் புசிக்கும்பொருள்களை பாகஞ்செய்வித்தலால் பி ரதாபமுடையதெனச் சொல்லப்பட்டது. திருப்தியுடையது = தி ருப்தியையுண்டாக்குவது. சேதனமுடையது = சேதனபிரதிபிம் பமாகிய விருத்திஞானமுடையது; பிராணனையுடையது = பிரா ணஸ்வரூபமாயுள்ளது. ஒன்றேயென்றும் = இவை எல்லாம் ஏ கப்பொருளே என்றும் அஜையென்றும் = உத்பத்தியில்லாததெ ன்றும் அஜமென்பதுபொருள். சொன்னவுடன் = உபதே சித்தவுடன்; இதுகளை எவன்ஸ்தோத்திரஞ்செய்வான் = இதுக ளை மேற்கண்டவைகளை ஸ்தோத்திரஞ்செய்வானென்றால் தியா னிப்பானென்பது பொருள். அறியப்படுவான். = சேரு வான். இப்படியல்லவோ சொல்லுகிறது ஓ சத்தியகாம என் பது சாந்தோக்கியத்தில் பிரசித்தனான சத்தியகாமனென்ற ஜாபா லனையுத்தேசித்து வேறுவேதாந்தங்களில் உள்ள உபதேசவாக்கி யத்தினனுவாதம் இதுவே பரமுமபரமுமாயுளளது = பரமென் பது துரீயம், அபரமென்பது மற்றது. ஆகவே பிரும்மமும் ம ற்றதும் ஒருபொருளேயன்றி வேறில்லை என்றாயிற்று. உபதே சவாக்கியத்தையநுவதிக்கின்றார், பிரணவமேயென்பதாதியால் அட் சரமென்பது = நாதபிந்து சொரூபமாயுள்ளதென்பது அல்லது அட்சரமென்றசொல்லால் வேதங்களில் வழங்கப்பட்டது அல் லது பிரும்மம். இதனால் பிரணவத்தையே பிரும்மமாயுபாசிக்க வேண்டுமென்பது உபதேசிக்கப்பட்டதாயிற்று. எ—று

அவதரணிகை

இனி அதனையேவிரிக்கின்றார் —

அயம் வாவ கலு ஆத்மா தே தத்துவம் ப்ருஹத் ஜ்ஞாநஸாத்

[illegible]

(இ-ள்) இனி இதெல்லாம் எங்கும் நிறைந்து ஸத்யமாயிருந்தது பிரஜாபதி தவத்தைச் செய்து பூ:. புவ:. ஸுவ: என்றுச் சரித்தார். இனி இது சொல்லுவது பிரஜாபதியினது ஸ்தூலமான சரீரம் போகமுடையதிதுவாம். பூ: என்பது அதற்குத்தலை. கர்மங்களுடன் கூடியது புவ: என்பது ஸுவ: என்பது பாதங்கள். ஆயத்தபுருஷனுக்கு பெரியதோர் மாத்திரையான கண் ஆதித்யன். இவன் மாத்திரைகளைக்காண்பது கண்ணாலேயே. ஸத்தியமே கண்ணும் புருஷனுமவன் கண்ணிலேயிருந்தே எல்லாப் பொருள்களிலேயும் விளங்குகிறான். ஆகையால் ஸத்யம் என்றுமுபாசிக்கவேண்டும். அன்னமே உலகிசொரூபமான பிரஜாபதி உலகக்கண்ணே என உபாசிக்கப்படுவான். இப்படியல்லவோ சொல்லுகிறார். இதையே பிராஜாபதி சரீரமாய்த்தரித்தார். இதனிடத்தே எல்லாமுள்ளடங்கியிருக்கின்றன. எல்

லாவற்றிலும் இது உள்ளடங்கியிருக்கின்றது. ஆதலால் இதனையுபாசிக்கவேண்டுமென்பது. எ-று.

(வி—ரை) இனி என்ற சொல் ஒரு பிரகரணத்தினாரம்பத்தைக்குறிக்கின்றது. முன்னேபிரணவோபாஸ்தி சொல்லப்பட்டது. இங்கு வியாகிருதிகளாலுபாஸ்தி சொல்லப்படுகிறது. இதெல்லாம் = யாம்காணும் பொருள்களெல்லாம்; எங்குந்நிறைந்து = ஸத்தியத்துடன் வேறுபிறிக்கக்கூடா நிலைமையிலிருந்து. ஸத்தியமாய் = தன்மயமாய்; இருந்தது = இதுவே ஆதிசிருஷ்டியினவஸ்தை சித்து அசித்து நாமம் ரூபம் முதலிய வேற்றுமைகள் எல்லாம் அச்சமயமங்கில்லை என்றேற்பட்டது. ஆகவே பிரும்மமே அச்சமயத்தில் தம்முள் எல்லாப்பிரபஞ்சங்களும் ஒடுங்க ஒன்றாய் நின்றதென்று பொருளாயிற்று. இவ்விதம் நிற்றலே ஜகத்தின் சிருஷ்டியதிகாரமாதலால் அவனை அந்நிலையில் பிரஜாபதி என்றுவழங்குகின்றார் பிரஜாபதி என்பதாதியால்: பிரஜாபதி = உலகசிருஷ்டிக்குரியதேவதை; தவத்தைச் செய்து = தியானித்தது. அதாவது தம்முள்ளடங்கிய அனந்தகோடியுயிர்களுக்கு அவற்றின் கன்மங்களுக்கேற்றவாறு சங்கற்பிப்பதே; பூ: புவ: ஸுவ: என்றுச்சரித்தார் = பூ: முதலியமுச்சொற்களை ஸர்வாதார சிருஷ்டிக்காகஸங்கல்பானுகுணமாய் இச்சொற்களைச் சொல்ல வேதங்களிலுள்ள அச்சொற்களால் அவன் சங்கற்பத்திற்கேற்றவாறு இவ்வுலகங்களுண்டாயினவென்பதிதன் கருத்து. ஆகவே ஆதியில் பிரும்மதேவனே வியாகிருதிகளால் பரமேசுவரனையுபாசித்தானென்றேற்பட்டது. இதன் பெருமையையே குறிக்கின்றார். இனி இதுஎன்பதாதியால் இது = இந்தவித்தை; சொல்வது = நிரூபிப்பது; பிரஜாபதியினது = உலகத்தின் சிருஷ்டாவான ஆதி மூர்த்தியினது; ஸ்தூலசரீரமே = பிரத்யட்சமாயிருக்கக்கூடிய சரீரமே; லோகமுடையது = லோகங்களைத் தன்காரியமாய்ப் பெற்றது. அப்படி என்றால் காரியகாரணங்களுடன் கூடிய மூலமூர்த்தியினது அம்சமே உலகமாம். இச்சரீரத்தின் பெருமையை உபாஸனார்த்தமாய் விரித்துக்காட்டுகின்றார் ஸுப: என்பது அதற்குத்தலை என்பதாதியால். ஸுவ: என்பது = ஸுவர்லோகமென்பது. தலைமேற்

பகுதி. நாமங்களுடன் கூடியது = பலபெயர்களமைந்தது. அதாவது மிக விரிந்ததென்பதிதன் கருத்து. அது 'ஸுவ:' என்பது = புவர்லோகமென்பது; இதனால் நடு அவயவங்கள் குறிக்கப்பட்டன. ஸூ: என்பது = பூலோகமென்பது. இது பாதாளங்களுக்கு முதலக்கணமே. அதுவே பாதங்கள் = கீழவயவங்கள். ஆயத்த புருஷனுக்கு = உலகசிருஷ்டிக்கு ஆயத்தனாயுள்ள புருஷனுக்கு. அல்லது பாதியில் சிக்குண்ட புருஷனுக்கு. நிருபாதிகனாயுள்ள புருஷனுக்கு எவ்வித அவயவங்களும் சொல்லப்படாவாகையினிங்குபாதியுள்ளவனுக்கே இவ்வுபாஸ்தி யுசிதமென்றோம். பெரியதோர் மாத்திரையான = பூர்ணமான பிரதிஷ்டையைக் கொடுக்கக்கூடியதான. கண் = நேத்திரம். இது எல்லாஞானேந்திரியங்களுக்கு முதலக்கணம். சித்திரம் பதுமை முதலியவற்றிற்கு இந்திரியங்களின்மையாலதன் சரீரம் காரியத்திற்குபயோகப்படுவதில்லை யாதலால் இச்சரீரத்தையுமிந்திரிய முடையதாகவே தியானிக்கவேண்டுமென விதித்தது. ஆதித்யன் = சூரியன். இவன் = இந்த சிரேஷ்டமான புருஷன். மாத்திரைகளை = உலகத்திற்க ணக்கூடிய பிரதிஷ்டைகளை. காண்பது = அறிந்து அதற்கேற்றவாறு நடத்துவது. கண்ணாலேயே = சூரியமுகத்தாலேயே. இனி பிரகரணஞ்சேர்ந்தமையாலிட்டிபுருஷவித்தையையுமிவ்வியாகிருதி வித்தையிலேயே யுபசங்கரிக்கின்றார். ஸத்யமே கண்ணாமென்பதாகியால். கண் = உலகக்கண்ணாகிய வாதித்தன் அல்லது பிராணிகளின் கண் அல்லது எல்லாவிந்திரியங்களும். ஸத்தியம் = ஸத்தியமாகியபிரும்மசொரூபம். எல்லாப்பொருள்களையு மறிவிப்பனயாவையே யாதலின் அவைகள் பிரும்ம சொரூபமெனக் குறிக்கப்பட்டன. புருஷனானவன் = ஆன்மாவானவன்; கண்ணிலேயிருந்தே = ஆதித்தியனாதிபுலன்கள் சாருகவுள்ள கண்ணின் வழியே; எல்லாப்பொருள்களிலேயும் விழுகின்றான் = அவற்றைக்கவர முயல்கின்றான்; ஆகவே ஆன்மா செய்யும் முயற்சி எல்லாம் இந்திரியங்களின் வழியேயன்றேற்படுகின்றது; கண்ணிலென்பது தனித்தனியே இரு கண்களிலாவது அல்லது எல்லா இந்திரியங்களிலாவது என்று பொருளுடையது; ஆகையால் = அவன் ஸர்வசொரூபனாதலால்; பூ:, புவ:, ஸுவ: என்றுபாசிக்கவேண்டும் = வியாகிருதிகளாலுபாசிக்கவேண்டும். மேற்கண்ட வியாகிருதிகள் ஜகத்காரண பூதனான பரமேசுவரனால் காரணசரீரமாக ஏற்றுக்கொள்ளப்பட்டன

யென நிரூபிக்கப்பட்டமையால் அதனுபாஸ்தி இன்றியமையாதென ஏற்பட்டது- மேற்கண்ட உபாசனையின் பயனைக்குறிக்கின்றார் அன்னமென்பதாதியால்- அன்னமே = அத்யதேத்தி ச பூதாநி தஸ்மாதந்நம் ததுச்யத இதி = புசிக்கப்படுவதும் புசிப்பதுமாதலால் அஃதன்னமெனப்படுமென்பது சுருதி வாக்கியமாதலால் இங்ஙனமென்பது பிரும்மம். உலகசொரூபமான = உலகமென்ற காரிய சொரூபமாய்த்தெரிந்த. பிரஜாபதி பிரும்மதேவன். ஆகவே போக்தா போகம் போக்கியமென்றமூன்றும் அவனேயா மென்றேற்பட்டது. உலகக்கண்ணே யாமென — உலகத்திற்கெல்லாம் அறிவாயுள்ளவனே யாமென அல்லது சூரியசொரூபனே யாமென. உபாசிக்கப்படுவான் = வெளி- இப்படியல்லவோ சொல்லுகிறார் என்றவிடத்து வேதபுருஷனென்று எழுவாயை வருவித்துக் கூட்டுக. இதுவே பிரஜாபதி = இந்தவியாகிருதிகளே தன்னை வழிபட்டார்களை = ரட்சிக்குந்தன்மையுள்ளன; இதனையே பிரஜாபதி சரீரமாய்த்தரித்தார் = உலக சிருஷ்டிக்குயோக்கியமும் உபாஸனைக்குயோக்கியமுமான சரீரமாக ஏற்றனர்; அது இத்தன்மைத்தெனக் கூறுகின்றார் இதனிடத்தே என்பதாதியால். இதனிடத்தே = இவ்வியாகிருதிகளிடத்தே எல்லாம் = உலகங்களெல்லாம்; உள்ளடங்கி இருக்கின்றன = பிரளயகாலத்தில் லயிக்கின்றன; ஆகவே எல்லாவற்றிலும் காரியப் பொருள்களின் கண்ணே இது காரணப்பொருள் உள்ளடங்கியிருக்கின்றது; அப்படி என்றால் லயகாலத்தில் காரணாவஸ்தையும் அதன் முன்னர் காரியாவஸ்தையும் தோன்றுமென்பது பொருள்; உபசங்கரிக்கின்றார் ஆதலாலென்பதாதியால்; ஆதலால் = இவ்வியாகிருதிகள் காரணபிரும்மசொரூபமாதலால்; இதனையுபாசிக்கவேண்டும் — இவ்வியாகிருதிகளை பிரணவம், ஆதித்யன், அட்சிபுருஷன், பிராணன் இவற்றுடன் அபேதமாய் ஸர்வஸ்வரூபமாய் ஆத்மஸ்வரூபமாய் வழிபடவேண்டும். என்பது = என்றது இவ்வித்தையின் கருத்து,

அவதாரிகை.

இங்ஙனம் பிரணவவித்தையையும் வியாகிருதி வித்தையையும் நிரூபித்து முதலிலெடுத்த காயத்திரீ வித்தையை இந்தவே

தாந்தவித்தையின் சிரோமணியாக்க உத்தேசித்து அதனை விளக்குவாருய் அதன் பொருளை சிலமந்திரங்களால் நிரூபிக்கின்றார்.

தத்ஸவிதுர்வரேண்யமித்யஸௌ வா ஆதித்யஸ்
ஸவிதா ஸவைவம் ப்ரவரணீய ஆத்மகாமே
நேத்யாஹுர்ப்ரஹ்மவாதிநோ(அ)த பர்கோ தே
வஸ்ய தீமஹீதி ஸவிதா வை தேவஸ்ததோ யோ(அ)ஸ்ய
பர்காக்யஸ்தம் சிந்தயாமீத்யாஹுர்ப்ரஹ்ம
வாதிநோ(அ)த தியோ யோ ந: ப்ரசோதயாதிதி
புத்தயோ வை தியஸ்தா யோ(அ)ஸ்மாகம் ப்ரசோ
தயாதித்யாஹுர்ப்ரஹ்மவாதிந: எ—று

(இ—ள்) தத்ஸவிதுர்வரேண்யமென்றால் இந்த ஆதித்யனே ஸவிதா அவனே இவ்விதமான சித்தியை அபேட்சிக்கும் ஆத்மகாமனால் (உபாசிக்கத்தக்கவன்) என்று சொல்லுகிறார்கள் பிரும்மவாதிகள். இனி "பர்கோதேவஸ்ய தீமஹி" என்றால் ஸவிதாவே இங்கே தோன்றும் பொருள்களெல்லாம் அவனுடையபர்க்கனெவனோ அவனை சிந்திக்கின்றேன் என்று சொல்லுகிறார்கள். பிரம்மவாதிகள் இனி "தியோயோந: ப்ரசோதயாத்" என்றால் புத்திகளே எமது தீகள் அவைகளை எவன் எமக்கு பிரேரணஞ்செய்வான் அவனென்று சொல்லுகிறார்கள் பிரும்மவாதிகள். எ—று

(வி—ரை) இனி காயத்திரியின் வியாக்யானம் ஒவ்வொரு பாதமாக மந்திரத்தை எடுக்கும் முறையில் (தத்) என்று தொடங்கிய முதற்பாதம் எடுக்கப்பட்டது. இந்த ஆதித்யன் என்பதாதிகள் பொருள்விளக்கம். இந்த 'ஆதித்யன் = தேஜோமண்டலமாகத்தோன்றுபவன்; அல்லது அதனந்தர்யாமியாயுள்ளவன்; ஸவிதா = சவிதாவெனப்படுவான்; கோசங்களில் ஸவிதா என்றசொல்லுக்கு சூரியனும் சிவனும் பொருளென நிரூபிக்கப்பட்டிருக்கின்றனமையால். யாதவரும் 'வைஜயந்தி நிகண்டுவில் அங்ஙனமே

நிரூபித்தமையால். அவனை = முற்குறித்த இலக்கணமுடையபெ
ருமானை; இவ்விதமான சித்தியை அபேட்சிக்கும் = பரமேசுவ
ரபிரசாதமென்ற உத்தமசித்தியை அபேட்சிக்கும்; ஆத்மகாமனால்
= பிரும்மநிஷ்டையை விரும்புவோனால். உபாசிக்கத்தக்கவனென
வருவித்துக் கூட்டுக. பிரும்மவாதிகள் = பிரும்மமென்பது வேதம்
அதனை இடையறாது அப்பியசிப்பவர்கள். அல்லது பிரும்மம் சிவன்
அவனை ஓயாது சொல்லுவோர்கள். அதாவது அவனது திவ்யநா
மங்களை கீர்த்தனஞ்செய்வார்; அல்லது அவனே ஜகத்காரணனென
பிரம்மமெனப் பிரமாணங்களால் துணிந்தோதுவார்; அல்லது பி
ரம்மத்தை வேதத்தில் குறிக்கப்பட்ட கர்மங்களைச்சொல்லுவார்;
அத்யயனஞ்செய்து அதன் வழி ஒழுகுவார். அதாவது கர்மங்க
ளைமுறைப்படி அனுஷ்டிப்பவர். ப்ரஹ்மவாதிநஸ்ஸந்த்யாயாம்
காயத்ர்யாபிமந்த்ரிதா அப ஊர்த்வம் விக்ஷிபந்தி = பிரும்ம
வாதிகள் ஸந்தியாகாலத்தில் காயத்திரியாலபிமந்திரணஞ்செய்யப்
பட்டதீர்த்தத்தைஉயரஎடுத்து விடுவார்கள்என்றுவேதமறைதலால்
இனிஇரண்டாம்பாதத்தைப்பொருள்படுத்துகின்றார். ஸவிது: என்
றுதொடங்கியதுஇரண்டாம்பாதம். ஸவிதாவே—சூரியனை அல்லதுரு
த்ரனை; இங்கேதோன்றும்பொருள்களெல்லாம் = அதாவதுபிரபஞ்
சமெல்லாம் காயத்திரீ பிராம்மணத்தில் (ஆதித்யோ வை தேஜ
ஓஜோ பலம் யஶஶ்சக்ஷு: ஶ்ரோத்ரமாத்மா மநோ ருத்ர:
ஆதித்யனே தேஜ பிரகாசம் பலம், எல்லாமன்றோஇந்தருத்திரன்
என்பதாதி வசனங்கள் காணப்படுதலால் இங்கு ஸவிதா என்றது
மண்டலபுருஷனையும் அவனுக்கதிஷ்டாதாவான ருத்திரமூர்த்தி
யுமாம். அவனுடைய = மண்டலபுருஷனுடைய (அந்தர்யாமியும
திஷ்டாதாவாயுமுள்ளபர்க்கன்மேலேநிரூபிக்கப்போகிற இலக்கண
முடைய பரமேசுவரன் அவனைச்சிந்திக்கின்றேன் = இடைய
றாதுதியானஞ்செய்கின்றேன். என்பதுஇரண்டாம் பாதப்பொருள்
என்று சொல்லுகின்றார்கள் பிரும்மவாதிகள் என்பது முன்போலவே
மூலபாடத்தில் தம் என்பதற்குப்பதிலாக கம் என்றபாடம் சிலவி
டத்திலுண்டு. அங்ஙனமானாற்சதுர்முகனதன்பொருள் பிரும்மாதி
மூர்த்திகளைக்கொண்டு உலகதந்திரத்தை நிர்வகிப்பவன் காயத்தி
ரிப்பொருளாம். இனி மூன்றாம் பாதப்பொருளுரைக்கின்றார்பிய:

என்பதாதி மூன்றாம்பாதம் புத்திகளை = உலகஅறிவுகளை எமது திகள் = தியென்றசொல்லால் காயத்திரியில் குறிக்கப்பட்டன. பிரேரணஞ்செய்வான் = கர்மங்களுக்கேற்றவாறு தோற்றச்செய்வான். அவன் ஸந்நிதியிற்றானே உலகஞ் செலுத்துமாதலால் இம்மூன்றாம்பாதம் இரண்டாம்பாதத்திற்குறிப்பிட்ட பரமேசுவரனை ச்சிறப்பிக்கின்றது என்று சொல்லுகிறார்கள். பிரும்மவாதிகள் என்பது முன்போல்.

எ-து

அவதாரணிகை

மேலே காயத்திரியின்கண் பரமரகசியமாய் அமைந்த பர்க்கன் சொரூபத்தை நிரூபிக்க எழுந்து அப்பதப்பொருளை நிரூபிக்கின்றார்.

அத² ப⁴ர்க³ இதி யோ ஹ வா அமுஷ்மிந்நாதி³த்யே நிஹித꞉
ஸ்தாரகே(அ)க்ஷிணி வைஷ ப⁴ர்கா³க்²யோ பா⁴பி⁴
ர்க³திரஸ்ய ஹீதி ப⁴ர்க³꞉ ப⁴ர்ஜயதீதி வைஷ
ப⁴ர்க³ இதி ருத்³ரோ ப்³ரஹ்மவாதி³ந꞉ ॥ இதி ॥

அத² ப⁴ இதி பா⁴ஸயதீமாந் லோகாந் ர இதி
ரஞ்ஜயதீமாநி பூ⁴தாநி க³ இதி க³ச்ச²ந்த்யஸ்மி
ந்நாக³ச்ச²ந்த்யஸ்மாதி³மா꞉ ப்ரஜாஸ்தஸ்மாத்³ப⁴ரக³த்வாத்³ப⁴ர்க³꞉ ॥ என்று

(இ...ள்) இனி பர்க்கனென்பவன் இனிஎவன் இந்த ஆதித்யனிடத்தும் இந்த தாரகத்தில் நேத்திரத்திலுமுள்ளவன் பர்க்கனென்ற பெயருடையவன் பா என்கிற பிரகாசத்தால் இவனுக்கு கெதி இருந்தலால் பர்க்கனென்றும் பர்ச்சனம் (வெதுப்புவது) செய்தலால் இவன் பர்க்கன் ருத்திரன் என்றார் பிரும்மவாதிகள். என்பதும்.

இனி பர்க்கனென்றது இந்த லோகங்களை விளங்கச் செய்வதாலும் இந்த பூதங்களை விரும்பத் தக்கதாகச் செய்வதாலும் இந்த பிரஜைகள் அடைகிற பரமேசுவர

னிடத்து அவை போகின்றன. அவனிடத்திருந்தே வருகின்றன ஆகையாலும் பர்க்கனாதலால் பர்க்கனென்னப்பட்டானென்றும். ௭—து

(வி—ரை) இனி பர்க்கனென்பவன் = பர்க்கனென்ற சொல்லுக்குப் பொருளுரைப்பதாக இப்பிரகரணந் தொடங்கப்படுகின்றதென்பது பொருள்; இனிஎவன் = ஸர்வவேத வேதாந்தங்களிலும் பிரஸித்தனாயவன்; இந்த ஆதித்யனிடத்தும் = யாம்கண்கூடாகக்காணு மாதித்யமண்டலத்தினிடத்தும் அதனதிஷ்டாதாவாகிய மண்டலபுருஷனிடத்தும். இந்தத்தாரகத்தின் நேத்திரத்திலும் = இதனைப்பிரித்துப்புரட்டி நேத்திரத்தில் தாரகத்திலுமெனக்கூட்டுக; நேத்திரத்தில் = கண்ணில் தாரகத்திலும் = கருவிழியிலும்; உள்ளவன் = உபாசகர்களுக்குச் சன்னிதானஞ்செய்பவன்; இவ்விருவிசேஷணங்களால் அந்தராதித்தவித்தை அட்சிவித்தை இவை பரமேசுவரபரமே என நிரூபிக்கப்பட்டன. இவ்வாதித்தனிடத்தும் கருவிழியிடத்தும் உபாசிக்கப்பாலவனென்ன நிரூபிக்கப்பட்ட பரமபுருஷனே காயத்திரீ மகாமந்திரத்தின்கண் பர்க்கனெனக் குறிக்கப் பட்டானென்று ஏற்படுதலா லச்சொல்லுக்குள்ள இடுகுறிப் பொருள் குறிக்கப்பட்டதேயன்றி காரணப்பொருள் குறிக்கப்படாமையின் அக்காரணப்பொருளையும் மேலே (ஹா) என்பதாதி வாக்கியத்தால் குறிப்பாராய் இப்பிரகரணத்தை முன்னருபசங்கரிக்கின்றார் பர்க்கனெனப்பெயருடையவன் என்பதால். பெயருடையவனென்றெடுத்தமையால் இவனுக்கு அச்சொல் இடுகுறி என்றதாயிற்று. பரமேசுவரனுக்குரிய எண்மூர்த்திகளில் ஆதித்தனொருமூர்த்தியென பலவிடங்களில் நிரூபிக்கப்பட்டமையாலும் காயத்திரியின் பொருளை விரிக்க எழுந்த பிரகரணத்தில் தைத்திரீயசங்கிதைஉமாபதியென்றும் பசுபதியென்றும் சூரியமண்டலத்தினந்தர்யாமியைக் குறித்தமையாலு மிஃதொவ்வுமென்க. இனி அதன்காரணப் பொருளையும் குறிக்கின்றார் ஹா என்பதாதியால். ஹா என்பது பிரகாசத்திற்குப்பெயர் அதனால் இவனுக்கு கெதி இருத்தலால் = இவனறியப்படுதலால் அதாவது பரமேசுவரனை அவனது பிரகாசமாகிய உலகசிருஷ்டி முதலியதைக்கொண்டறியவேண்டுமாதலால் ஹா என்பது பிரகாசத்தைக் குறிக்க, ம என்பது அறியப்படும் பொருளையுணர்த்த ஹா + ம =

ஸாம என்றாகவேண்டிய சொல் (வ்யோஷாதூராதி) ப்ருஷோதராதி என்றதொகைச்சொல்விசேடவிலக்கணம்பற்றி முதமொழியீற்று நெடில் குறிலாயும் இடையே ஓர்ரகரம் தோன்றவும்பெறுதலால் (பர்க்க) என்ற சொல்லுண்டாயிற்று இனி வேறுபொருளையுங்குறிக்கிறார் பர்ச்சனஞ்செய்வதாலென்று. பர்ச்சனம்= வெதுப்புவது. சங்காரஞ்செய்வது அல்லது மலபரிபாகஞ்செய்விப்பது அல்லது பிராணரூபனாயிருந்து மக்கள் புசிக்கும் ஆகாரத்தை பாகஞ்செய்விப்பது; செய்தலால்=மேற்கண்ட தொழில்களை நடத்தலால்; இவன் பர்க்கன் ருத்திரன் = இந்தருத்திரன் பர்க்கனெனப்படுவான்; என்றார் பிரும்மவாதிகள் = வேதங்களை முற்றும் கற்றுணர்ந்தோர் இப்பொருளைத் துணிந்தோதினர்; வேதங்களையறிந்தோர் இப்பொருளைத் துணிந்தாரென்பதனால் வேதங்களறியாதார் இவ்வுண்மைதெளிய மாட்டாரெனவும் அவர் லௌகிக நியாயங்களைக்கொண்டு இடர்படுவாரெனவும் ஏற்பட்டது. இவ்வண்ணமே ஓர் வைஷ்ணவர் பிரும்மவாதிகள் என்ற முதல்வேற்றுமைப்பன்மையை விளிவேற்றுமைப்பன்மையாகக் கொண்டு சொல்லுகிறார்கள் என்ற விடத்துள்ளபன்மையை வேதத்திலுள்ள விலக்குவிதிக்கு இலக்காய் ஒருமையாகக் கொண்டு அதற்கெழுவாயாக ருத்திரனென்ற சொல்லைக்கூட்டி பிரும்மவாதிகளை விளித்து ருத்திரன் இங்ஙனம் சொன்னார் எனப்பொருள் முடித்து இந்தச் சுருதியால் ருத்திரன் பர்க்கனென்ற சொல்லுக்குப்பொருளாய் ஏற்படவில்லை யெனச்சித்தாந்தம் நாட்டினர். அவர் கொண்டகருத்தின்படி காயத்திரியின் கண்ணே அமைந்த பர்க்க என்றசொல் அகர வீற்றுச்சொல்லன்றாதலால் ஸகர வீற்றுச் சொல்லே ஆகவேண்டும். இங்கு அகரவீற்றுச் சொல்லாயெடுத்து அதன்மேல் ஆங்கியா என்ற சொல்லைச்சேர்த்து ஸவர்ணதீர்க்கசந்தி செய்துகாட்டியிருத்தலானும் காரண இடுகுறி யாற்றல்களைக்குறிக்க இப்பிரகரணம் எழுந்தமையானும் ஸகரவீற்றுச்சொல்லாய்க் கொள்ளின் வைணவர் கூறிய விண்டுவிடத்து அச்சொல்லுக்கு இடுகுறி எவ்வாற்றானுமமையாமையானும் வீண்பாடுபட்டு விபரீத விலக்கணத்திற்கு அச்சொல்லை யிலக்கியமாக்கியதுவலமே என்று வேறிடத்து விளக்கி இருக்கின்றோம். இதன் விரிவை மந்திர ராஜமார்த்தாண்டத்திலும் அதனுரையிலும் காயத்திரீவித்

ஷ்தையிலும் அதனுரையிலுங்காண்க. இனி பிரும்மவாதிகளுக்கே சம்மதமான வேறு பொருளையும் அடுத்த மந்திரத்தால் நிரூபிக்கிறார். இனி பர்க்கனென்றது=பர்க்கனென்ற சொல்லுக்கு வேறு வழியில்பொருள் செய்யுமிடத்து. இந்த லோகங்களைவிளங்கச்செய்வதாலும்=அப்பிரகாசங்களாயுள்ள உலகங்கள் சுவப்பிரகாசனாகிய அனைது பிரகாசத்தாற்றானே பிரகாசிக்கின்றமையால்; இந்த பூதங்களை விரும்பத்தக்கதாகச் செய்வதாலும்=இவ்வுலகத்தெல்லாம் ஆக்மவஸ்து ஒன்றே விரும்பத்தக்கதாதலால் அதன் சம்பந்தத்தாலேயே உலகம் விரும்பப்படுமென்பதிதன் கருத்து. மேல் வேறு பொருளையுங்குறிக்கின்றார் இந்தப்பிரஜைகள் என்பதாதியால். இந்தப்பிரஜைகள்=யாம்காணும் பிரபஞ்சங்கள், அடைகிற=ஒடுங்குகிற (இடமான) பரமேசுவரனிடத்து அவைபோகின்றன=பரமேசுவர ரூபமான அதிட்டானத்தில் நிலைபெறுகின்றன; அவனிடத்திருந்தே வருகின்றன=அவனிடமிருந்தே தோன்றுகின்றன; ஆகையாலும்=இங்குபசங்காரமுறையில் குறிக்கப்பட்ட ஒடுக்கம், திதி, உற்பத்தி இவை அவன்பாற்பட்டதாதலால்; பர்க்கனெனப்பட்டான்=இது உபசங்காரம் (ப) என்பது பிரகாசங் கொடுப்பவனென்றும் (ர) என்பது விரும்பச்செய்பவனென்றும் (க) என்பது இடமாயுள்ளானென்றுந் தனித்தனியே பொருள் கொடுக்க பரகவென்றாகவேண்டியது பர்க்கவென்றாயதென்பதிதன் கருத்து. எ—று

அவதாரணிகை

இனி மேற்கண்ட பரமேசுவரனையுபாசிக்கும் ஸ்தானமாகிய சூரியனை நிரூபிப்பாராய் சூரியன் ஸவிதாவென்ற சொற்களுக்குப்பொருள் குறிக்கிறார்.

> ஶத்ருஸம்ஹரணாத் ஸூர்ய: ஸவநாத்
> விதாவாயநாத்வாந: யாயொ யாயநாஶ்
> ஶ்ரீத்ர் ஐதைத்ர்யம்ஹார்ஹ ‖ எ—று

(இ...ள்-) சத்துருக்களைச் சங்கரிப்பதால் சூரியனென்றும் எக்கர்மத்துக்கு முந்திரவு கொடுப்பதால் ஸவி

தாவென்றும் எதனையும் ஆதானஞ் செய்வதாலாதித்யனென்றும் பாவனம் செய்வதால் பவமானனென்றும் ரக்ஷணம் செய்வதால் தாயனென்று மாதித்யன் சொல்லப்படுவானென்று சொல்லுகிறுர். எ—து

(வி—ரை.) சத்ருக்களை = பாவங்களை. 'வொவூ நாஹா தூவெஹ்ண' பாபமென்ற சத்ருவால் என்று வேதங்கூறிற்றதலால். சங்கரிப்பதால் = நிவிருத்திசெய்வதால் விசேஷமாய் ஸூரியோபாஸனைசெய்பவர்களுக்கு பகற்செய்தபாபம் ஸாயங்கால ஸந்தியாவந்தனத்தினுலும் இரவிற் செய்த பாபம் காலைச்சந்தியாவந்தனத்தாலும் தொலையுமென்பது சாஸ்திர சம்மதமாதலால். ஸூரியன் = (ஸூ) என்பது ஹிம்ஸையைக்குறிக்கும் வினைப்பகுதியாதலால் அதன்மேல் எழுவாய் விகுதியாகிய (ய) என்பதைச்சேர்த்தால் ஸூய என்றாகவேண்டியது. அது விசேஷவிலக்கணம் பற்றி பகுதி விகுதிகளுக்கிடையே ஓர் ரகரம் தோன்ற ஸூரிய என்றாயிற்று. எக்கருமத்துக்கு முத்திரவு சொரிப்பதால் = கருமங்களுக்குத்திரவென்பது ஒவ்வொரு கன்மங்களினுமுயிர்கள் முயலும்படி பிரேரிப்பதே; 'தெவஸ்ஹ ஸவிதுஃ ஸவெ, தெவஸ்ய ஸவிதுஃ ஸவெ க3-ஃணா' தியெயஸம் தேவனுகிய சவிதாவினது உத்திரவின்படி, தேவனுகிய சவிதாவின் உத்திரவின்படி ஒருவிடி செய்பவர்களுங் கர்மாக்களைச் செய்வார்கள். என்பதாதி பல வேதங்களில் கன்மங்களில் பிரவிர்த்திக்கும்படி செய்பவன் சவிதாவெனப்பட்டமையால். சவிதா = ஷூ = ஸூ என்றவினைப்பகுதி உத்திரவுகொடுக்குந்தொழிலைக்குறிப்பதாதலால் அதன்மேல்வினைமுதற்குறியீடாகிய (திரு) என்ற விகுதியேற்ற இடையே ஓரிகரம் தோன்ற பகுதியிற்றுகரம் ஒகாரமாய் மீண்டும் உயிருடன் சந்திக்கும்பொழுது ஔவெனத்திரிய சவிதாவென்று சொல்லேற்பட்டது. எதனையும் ஆதானம் செய்வதால் = எல்லாவுயிர்களையும் தன்மயப்படுத்தி அவற்றினுயுளை அளவிட்டொழிப்பதால்; ஸூரியனை தன்து உதயாஸ்தமயங்களால் எல்லாவுயிரின் ஆயுளையும் அளந்திடுவதாக (யொவெஷ உவைஹ-ெதி ஸஷெவஃ ஷாஂஹூதா நாஂ ஹாணா நாஜா யொவெதி | ஊவெஷ

